# 1

ஒன்று, இரண்டு, மூன்று... இருபது

நிமிர நிமிரக் கட்டடத்தின் மாடிகள் கணக்கில்லாமல் மேல் சென்று மேகத்தை விரும்பின.

பர்ஸ்பெக்டிவ் அவசரத்தில் சுருங்கி, பெங்களூரின் நீல வானத்தைக் குத்திப் பார்க்கும் கான்க்ரீட் சாக்லேட். ஆயிரம் கண்ணாடி ஜன்னல்களில் சிர்ரஸ் மேகத் தீற்றல்கள்.

விக்ரம் கைக்கெடிகாரத்தைப் பார்த்துக் கவலைப்பட்டான். ஹெட் ஆபீஸில் முதல் நாள் பொறுப்பு எடுத்துக் கொள்ளும்போது தாமதமாக வருவது சரியல்ல. என்ன செய்வது? மோசமான பஸ் சிஸ்டம். அவன் விரும்பின ரூட் நம்பர் அதன் அகராதியிலேயே இல்லை. ஆட்டோ என்பது அதிர்ஷ்டத்தின் உச்சத்தில் இருப்பவர்களுக்குத்தான் கிடைக்கும் போலிருந்தது. நடப்பது சாத்தியமில்லை. தவித்தான். ஏதோ பஸ் பிடித்து, நடுவே இறங்கி, மற்றொரு பஸ் மாறி, வழி விசாரித்து... பத்து பதினைந்தாகி விட்டது.

வாசலின் படிப்படியான வரவேற்பு. அத்தனை பெரிய கம்பெனிக்கு அலட்டலே இல்லாத பித்தளை போர்டு மிதியடியில் 'ஆர்.கே.'. நாட்டின் முதல் தரமான தனியார் துறை நிறுவனங்களில் தலைசிறந்த 'ஆர்கே'. விக்ரம் பெருமையால் மலர்ந்தான். இளமையின் வாசல். உத்தியோகத்தின் முதல் படி.

எதிர்காலம் டிசம்பர் தினத்தின் பிரகாசம் பட்ட தங்க ராஜ்யமாக வரவேற்றது!

ஒரே ஒரு களங்கத்தைத் தவிர...

சே! அதைப் பற்றி இப்போது ஏன்? கண்ணாடி வாசல் தானாகத் திறந்துகொள்ள, துடிப்புடன் உள்ளே நுழைந்தான்.

வரவேற்பில் இருந்த பெண்ணின் முகத்தில் இரண்டு மணி நேர அலங்காரம் தெரிந்தது.

'எஸ் ப்ளீஸ்!'

'என் பெயர் விக்ரம்.' மாற்றல் ஆர்டரைக் காட்டினான்.

அவள் அதைப் பார்க்காமல் 'வெல்கம்' என்று சிரித்து, 'உங்களுக்காக மிஸ்டர் விட்டல் காத்திருக்கிறார். ரூம் நம்பர் 308, மூன்றாவது மாடி. லிஃப்ட் உபயோகியுங்கள்.' அவனிடம் கடிதத்தைத் திரும்பிக் கொடுக்கும்போது அவள் கண்கள் ஒரு கணம் அவன் மேல் அதிகப்படியாகத் தங்கின.

லிஃப்டில் மெலிதாக பாப் கேட்டது. எதிரே கண்ணாடியில் மறுபடி விக்ரம்.

தலையைச் சற்று தள்ளிக்கொண்டான். புருவத்தை அழுத்திக் கொண்டான். சிரித்துப் பார்த்து ஒழுங்கான பல் வரிசையை நிச்சயித்துக்கொண்டான். விக்ரம் விக்ரமைப் பார்த்துக் கண்ணடித்தான்.

ஐஸ்க்ரீம் வர்ணக் கார்பெட்டின்மேல் நடந்தான். 308-ல் கதவைத் தட்டினான்.

'எண்டர்.'

'குட்மார்னிங் சார்!' சொல்லலாமா வேண்டாமா?

'மார்னிங்! யு மஸ்ட் பி விக்ரம்!'

'எஸ் மிஸ்டர் விட்டல்!'

'மிஸ்டர் வேண்டாம். வெறும் விட்டல். கொஞ்சம் பழகினதும் 'விட்ஸ்!' ஏன் பத்து நிமிஷம் லேட்?'

'பஸ் கிடைக்கலை, ஆட்டோ...'



'எக்ஸ்க்யூஸஸ்! பஸ்கள் கிடைக்கப்படாமல் இருக்கவே ஏற்பட்டவை. காரணங்கள் முக்கியமானவை. இந்த ஆபீஸில் லேட்டாக வருவது மற்றவன் பெண்டாட்டியுடன் படுப்பதைவிடப் பெரிய பாவம்! இன்னொரு முறை லேட்டாக வராதே. வேலை போய் விடும்!'

'ஸாரி...'

'மற்றொரு கெட்ட வார்த்தை. வா, உன் ஆபீஸைக் காட்டுகிறேன். ரூம் 306. உன் ஸ்டாஃப்புடன் அறிமுகம் செய்து வைக்கிறேன்' என்று சொல்லி இண்டர்காமைத் தட்டி, 'லீலா, நான் பத்து நிமிஷம் 306 போகிறேன். டெலிபோன் வந்தால் வாங்கி வை. சேர்மன் கூப்பிட்டால் உடனே ஓடி வந்து சொல்லு.'

'எஸ் மிஸ்டர் விட்டல்!' என்ற குரலில் சற்றே செக்ஸ் இருந்தது.

விக்ரம் அவருடன் தயங்கி நடந்தான். 'அவர்' என்றுதான் சொல்லவேண்டும். நாற்பது வயதிருக்கும். அதை ஒப்புக் கொள்ளாத சட்டை, ஜீன்ஸ், தலை வாரல், நடை, உதட்டில் சீட்டி.

'உனக்கு எத்தனை வயசு?'

'இருபத்தி நாலு.'

'கல்யாணம்?'

'இல்லை.'

'டோண்ட்!'

306! கூட்டிப் பார்த்தால் ஒன்பது வருகிறது. அவனுடைய அதிர்ஷ்ட எண். அறையைத் திறந்து, 'அது உன் மேஜை. இது நாற்காலி, அப்புறம் இது...' - பக்கத்து அறையை நோக்கும் கண்ணாடியைத் திறந்து, 'உன் ஆபீஸ் மனைவி, மைத்ரேயி!'

திடுக்கிட்டு அந்தப் பெண் எழுந்தாள்.

'மைட்! இதுதான் உன் புது பாஸ்!'

அவளுக்கு முப்பது இருக்கலாம். விக்ரமை சற்று சந்தேகம், சற்று ஆச்சரியத்துடன் பார்த்து, 'நமஸ்காரம்' என்றாள்.

'நமஸ்காரம், இந்த ஆளு தமிழ் இல்லையா?'

'ஆமாம்...'

'மைத்ரேயி தமிழ் பேசுவா, கிராமர்தான் கொஞ்சம் உதைக்கும்!'

அவள் நெற்றி வகிட்டில் குங்குமம் இருந்தது. மேலுதட்டில் வியர்வை இருந்தது. பூனைக் கண்கள். ஹெப்பார் அய்யங்காராக இருக்கவேண்டும். ஸ்லீவ்லஸ் அணிந்திருந்தாள். மார்பை மறைக்க அதிகம் முயற்சி செய்வதாகப் படவில்லை.

'அப்புறம் இவளை நிதானமாக விசாரிச்சுக்கலாம்' என்று மற்றொரு கதவைத் திறந்தவுடன், தெளிந்த நவீன அலுவலகத்தை ஒரு கை வீச்சில், 'இதான் உன் டிபார்ட்மெண்ட். மாமா உக்காண்டிருக்காரே ஈஸ்வரன் - சூப்ரண்ட் புலி. 36 வருஷ சர்வீஸ்! அவரை எடுத்துக்காதே. கொஞ்சம் இடக்காப் பேசுவார்... ஈஷ் மாமா, இதான் அந்த விக்ரம்!'

அவர் ஒருமுறை நிமிர்ந்து அவனைப் பார்த்துவிட்டுத் தம் லெட்ஜரில் ஆழ்ந்தார். 'அப்புறம் ஓரத்தில் தெரியறாளே நீல ஸாரி. அவ சத்யவதி. கம்ப்யூட்டர் ஆப்பரேட்டர். நம்ம ரெண்டு பேருக்கும் அவ பப்பாதி. ரொம்பப் பொய் சொல்வா. ஜாக்கிரதையா இரு அவளோட! மத்த பேர் எல்லாம் அப்பிராணிகள். குடுத்த வேலையைச் செய்வாங்க. அவாய்ட் தி கர்ள்ஸ் லைக் பாய்ஸன். உனக்குப் பொண்ணு வேணும்னா எங்கிட்ட சொல்லு. அட்ரஸ் தரேன். ஆபீஸ்ல கை வைக்காதே. குட் பை! நான் சேர்மனைப பார்க்கணும்!'

'சார்! சார்!'

'பாத்தியா? சார் வேணான்னு சொன்னேனில்ல? கால் மி விட்டல். நீ என்னதான் சின்னப் பையனாக இருந்தாலும் நானும் நீயும் ஒரே ராங்க்தான். இந்த மாதிரி பச்சாக்களை மேனேஜ்மெண்ட் காடர்ல போஸ்ட் பண்றதைப் பத்தி எனக்குத் தனிப்பட்ட அபிப்பிராயம் இருக்கும். ஆபீஸுக்கு வெளில வா, சொல்றேன். என்ன கேட்க வந்தே?'

'என் ட்யூட்டி என்னன்னு சொல்லலியே!'

'இன்னிக்கு ஒரு நாள் பஜனை! அதாவது மற்ற டிபார்ட்மெண்டுகள், கம்ப்யூட்டர் ரூம் எல்லாத்தையும் சுத்திப் பாரு... நாளையில



இருந்து வேலை. ஃபீல்டு யூனிட்ஸ், டெக்ஸ்டைல் டிவிஷன் ரெண்டும் உனக்கு அல்லாட் ஆயிருக்கு.'

'என் பாஸ் யாரு?'

'பாம்பே போயிருக்கான். நாளைக்கு வருவான். அசோக் குமார். பெங்காலி. எம்.பி.ஏ. உன்னைவிட ரெண்டு மூணு வயசு அதிகமாக இருப்பான்.'

'ஆள் எப்படி?'

'சஸ்பென்ஸ்! நீயே பாத்துக்கயேன். வரட்டுமா?'

விட்டல் சென்றதும் சற்று நேரம் அங்கேயே நின்றான். அத்தனை பேரும் அவனைத் திருட்டுத்தனமாகப் பார்த்து உடனே தத்தம் வேலையில் ஆழ்ந்தார்கள். யோசித்தான். முதலில் அந்த ஈஸ்வரனிடம் ஆரம்பித்து ஒவ்வொருவரிடமும் சென்று தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டு கை குலுக்கினான். முப்பது பேர் இருந்தார்கள். ராஜகோபால், மேடப்பா, அனந்த நாராயணன், ஜார்ஜ்... எல்லாப் பெயர்களையும் ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டும். பெயர்கள் முக்கியம். அவர்கள் எல்லாரிடமும் ஒரு தயக்கம் இருந்தது. பெரும்பாலானவர்கள் அவனைவிட அதிக வயதினர். அவர்களுக்கெல்லாம் மேல் அவனைப்போல இளைஞனைக் கொண்டுவந்தால் ஆரம்ப விரோதம் இருக்கத்தான் இருக்கும். சமாளிக்கலாம். மெல்லச் சமாளிக்கலாம்...

தன் 'அதிர்ஷ்ட' அறைக்குத் திரும்பினான்.

பச்சைத் திரைகளை விலக்கி, பங்களூரை மாதிரி பார்த்தான்; வெகு தூரத்தில் இன்னும் இரண்டு நெட்டைக் கட்டடங்கள் தெரிந்தன. விதான் சௌதாவின் உச்சந்தலை திரிசங்கம் தெரிந்தது. மௌனமாக கார்ப் பூச்சிகள் ஊர்ந்து கொண்டிருந்தன.

'எக்ஸ்க்யூஸ் மி!'

திரும்பினான். அந்த மைத்ரேயி!

'இதுல கொஞ்சம் கையெழுத்து போடறீங்களா?'

'ஷ்யூர்! இது என்ன?'

'ஓவர் டைம் ஸ்லிப்.'

'யாருக்கு?'

'எனக்குத்தான்!'

'எதுக்கு ஓவர் டைம்?'

'நிறைய டைப்பிங் ஒர்க் இருக்கு. ஸ்டேட்மெண்ட் அடிக்கணும். ஈஸ்வரன் சார் கொடுத்தார்.'

'அப்ப அவரே கையெழுத்து போடலாமே?'

'நீங்க வந்தாச்சே. அவருக்கு இனிமே அத்தாரிட்டி கிடையாது.'

'ஸாரி. நான் புதுசு. இன்னிக்குத்தான் இந்த ஆபீஸுக்கு வந்திருக்கேன். விஷயம் என்னன்னு தெரியாம ப்ளைண்டாக் கையெழுத்துப் போட விரும்பலை.'

'அப்ப இன்னிக்கு 'ஓட்டி' வேண்டாமா?'

'நான் கையெழுத்து போட்டுத்தான் நடக்கணும்னா வேண்டாம்.'

'இட்ஸ் ஆல்ரைட்! எனக்கென்ன. நான் ஈஸ்வரன் சார் கிட்டச் சொல்லிடறேன்' என்று அவள் சென்ற விருட்டில் சற்று நேரத்தில் அவன் ஈஸ்வரனை எதிர்பார்த்தான். நினைத்தபடி அவர் ஐந்தே நிமிஷத்தில் கதவைச் சற்று கோபத்துடன் திறந்து உள்ளே வந்தார். 'ஓவர் டைம் கூடாதுன்னுட்டிங்களாமே!'

'ஆமாம்!'

'ஏன்?'

'விஷயம் தெரியாம எந்தக் காகிதத்திலயும் நான் கையெழுத்து போட மாட்டேன்.'

'அந்த ஸ்டேட்மெண்ட் போயாகணுமே, ஸ்வாமி!'

'நீங்களே கையெழுத்து போடுங்களேன்!'

'எனக்கு பவர் இல்லையே! இந்த ஆபீஸில் புதுசா வந்தவங்களை மேனேஜ்மெண்ட் நம்பறது... முப்பது வருஷ சர்வீஸ்காரனை நம்பறதில்லை. வாம்மா மைத்ரேயி! நான் விட்டல்கிட்ட கையெழுத்து வாங்கிக்கறேன். அவன் சந்தேகப் பிராணி இல்லே!'



அவர் செல்வதற்குமுன், 'மிஸ்டர் ஈஸ்வரன், ஒரு நிமிஷம்' என்றான்.

'என்ன?'

'ரூமுக்குள்ள நுழையறதுக்கு முன்னால் கதவைத் தட்டிட்டு நுழைஞ்சா நல்லது.'

அவர் அவனைச் சற்று நேரம் தீர்க்கமாகப் பார்த்தார். 'அப்படியா சேதி... இன்றைக்குத்தான் முதன் முதல் மாற்றலாகி, போஸ்டிங் ஆகி, ப்ரொபேஷன் முடிந்த சேர்ந்திருக்கும் பயல், இந்த ஆட்டம் ஆடப் போகிறாயா?' என்றது பார்வை.

அவருக்கு ஐம்பத்து ஐந்து வயதிருக்கும். பட்டையான முகமும் பிசிறான காதோர அடர்த்தித் தலைமயிருமாக இருந்தார். உதட்டில் வெற்றிலைக் காவி தெரிந்தது. மைசூர்க்காரர்கள் போல வேஷ்டியை பெல்ட்டால் இறுக்கி, கோட்டு அணிந்திருந்தார். பார்த்தாலே அடுக்கடுக்காக கந்தர் அலங்காரம், தேவாரம் இந்த மாதிரி விஷயங்கள் ஞாபகம் வரும் என்று தோன்றியது. அவர் சென்றதும் விக்ரம் மேஜை மேல் உட்கார்ந்து அந்தத் தப்பான ஆரம்பத்தை யோசித்தான். கையெழுத்து போட்டிருக்கலாம். இந்தக் கேள்விகளை எல்லாம் வேலை பழகியதும் வைத்துக்கொண்டிருக்கலாம்! சே. அந்த மனிதரைப் பார்த்தால் நல்லவர் போலத்தான் தெரிகிறது.

சமயம் வரும்போது சமாதானம் செய்துகொள்ளலாம்.

தன் நாற்காலியில் உட்கார்ந்து பார்த்தான். ஒரு முறை சுற்றினான். எதிரே அலமாரிகளை ஆராய்ந்தான். 'ஆர். கே. எண்டர்பிரைஸஸ்' வருஷாந்திர அறிக்கை - அழகாக அச்சிடப்பட்ட பிரதிகள் இருந்தன. புரட்டினான். டர்ன் ஓவர் முன்னூறு கோடி. உற்பத்திப் பொருள்களின் எண்ணிக்கை 30. டாய்லெட் சாதனங்களிலிருந்து, சோப்பிலிருந்து, பற்பசையில் இருந்து, டெக்ஸ்டைல்ஸ், பால்கட்டி, ஃபார்மசூட்டிக்கல், பிளேடு, பூச்சி மருந்து, டெலிவிஷன், கால்குலேட்டர், எலக்ட்ரானிக்ஸ் சாதனங்கள், அப்புறம் ஏஜன்ஸிகள்! எத்தனை பொருள்கள்! எல்லாவற்றுக்கும் காரணகர்த்தரான ராதாகிருஷ்ணனின் புகைப்படம் முன் பக்கத்தில் இருந்தது. விக்ரம் சற்று நேரம் அந்த ஆச்சரியமான மனிதரைப் பார்த்தான். படத்தில் ரொம்ப சாதுவாகத் தோன்றினார். இவரா இந்தப் பிரம்மாண்டமான

தொழில் வீட்டை அமைத்தவர்? இவரா முப்பத்து ஐந்து வருஷத்துக்கு முன், இந்த நகரத்தில், கையில் எட்டணாக் காசுடன் நுழைந்தார்? இவரா படிப்படியாக முன்னேறி, இந்த ஆச்சர்ய ராஜ்யத்தை அமைத்து அதன் உச்சியில், சேர்மன் கம் மேனேஜிங் டைரக்டராக உட்கார்ந்திருக்கிறார்?

ஆர் கே தி கிரேட்!

திகீர் என்றது அவனுக்கு. 'ஆர்.கே' இந்தக் கட்டடத்தில் இப்போது வீற்றிருக்கிறார். இதே கட்டட மாடியில் எங்கே? எந்த அறையில் இருப்பார்? இப்போது என்ன செய்து கொண்டிருப் பார்? அவரைப் பார்க்க முடியுமா? நேரில் பார்க்க அவர் எப்படி இருப்பார்?

விக்ரம் தன் மேஜைமேல் இருந்த உள்தொடர்பு டெலிபோன் களின் எண்கள் அடங்கிய டைரக்டரியைப் புரட்டினான். முதல் பக்கத்திலேயே இருந்தது. அந்த நம்பர் 101. எதிரே டெலி போனைப் பார்த்தான். எடுத்தான். என்ன ஒரு அசட்டுத் தைரியம்? அவருக்கு நான் டெலிபோன் செய்வதாவது? அவர் எங்கே, நான் எங்கே? அவர் ராஜ்யாதிகாரி. நான் நுழைவாசலில் இருக்கும் ஒரு ஆரம்பன். இருந்தும் அந்த போட்டோ முகத்தைப் பார்த்தால் அவரை அணுக முடியும் என்ற நம்பிக்கை இருந்தது. பார்க்கலாம் 1...0...1.

எதிர்மனை கிர்ரிங்கியது. விக்ரமின் விரல்கள் லேசாக நடுங்க ஆரம்பித்தன. அவர் எடுக்க மாட்டார். பி.ஏ.தான் எடுப்பாள்.

'எஸ்.'

பெண் குரல்! நல்ல வேளை. அவரில்லை. வைத்து விடலாமா?

'எஸ்? ஹூ இஸ் இட்?'

'இஸ் தட் தி எம்.டி'ஸ் நம்பர்?'

'எஸ்!'

'அவருடன் பேச முடியுமா?'

'கேட்பது யார்?'



'மேடம்! என் பெயர் விக்ரம். நான் புதிதாகப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கும் ஆபீஸர். அவருடன் பேச விரும்புகிறேன்.'

'முடியவே முடியாது' என்று சொல்லி வைத்து விடுவாள் என்று எதிர்பார்த்தான். மாறாக, 'ஒரு நிமிஷம்! ஃப்ரீயாக இருக்கிறாரா பார்க்கிறேன்; லைனில் இருங்கள்' என்றாள்.

டெலிபோன் சற்று நேரம் மௌனமாயிற்று. விக்ரம் மனசுக்குள் 'சட் சட்' என்று வாக்கியங்களை ஒத்திகை பார்த்துக் கொண்டான்.

டெலிபோன் மறபடி உயிர் பெற்றது.

'ஆர்கே!'

'குட்மார்னிங் சார்? என் பெயர்...'

'அதெல்லாம் தெரியும். விஷயம் என்ன சொல்லு?'

அவர்தான்! அவர்தான்! ஆர்கே தி கிரேட்! ஆர்.கே குரலில்தான் எத்தனை அழுத்தம், எத்தனை ஆழம்!

'எனக்கு... எனக்கு உங்களை வந்து சந்திக்க விருப்பம் சார்!'

'எதற்கு?'

'இந்தக் கம்பெனியின் ஆரம்ப வாசலில் இருக்கிறவன் சார் நான்... அதை உருவாக்கி அமைத்த முதல் மனிதரை, தலை வரைப் பார்க்க எனக்கு விருப்பம், சார்!'

'ஏன்?'

'நீங்க எப்படி இருக்கிங்கன்னு பார்க்கணும்போல இருக்கு.'

குரலில் சிரிப்புடன், '11.30க்கு வா' என்றார்.

'தாங்க்ஸ் சார்!' என்று சொன்னது அவருக்குக் கேட்டிருக்காது. அதற்குள் வைத்து விட்டார். விக்ரம் தனக்குள் சிரித்துக் கொண்டான். கை விரல்களைச் சொடுக்கிக் கொண்டான். நினைத்தான். செய்து விட்டான். எப்போதுமே அப்படித்தான். வேலையில்லா சமுத்திரத்தில் ஒரு ஸ்திர நாற்காலியில் வந்து உட்கார்ந்தாகி விட்டது. புதிய மெத்தென்று எக்ஸிக்யூட்டிவ்! மாதம் 18,000. என்ன ஒரு பிரகாசமான ஆரம்பம்.

நாற்காலியில் ஒரே ஒரு முள் இருக்கிறது.

அவனுள் கவலையின் ஜிலீர் ஒன்று பிரவகித்தது. எச்சில் விழுங்கிக் கொண்டான். 'கவலையேபடாதே! யார் கண்டு பிடிக்கப் போகிறார்கள்?'

அம்மாவின் கடிதத்தை எடுத்து மறுபடி படித்தான்.

'இப்பவும் நானும் பத்துவும் சௌக்கியம். நீ சௌக்கியமாய்ப் போய்ச் சேர்ந்து புதிய வேலையை ஏற்றுக்கொண்டு இருப்பாய் என்று நினைக்கிறேன். அடுத்த மாதத்தில் இருந்து நூறு ரூபாய் அதிகம் அனுப்புவாய் என்று நினைக்கிறேன். நீ அனுப்பி வைத்த பணம் கிடைத்தது. பங்களூரில் நல்ல குளிர் இருக்குமே... நல்ல ஸ்வெட்டராக வாங்கிக்கொண்டாயா? இப்போதே நல்ல வீடாகப் பார்த்து வை. நானும் வர சௌகரியமாக இருக்கும். உனக்கும் ஜாதகங்களாக வந்து குவிகின்றன. பங்களூரிலேயே இரண்டு மூன்று வந்திருக் கின்றன. அவர்கள் உன்னை வந்து பார்ப்பார்கள். உன் இஷ்டப்படியே செய்யலாம். ஹோட்டல் சாப்பாடு உனக்கு நாலு நாளைக்கு மேல் ஒத்துக்காது...'

*வேலை... வேலை ஸ்திரமானதும் கல்யாணம். உடனே குடித் தனம், ரேஷன் கார்டு, மண்ணெண்ணெய், குழந்தை! ம்ஹூம்... அம்மா, நான் அந்த ஜாதியில்லை. பச்சைத் தண்ணியில் குளிக் காதே. ராத்திரி பால் சாப்பிடு. இதுவரைதான் நான் நீ சொல் வதைக் கேட்பேன். அதற்கு மேல் என் பாதையை, என் எழுச்சியை நானேதான் அமைத்துக்கொள்ளப் போகிறேன். அம்மா, எனக்கு வேண்டியது இப்போது கல்யாணமில்லை. உயரம்!*

*விட்டல் எட்டிப் பார்த்தபோது, 11.15. 'விக்கி, வரியா கம்ப் யூட்டர் ரூம் போறேன்.'*

*'இல்லை சார். எனக்கு 11.30-க்கு ஒரு அப்பாயிண்ட்மெண்ட் இருக்கு.'*

*'யாரோட?'*

*'எம்.டி.யோட.'*

*'என்னது? சரியாச் சொல்லு.'*



'ஆமாம்! ஆர்கேதான் என்னைக் கூப்பிட்டிருக்கார்.'

விட்டல் கண்களைக் கசக்கிக்கொண்டு 'உன்னைக் கூப்பிட் டாரா?'

'இல்லை! நான் அவருக்குப் போன் பண்ணி, 'வந்து பார்க்க லாமா'ன்னு கேட்டேன். 'வா'ன்னார்.

'நீ அவருக்குப் போன் பண்ணியா?'

'ஆமா! ஏன் பண்ணக் கூடாதா?'

'அடப் பாவி! நான் பதினஞ்சு வருஷமா செய்யத் தைரியம் இல்லாத காரியத்தை நீ சேர்ந்த நாளே பண்ணிட்டே... பொழைச்சுப் போயிடுவே! நான் அவரைக் கிட்டத்திலகூடப் பார்த்தது கிடையாது தெரியுமா? போ! போ! இளங்கன்னு பயம் அறியாதுன்னு சரியாத்தான் சொன்னா!' தலையை ஆட்டிக் கொண்டே சென்றார். 'தீஸ் யங்ஸ்டர்ஸ்...'

சரியாக 11.30-க்குக் கட்டடத்தின் உச்சியில் இருந்த ஆர்கே டவர்ஸில் ஆர்கேயின் அறைக்கு பிரத்தியேக லிஃப்டில் சென்றான். பிரமித்தான். நான்கு பக்கங்களிலும் வெளிர்நீலக் கண்ணாடி. கணுக்கால் ஆழத்துக்கு கார்ப்பெட். சுவரில் ஒரே ஒரு நவீன சித்திரம். நெட்டையான ஸ்டூல்மேல் காலை மலர்கள். வெளியே பொம்மை நகரமாக விரிந்த பங்களூர்.

ஆர்கேயின் சன்னிதானத்துக்குள் நுழையுமுன் அறையில் ஒரு எலெக்ட்ரிக் டைப்ரைட்டர். வெட்டப்பட்ட 'எஸ்' போல் வளைந்த மேஜை அருகில் நாய்க் குட்டிபோல டெலிபோன் ஒன்று. பொட்டலமாக மடங்கக்கூடிய டெலிபோன் ஒன்று. ஆர்கேயின் காரியதரிசிக்கு நாற்பது வயதிருக்கலாம். கச்சிதமான உடலமைப்புடன் ஏமாந்த சமயங்களில் இருபத்து எட்டு சொல்ல லாம்போல இருந்தாள். தலை மயிரை கிராப்பாக்கி இருந்தாள். விக்ரம் நுழைந்தவுடன் சிக்கனமாகச் சிரித்துவிட்டு, 'ஹலோ விக்ரம், ஹி இஸ் வெய்ட்டிங் ஃபார் யு. உள்ளே போங்க.'

உள்ளே சென்றான். ஏராளமான அறை. உறுத்தாத வெளிச்சம். பாலிஷுக்கு பாலிஷ் கொடுத்த மேஜை. பிரத்தியேகமாகச் செய்யப்பட்டிருக்க வேண்டும். இந்த மாதிரி எக்ஸ்க்யூட்டிவ் மேஜையை அவன் பார்த்ததே இல்லை. அதன் மேல் டெலி போன்கள். ஏஸியின் இதம். சற்றுத் தள்ளி ஒரு கம்ப்யூட்டர்

டெர்மினல். அதன் திரையில் இடது ஓரத்தில் ஒரு வெளிச்ச சதுரம் பளிச் பளிச்சென்று ஆணைகளுக்குக் காத்திருந்தது. மெத்தை அமைத்த மஹா நாற்காலி. ஆர்கே!

அவன் எதிர்பார்த்ததற்குச் சிறியவராக இருந்தார். மாநிறமாக இருந்தார். நெற்றியில் காலை பூஜை தெரிந்தது. தள்ளி வாரப் பட்ட தலை மயிர். ஒன்றிரண்டு கற்றைகள் விடுபட்டு நெற்றியில் படர்ந்திருந்தன. மீசையில் லேசாக நரை.

'மே ஐ...'

'உட்கார்!'

தயங்கி நாற்காலி விளிம்பில் உடகார்ந்தவனை, உருவி விடுவது போல் பார்த்தார். நாற்காலியில் இருந்தபடியே அரை வட்டம் அடித்து கம்ப்யூட்டர் டெர்மினலை நோக்கி, அதன் கீ போர்டு சாதனத்தில் விரல்களைப் பரவவிட்டு, 'பேர் என்ன சொன்னே?'

'விக்ரம் சார்!'

'விக்ரம்! விக்ரம்! வி.ஐ....' மௌனமாக டைப் அடித்தார். 'நம்ம ஆபீஸ் கம்ப்யூட்டர் உன்னைப் பத்தி என்ன சொல்றது பார்க்க லாம்!'

அவர் ஒரு கேள்விக் குறியை அடிக்க, சற்ற நேரத் தயக்கத்துக்குப் பின் டெலிவிஷன் போன்ற திரையில் தானாகவே பச்சை எழுத்துக்கள் வரி வரியாகத் தோன்றி நிரப்பின.

'லெட் மீ ஸீ, விக்ரம் ஆர். வயது 24. பிறந்த தேதி... வருஷம்... படிப்பு: பி.காம். எம்.பி.ஏ.'

'அட! நீகூட எம்.பி.ஏ! சரிதான், அசோக்கை மீட் பண்ணியா? உன் பாஸ்...'

'இன்னும் இல்லை சார்... பாம்பே போயிருக்காராம்.'

'அவன்கூட எம்.பி.ஏ. கொஞ்சம் கிராக்கு. வேலைல புலி. எல்லா எம்.பி.ஏ.க்களும் அப்படியோ?'

'சேச்சே. இல்லை சார்... ரிமார்க்கபிள் சார்!'

'எது?'



'இந்த கம்ப்யூட்டர்!'

'விலை உயர்ந்த பொம்மை. அசோக்தான் பிடிவாதமாக வாங்கி மாட்டியிருக்கான். நாற்பது லட்சம்! உதவாக்கரை விஷயங்கள் நிறைய சொல்றது... இத பார்! கேம் லேட் பிப்டீன் மினிட்ஸ். நீ லேட்டா வந்தா இதுக்கென்ன? கார்பேஜ்?'

'இனிமே லேட்டா வர மாட்டேன் சார்!'

வெளேர் என்று உடையணிந்த ஒருத்தன், எப்போது வந்தான்? இரண்டு கோப்பைகளில் காபி ஊற்றி பக்கத்தில் சர்க்கரைக் கட்டிகள் நிரம்பிய வெள்ளிக் கோப்பையை வைத்துவிட்டு எப்போது போனான்? 'காபி சாப்பிடு.'

'சார், ஐம் த்ரில்ட்.'

'ஏன்?'

'கம்பெனியின் டாப் எக்ஸிக்யூட்டிவ் நீங்க! உங்களோட உங்க அறையில், சேர்ந்த முதல் நாள் காபி சாப்பிடக்கூடிய பாக்கியம் எனக்குக் கிடைக்கும்னு கனவில் கூட....'

'புல் ஷிட்! யங் மேன். முகஸ்துதி ரொம்ப தூரம் தாங்காது. கடும் உழைப்புதான்...'

'நான் கம்பெனிக்காக இருபத்து நாலு மணி நேரமும் உழைக்கத் தயார், சார்!'

'அதுவும் தப்பு. அஞ்சு வருஷத்தில் அல்ஸர் வந்துடும். பத்து வருஷத்தில் ஹார்ட் அட்டாக். அப்புறம் ஆபிச்சுவரி...'

அதற்கு என்ன பதில் சொல்வது என்று திணறினான். இவரிடம் பாசாங்கு என்பதே கூடாது. நேர்முகத் தாக்குதல் மனிதர். இவரைப் போலியாகவும் வசீகரிக்க முடியாது. எழுந்தார். மெல்லிய திரைகளை விலக்கி வெளியே விரிந்திருந்த பங்களூர் நகரத்தைப் பார்த்தார்.

அவர் விட்டுச் சென்ற காலி நாற்காலியைப் பார்த்தான். 'ஒரு நாள்! ஒரு நாள், அதில் நான் உட்கார வேண்டும்! 'விக்ரம்! இங்க வா...'

அவர் அருகில் சென்று மரியாதையான தூரத்தில் நின்றான்.

'அதோ தெரியுது பாரு ரயில்வே லைன்... அங்கிருந்து அண்டர் பிரிட்ஜ் தெரியுது பாரு? தெரியுதா?'

'எஸ் சார்?'

'ரயில்வே லைனோட தெரு தெரியுதா?'

'தெரியுது சார்!'

'அங்கதான் முதல்லே சைக்கிள்ள கூவிட்டே போவேன். ஆரம்ப நாட்களில்...'

'அப்படியா?'

'என்ன கூவிக்கிட்டுப் போவேன் தெரியுமா? பேப்பர் பழைய பேப்பர்.'

'மை காட். என்ன ஒரு அசாத்திய முன்னேற்றம் சார்!'

'ஒரு புடலங்காயும் இல்லை. அதிர்ஷ்டம், குருட்டு அதிர்ஷ்டம்!'

'இருந்தாலும்...'

'படிச்சிருந்தா பழைய பேப்பர் வியாபாரம் பண்ணக் கூடாதுன்னு அந்த இன்ஹிபிஷன் ஏதும் அப்ப இல்லை. அதை வேணா ஒரு வித்தியாசமான விஷயமாச் சொல்லலாம். எனிவே, நீ சேர்ந்த முதல் நாளே என்னைத் தைரியமா பார்க்க வரலாமான்னு கேட்டது எனக்குப் புடிச்சிருந்தது. அதனால் உன்னைப் பார்க்க சம்மதிச்சேன்! ஆல் தி பெஸ்ட். கம்பெனியோட முன்னேற்றத்துக்கு உழை. உன் முன்னேற்றத்துக்கு இல்லை...'

'சரி சார். தாங்க்ஸ் சார்!'

'பை தி வே, உன்னோட ஹாபி என்ன?'

'கேம்ஸ்.'

'என்ன கேம்ஸ்?'

'கிரிக்கெட், பாஸ்கெட் பால், கால்ஃப்.'

'கால்ஃப்பா? பணக்காரங்க விளையாட்டாச்சே.'

'எனக்கு பணக்கார ஃப்ரெண்டு ஒருத்தன் கத்துக் கொடுத்தான்!'



'இண்டோர் கேம்ஸ்?'

'பிரிட்ஜ்.'

'என்ன கன்வென்ஷன்?'

'ஸ்ட்ராங் கிளப், டைமண்ட் டினையல்!'

'குட்! நீ போகலாம்.'

வெளியே வந்தபோது எம்.டி.யின் செக்ரட்ரியின் மற்றொரு புன்னகையைக் கடந்து லிஃப்டில் இறங்குகையில், அவன் உள் ததும்பிய குதூகலத்தில் கொஞ்சம் குற்றம் கலந்திருந்தது. அவரிடம் இரண்டு பொய் சொல்லி விட்டான். கால்ஃப், பிரிட்ஜ் இரண்டுமே அவனுக்கு அதிகம் தெரியாது. பிரிட்ஜ் கொஞ்சம் கற்றுக்கொண்டிருக்கிறான். 'ஜாக்கிரதை. மறுபடி பொய்கள் வேண்டாம். ஏற்கெனவே சொன்ன மகத்தான பொய்யினால்தான் இந்த வேலையே உனக்குக் கிடைத்திருக்கிறது!'

'மிஸ்டர் விக்ரம். உங்க எம்.பி.ஏ. டிகிரி சர்டிபிக்கேட்டோட ஒரிஜினலைக் கொஞ்சம் காட்டறீங்களா?'

லிப்டின் குளிர்ந்த சூழ்நிலையிலும் அவனுக்கு குப்பென்று வேர்த்தது.

சே! பயப்படாதே. யார் கேட்கப் போகிறார்கள்? இதுவரை யாரும் கேட்டதில்லை.

அந்த கம்ப்யூட்டர்?

அது வெறும் மெஷின்! கொடுத்த தகவலைத் திருப்பித் தரும். வேண்டாம். கவலை வேண்டாம். யாரும் அதைக் கிளறப் போவதில்லை. இந்தக் கம்பெனியில் முன்னுக்கு வரும் வழியைப் பார். கவர வேண்டியவர்களைக் கவர், குழி பறிக்க வேண்டியவர்களைப் பறி!

அசாத்திய தன்னம்பிக்கை. அசாத்திய சுயநலம். சிறு வயதிலிருந்தே அவன் ரத்தத்தில் இருந்த குணங்கள்.

விக்ரம் கால்ஃப் கற்றுக் கொள்ளத் தீர்மானித்து விட்டான்.

சீட்டுக்கு வந்ததும் விட்டல் பறந்தார்.

‘என்ன சொன்னார் ஆர்கே?’

‘ஒண்ணுமில்லை. சும்மா பொதுவா விசாரித்தார். விட்டல், எனக்கு நீங்க அசோக் குமாரைப் பத்திக் கொஞ்சம் சொல்லுங்க...’

‘அவனைப் பத்தி ஓஹோன்னு சொல்லியிருப்பாரே எம்.டி.’

‘கில்லாடின்னார்.’

‘என்ன கில்லாடி? ஏதோ ஒரு லொடக்காஸி கம்ப்யூட்டரை வெச்சுட்டா கில்லாடியா? அதனால என்ன பிரயோசனம்? அனுமார் வால் போல யூஸ்லஸ்ஸா. இந்த ஆபீஸ்ல யாராரு தூரம் குளிக்கலைன்னு ஸ்டேட்மெண்ட் அடிக்கிறது. என்னவோ அவன் காட்டில் மழை. அவன்தான் அடுத்த டைரக்டர்னு பேசிக் கறாங்க அட்மின்ல. அதைப் பத்தி ஏதாவது சொன்னாரா?’

‘இல்லை.’

‘அவந்தான் வாரிசு! சின்னப் பையன். எங்கெங்கேயோ போகப் போறான். ரொம்ப கர்வம் பிடிச்சவன். ஆபீஸ்ல பாதிப் பொம்ப ளைங்களைக் கை வைச்சுட்டான். நீ அவங் கீழதான் ஒர்க் பண்ணப் போறே. பார்க்கத்தானே போறே!’

‘அப்படியெல்லாம் இருந்தா எப்படி பெரியவாகிட்ட அவ்வளவு நல்ல பேர் வாங்க முடியும்?’

‘என்னவோ புதுசு புதுசாக் கொண்டு வந்தானாம். ஓ.ஆர். அது இதுன்னு அவன் வந்ததால போன வருஷம் டர்ன் ஓவர் டபுளா யுடுத்தாம். என்ன புடலங்காய்! கம்பெனியோட குரோத் ரேட்டே அப்படி. யானை சுமந்ததாம். நரி முக்கிண்டு வந்ததாம்!’ விட்ட லுக்கு அசோக் குமாரை பிடிக்கவில்லை என்பது தெரிந்தது. பிற்பாடு உபயோகப்படக்கூடிய தகவல்.

‘நீயேகூட கொஞ்சம் அவன்கிட்ட ஜாக்கிரதையா இருக்கணும். ஹெடிரோ செக்ஷுவல்! வா, அழகான நம்ம ஆபீஸ் நாப்பது லட்சம் ரூபாய் பொம்மையை வந்து பாரு. அசோக் குமாரோட ப்ரைம் கம்ப்யூட்டர்!’

மத்தியானம் முழுவதும் அந்த பிரம்மாண்டமான ஸ்தாபனத்தில் எல்லாப் பிரிவுகளையும் பார்த்தான். அசோக்குமாரின் பாதிப்பு (பல) பலப் பல பிரிவுகளில் இருப்பதைக் கவனித்தான். அந்தக்



கம்ப்யூட்டரும் மோசமில்லை. எம்.ஐ.எஸ். என்கிற நவீன செய்திமுறை வசதி அதில் இருந்தது. உடன் கம்ப்யூட்டரின் சம் பிரதாய வசதிகள் அனைத்தும் இருந்தன. எம்.டி.யின் மேஜையி லிருந்த டெர்மினல் இணைப்பிலிருந்து ஸ்தாபனத்தின் அத்தனை விஷயங்களையும் அறிந்துகொள்ளக் கூடிய ஏற்பாடு இருந்தது. அசோக் குமாரின் திறமையை அவனால் வியக்காமல் இருக்க முடியவில்லை. அதே சமயம் இன்னும் சந்தித்திராத அவன்மேல் பொறாமையும் ஏற்பட்டது.

ஐந்தரைக்கு எல்லாரும் வீட்டுக்குப் போய்விட்டார்கள். விக்ரம் தன் அறையில் தனியாகப் படித்துக்கொண்டிருந்தான்.

பால் கண்ணாடிக் கதவைத் திறந்து அங்கே சென்றான்.

மைத்ரேயி ஒரு கணம் நிமிர்ந்து அவனைப் பார்த்துவிட்டு எதிரே உட்கார்ந்திருந்த ஈஸ்வரனைப் பார்த்தாள்.

‘என்ன?’ என்றார் ஈஸ்வரன். ‘வீட்டுக்குப் போகலையா?’

‘இல்லை. கொஞ்சம் ஸ்டாண்டிங் ஆர்டர்ஸ் எல்லாம் படிச் சுண்டிருந்தேன்.’

‘ஓவர் டைம் நிஜமாவே பண்ணறாளான்னு செக் பண்றிங்களா?’

‘சேச்சே... நீங்க என்னைத் தப்பா புரிஞ்சிண்டிருக்கிங்க, ஈஸ்வரன்.’

சற்று நேரம் நின்று விட்டு மீண்டும் தன் அறைக்கு வந்தான்.

பத்து நிமிஷம் கழித்து ஈஸ்வரன் குரல் கேட்டது. ‘உள்ளே வரலாமா?’

‘தாராளமா.’

‘அனுமதி இல்லாம வரக் கூடாதுன்னு மத்தியானம் சொன்னேள். அதனால்தான். இந்தாங்க சாவி. போறப்ப செக்யூரிட்டி கார்டு கிட்ட கொடுத்துடுங்க’ என்று சாவிக் கொத்தை அவன் மேஜை மேல் வீசி எறிந்துவிட்டு, கதவைப் படீர் என்று சாத்தி விட்டுச் சென்றார்.

ஒரு நிமிஷம் அவர்மேல் கோபம் அவன் வயிற்றில் அமிலம் போல் பாய்ந்தது.

வினோதமான முதல் தினம்! விட்டல், ஆர்கே இன்னும் சந்திக்காத அசோக் குமார்.

மைத்ரேயியின் விலகின ஸாரி, கம்ப்யூட்டர்.

எல்லாவற்றுக்கும் ஊடே என் பொய் அஸ்திவாரம். அதன் ஞாபகக் கத்திக் குத்து அடிக்கடி...



# 2

அசோக் குமாரை மறு நாள் சந்தித்தான். திடீரென்று அறைக் கதவு வெடி வைத்ததுபோல் திறக்க,

'ஹாய்! யூ மஸ்ட் பி தி நியூ மேன், பிக்ரோம்!'

விக்ரம் அதிர்ந்து எழுந்து, 'பெக் யுர் பார்டன்?' என்றான்.

'நான்தான் அசோக் குமார். கால் மி அசோக். என்னைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பாயே?'

'எஸ் சார்...'

'நோ சார் பிஸினஸ்! என்னைப் பற்றிக் கேட்டதை எல்லாம் நம்பாதே. நீயே மதிப்பிடு.'

பார்த்த உடனே பெங்காலி என்று சொல்லிவிடக் கூடிய சற்றே மங்கோலியத்தனம் கலந்த முகம். கொஞ்சம் கொட்டைப் பாக்குக் கண்கள். ஆங்கில உச்சரிப்பில் தாய் மொழி. பட்டை ஃப்ரேம் கண்ணாடி. சோழி சோழியாகப் பற்கள். இருந்தும் எளிதாக விவரிக்க முடியாத கவர்ச்சி அவனிடம் இருந்தது. ஸ்வாதீனமாக அவன் மேஜையில் உட்கார்ந்து ஒரு ஜெம் கிளிப்பை எடுத்துக் காது குடைந்துகொண்டு, 'ஸோ யூ ஆர் ஆல்ஸோ எம்.பி.ஏ.'

'ஆம்.'

'எங்கிருந்து.'

'ஆம்தாபாத்' என்றான் தயக்கத்துடன். நிச்சயம் இவன் கல்கத்தாவில்தான் படித்தவனாக இருக்கவேண்டும்.

'ஆம்தாபாத்? நானும் அங்கேதான் படித்தேன். நீ எந்த வருஷம்?'

'போன வருஷம்தான்' என்றான். சம்பாஷணை செல்லும் திசையை விரும்பாமல்.

'நான் வெளியே வந்து ஐந்து வருஷமாகி விட்டது. இன்னும் ப்ரொபஸர் ஜிகே இருக்கிறாரா?'

'ம். இருக்கிறார்.'

'இரைந்து பேசு. ஏன் பயப்படுகிறாய்? இந்த ஆபீஸில் எல்லாவற்றையும் அழுத்தமாகச் செய்யவேண்டும். இல்லை எனில் நீ சாப்பிடப்படுவாய். சிகரெட் இருக்கிறதா?'

'ஸாரி. நான் குடிப்பதில்லை!'

'மது?'

'ம்ஹூம்.'

'பெண்கள்?'

'ஓ நோ.'

'பின் எதற்குத்தான் அதை உபயோகப்படுத்துகிறாய்?' மேஜை மணியைத் தட்டி, 'மொய்த்ரோய் மொய்த்ரோய்' என்று கூப்பிட்டான். மைத்ரேயி உடனே வந்து சற்று பயத்துடன், 'எஸ் மிஸ்டர் குமார்' என்றாள்.

'கெட் மி எ பாக் ஆஃப் இண்டியா கிங்ஸ்! க்விக்!'

'எஸ் மிஸ்டர் குமார்.'

'ஆன் தி டபிள்!' அவள் சென்றதும், 'லுக் அட் ஹர் பம்ஸ்' என்று வரைந்து காட்டினான்.

பின்குறிப்பாக 'மூன்று தடவை' என்றான்.

'என்ன மூன்று தடவை?'



'ஸ்க்ரூட் ஹர்' என்றான்.

'காட்! ஷி இஸ் மாரிட், ஐ ஸே!'

'ஆல் த பெட்டர்.'

அவன் விளையாட்டுக்குச் சொல்கிறானா, இல்லை நிஜம் பேசுகிறானா என்று எளிதாகச் சொல்ல முடியவில்லை. 'ஈஸ்வரன் என்ன சொன்னார்?'

'அவருக்கு என்மேல் கோபம்.'

'சொன்னார். ஓட்டி ஸ்லிப்பில் கையெழுத்து போட மறுத்து விட்டாராம். சபாஷ்! ஈச்சு, விட்ஸ் போன்ற பழைய பெருச்சாளிகளை எல்லாம் ஒழித்துக் கட்டினால்தான் இந்த ஆபீஸ் உருப்படும். நீ பிரிட்ஜ் ஆடுவாயாமே. ஆர்கே சொன்னார்.'

'சுமாராக ஆடுவேன்.'

'சுமார் போதும். நாலாவது ஆள் இல்லாமல் தவித்துக் கொண்டு இருக்கிறோம். கட் த்ரோட் ஆடிக் கொண்டிருக்கிறோம். ஆர்கே என்னைப் பற்றி என்ன சொன்னார்?'

'திறமைசாலி என்று.'

'வேறெதும் சொல்லவில்லையா?'

'மற்றவர்கள்தான் பேசிக்கொண்டார்கள்...'

'என்ன என்று?'

'நீங்கள்தான் அடுத்த டைரக்டர் என்று.'

'ஓ தட்?' என்று சிரித்தான். 'இந்தா, இந்த ரிப்போர்ட்டைப் பார். பம்பாய் ஆபீஸிலிருந்து வந்திருக்கிறது. எனக்குப் படிக்க நேரமில்லை.'

'ஐ'ல் டூ தட்... அசோக்.'

'வெரி குட். தட்ஸ் பெட்டர். ஞாயிற்றுக் கிழமை பங்களூர் கிளப்புக்கு வா. சில சுவாரஸ்யமான பெண்களைச் சந்திக்கலாம். முக்கியமாக விலாசினி.'

டெலிபோன் ஒலித்தது. 'விக்ரம், அசோக் அங்கே இருக்கிறானா?'

'யுவர் போன், அசோக்.'

அவன் அதை வாங்கிக் கேட்டு, 'ஹாய் ஸ்வீட் ஹார்ட்! என்ன விஷயம், ஓ அப்படியா! இதோ ஹெலிகாப்டரில் வருகிறேன்' என்று பரபரப்பாக டெலிபோனை வைத்துவிட்டு, 'ஆர்கே கூப்பிடுகிறார்' என்று ஓடினான்.

சற்று நேரம் அவன் விட்டுச் சென்ற புயல் அடங்கவில்லை. விலாசினி என்கிற பெயர் கொஞ்சம் நேரம் இனித்தது. அசோக் குமாரை இனம் கண்டு கொள்ள முடியாமல் தவித்தது மனம். ஆர்கே அவனைக் கூப்பிடுகிறார் என்ற செய்தியில் பொறாமை ஏற்பட்டது.

மைத்ரேயி பளபளப்பான சிகரெட் பெட்டி, உரிக்கப்படாத நெருப்புப் பெட்டி சகிதம் வந்து, 'எங்கே அவர்?' என்றாள்.

'எம்.டியைப் பார்க்கப் போயிருக்கிறார்.'

'அவர் வந்தால் கொடுத்து விடுகிறீர்களா?' என்று மேஜைமேல் வைத்துவிட்டுப் போனாள். ஒரு விரசமான கணத்தில் அவள் மல்லாந்து படுத்திருப்பதைப் பார்த்தான்.

மனசை ஸ்திரப்படுத்திக்கொண்டு அந்த ரிப்போர்ட்டில் ஆழ்ந்தான்.

அசோக் குமாரைத் தன்பால் கவரவேண்டிய முக்கியம். பெரியவருக்கு நெருக்கமானவன்... அடுத்த டை ரக்டர். அவன் டைரக்டரானால் நான்?

விலாசினி விலாசினி. இந்தப் பெயரை எங்கு கேட்டிருக்கிறான்? ஆர்கே ஸ்தாபனத்தின் கிளை கம்பெனிகளில் ஒன்றின் பெயர் விலாசினி கம்பைன்ஸ் அல்லவா?

ஒரு வேளை...

'மைத்ரேயி?' என்று இண்டர்காமில் கூப்பிட்டான்.

மைத்ரேயி நோட்டு பென்ஸிலுடன் வந்து நின்றாள்.



'டிக்டேஷன் எதுவும் இல்லை. 'எம்.டியோட டாட்டர் பேர் என்ன?'

'தெரியாது சார்.'

'கெட் மி தட் இன்ஃபர்மேஷன்!'

'ஒக்கே!' என்று ஒருமுறை அற்பமாகப் பார்த்துவிட்டுச் சென்றாள். 'கால் ஈஸ்வரன்' என்றான்.

'ஒக்கே சார்' என்றது வெளி அறை.

ரிப்போர்ட்டை ஏறக்குறைய படித்து முடித்ததும் வந்தார்.

'மிஸ்டர் ஈஸ்வரன், கூப்பிட்டா நீங்கள் உடனே வரக் கூடாதுன்னு இந்த ஆபீஸில் ஏதாவது பழக்கம் இருக்கா?'

'இல்லை.'

'அப்படி ஏதாவது இருந்தாச் சொல்லிடுங்க!'

'ஐ வாஸ் பிஸி!'

'குட் அதைத் தகவல் சொல்லி அனுப்பியிருக்கலாம் இல்லையா?'

'உங்க ஓர்க்கைத்தான் பார்த்துக்கிட்டு இருந்தேன். உங்க ஜாய்னிங் ரிப்போர்ட் கம்ப்யூட்டருக்குப் போகலைன்னா ஒண்ணாம் தேதி சம்பளம் வராது உங்களுக்கு.'

'சரி... சரி.'

'இப்ப எதுக்கு என்னைக் கூப்பிட்டிங்க?'

'எனக்கு டிப்பார்ட்மெண்ட் ஸ்டாஃப் லிஸ்ட் வேணும்.'

'எதுக்கு?'

'யாரார் என்ன என்ன செய்யறா, ஜாய்னிங் டேட், போர்ட்ஃபோலியா அலக்கேஷன், எல்லாம் தெரியணும்.'

'போர்ட்ஃபோலியோ அலக்கேஷன் நான் தரேன். மற்ற விஷயங்கள் அட்மின் செக்ஷன் மூலமா மெமோ குடுத்தா கம்ப்யூட்டர் பிரிண்ட் அவுட் வரும்.'

'மிஸ்டர் ஈஸ்வரன், இதுக்குத்தான் 'பக் பாஸிங்'னு பேரு. எங்க கிடைக்கும்னு தகவல் வேண்டாம். கெட் மி தட் ஸ்டேட்மெண்ட். அவ்வளவுதான்.'

'ஸாரி. தட்ஸ் நாட் மை ஜாப்.'

'தட் இஸ் யுவர் ஜாப்.'

'இதைவிட முக்கியமான வேலை எனக்கு இருக்கு.'

'ட்ராப் தட்! நான் சொல்றதைச் செய்யுங்க. நீங்க போகலாம்.'

சற்று நேரம் நின்று, நிதானமாக அவனை மறுபடி பார்த்து விட்டுப் பெருமூச்சுடன் சென்றார். வெளியே மைத்ரேயியிடம் 'ரொம்ப நாளைக்குத் தாங்காது' என்று சொன்னது தெளிவாகக் கேட்டது.

மைத்ரேயி உள்ளே வந்து, காகிதத்தை மேஜை மேல் வைத்து விட்டு மௌனமாக விலகினாள்.

அதில், 'ஆர்கேயின் பெண்கள் இருவர். பெயர்கள் வினோதினி, விலாசினி.'

சற்று நேரம் அந்த எழுத்துக்களைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

உள் தொடர்பு டெலிபோன் ஒலிக்க எடுத்து 'விக்ரம்'.

'விக்ரம். உன் பெயரிலேயே ரம் இருக்குய்யா! சிகரெட் பாக் வந்ததா?'

'வந்தது. என்னிடம் இருக்கிறது.'

'அதை என் அறைக்கு அனுப்புகிறாயா?'

'நானே கொண்டுவருகிறேன்.'

அசோக்கின் அறை ரகளையாக இருந்தது. சுவரில் ப்ளே பாய் ரக போட்டோ நங்கைகளும் ஜான் லென்னனும் பாஸ்க்கலும் ஒன்றி வாழ்ந்தனர். மேஜை பூரா புஸ்தகங்கள் இறைந்திருந்தன. கண்ணாடிக்குக் கீழ் Never confuse motion with action என்று எழுதி இருந்தது. ஆஷ் ட்ரேயில் சிகரெட்கள் அடைந்திருந்தன. கப்பில் காபி எப்போதோ வற்றிப்போய் கறை படிந்திருந்தது.



பென்சில்கள், நெருப்புப் பெட்டி, மாத்திரைகள், நின்றுபோன கடிகாரம், காலாவதியான ஏர்லைன்ஸ் டிக்கட். ஏராளமான ஃபைல்கள்.

'உட்கார்! அரசியல்வாதியின் கஷ்கம்போல இருக்கிறதல்லவா என் அறை? எங்கே என் சிகரெட்? செத்துக்கொண்டிருக்கிறேன். ஆர்கேயிடம் போனால் இதுதான் சங்கடம். சிகரெட் குடிக்க முடியாது.' அவசர அவசரமாக சிகரெட் பெட்டியைத் துகிலுரித்து, பற்ற வைத்து, ஆழமாக இழுத்துக்கொண்டான். 'சொல்லு. என்ன சமாசாரம்.'

'ரிப்போர்ட்டைப் படித்து விட்டேன்.'

'அதற்குள்ளா? வெரிகுட். வெரிகுட். என்ன முடிவுக்கு வந்தே?'

'அவங்களுக்குத் தேவை ஒரே ஒரு மோல்டிங் மிஷன். அதுவும் ஸ்மால் கப்பாஸிட்டி!'

அசோக் குமார் எழுந்து வந்து விக்ரமை ஏறக்குறைய அணைத்துக் கொண்டான்.

'பிரமாதம்! அதையேதான் நானும் தீர்மானித்தேன். ஆனா, ரிப்போர்ட்டைப் பார்க்காமல்!'

'எதுக்கும் முழுக்கப் படிச்சுப் பார்த்துட்டு காம்ப்ரிஹென்ஸிவா.'

'ஃபக் இட் மேன்! ஸ்க்ரு இட்! அவ்வளவுதான். இதுக்கு மேல இதுல டயம் வேஸ்ட் பண்ணக் கூடாது. லொலிதா! வில் யூ கம்?'

'நம்ம ஸ்டெனோ லலிதாவைப் பார். சரியான கட்டை. இன்னும் கணக்குப் பண்ணலை! தீவிரமா முயற்சி பண்ணிகிட்டிருக்கேன்! இதுவரைக்கும் உரசல் வரைக்கும் வந்திருக்கேன்! அதுக்குள் காதல் அப்படி இப்படிங்கறா. கவலைக்கிடமா இருக்கு. நமக்குக் காதல் உதவாது... ஹாய் லோல். எப்படி இருக்கே? சௌக்கியமா? நான் இல்லாதபோது சமர்த்தா இருந்தாயா. ஒரு டிக்டேஷன் எடுத்துக்க! பை தி வே, இது விக்ரம். புதுசா சேர்ந்த எக்ஸ். இது லொலிதா. பத்திக் ஒர்க் எல்லாம் நல்லாப் பண்ணுவா. கிருஷ்ணர், புல்லாங்குழல்...' படபடவென்று டிக்டேஷன் செய்தான். 'உங்கள் ரிப்போர்ட்டைத் தீவிரமாகப் படித்தோம்...' என்று ஆரம்பித்து விக்ரமைப் பார்த்துக் கண்ணடித்தான்.

சரளமாகக் கடிதத்தின் வரிகளை அவன் பேசப் பேச லலிதாவின் பென்சில் கோடுகளை வசீகரமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். திடீரென்று அத்தனை விளையாட்டுத் தனத்தையும் மறந்து தீவிரமாகி விட்டான். இந்த நிமிஷத்தில் அசோக் குமாரை அவனுக்குப் பிடித்திருந்தது. மேஜையில் இருந்த புஸ்தகங்களைப் பார்த்தான். நார்லிக்கரும் ஃப்ரெட் ஹாயிலும் எழுதிய பிரபஞ்சத்தின் ஆரம்பத்தைப் பற்றிய புத்தகம். சிகரெட் பற்றவைத்து ஒட்டவைத்துப் பற்றவைத்துப் பற்றவைத்தான்.

'ஓ.கே. டைப் இட்! விக்ரம் ஸைன் பண்ணட்டும். ஆபீஸில் சேர்ந்த முதல் லெட்டர்.'

அவள் சென்றதும் அருகே வந்து, அவன் தோளில் தட்டி, ஏறக்குறைய அணைத்துக்கொண்டு, 'ஸ்வீட் ஹார்ட்! கவலையே படாதே. இந்த ஆபீஸின் ரகசியங்கள் அனைத்தையும் கற்றுத் தருகிறேன். கொஞ்சம் பொறு' அவன் கை பட்டபோது விக்ரம் கொஞ்சம் உள்ளுக்குள் சுருங்கினான்.

விட்டலின் எச்சரிக்கை நினைவுக்கு வந்தது.

சே! பொறாமையால்தான் அப்படிப் பேசியிருப்பார். இவன்தான் என் ஆசான். என் எதிர்காலத்தை அமைக்கப் போகிறவன். இவனிடம்தான் எனக்குப் பாடங்கள் இருக்கின்றன.

'அ விக்ரம்! இன்றைக்குச் சாயங்காலம் என்ன செய்யப் போகிறாய்?'

'ஆபீஸிலேயே இருந்து கொஞ்சம் பழைய ஃபைல்களைப் பார்க்க உத்தேசம்.'

'ச்சீச்சீ... கெட்ட பழக்கம். யாரை இம்ப்ரெஸ் பண்ண? இத பார். என்னோடு பிரிட்ஜ் ஆடினால்தான் நான்தான் உன் பாஸ். உனக்குப் பிரமோஷன். நான் ஆறு மணிக்குக் கிளம்புவேன். முதலில் என் ரூமுக்கு வா. அப்புறம் கிளப்புக்குப் போகலாம். வில்லாவைச் சந்திக்கலாம்.'

'வில்லர்...?'

'அவள்தான் விலாசினி. ஆர்கேயின் பெண்.'

'வருகிறேன்.'



'பெண். அதுவும் ஆர்கேயின் பெண் என்றதும் உன் கண் சாஸர் மாதிரி விரிகிறது.'

'சேச்சே அதெல்லாம் ஒன்றுமில்லை.'

'ஆர்கே மாதிரி ஒரு ஆசாமியைச் சந்திப்பது கஷ்டம். ரிமார்க்கபிள் மேன். அவருடன் எத்தனை முறை சண்டை போட்டிருக்கேன் தெரியுமோ? கவலையே பட மாட்டார். பிடிவாதம் கிடையாது. ஐம்பத்து ஐந்து வயசுக்கு அவர் நம்மையெல்லாம் விட மனத்தில் இளையவர்.'

'ரொம்ப நேரடியாக, அப்பட்டமாகப் பேசுகிறார்.'

'பொய்யே கிடையாது. அவரிடம் பொய் மட்டும் சொல்லாதே. பொய் சொல்லி மாட்டிக்கொண்டால் அந்த ஆசாமியை ஒழித்துக்கட்டி விடுகிறார்.'

சுருக்கென்றது.

'ஆபீஸ் வாழ்க்கையில் பொய்யே கூடாதா, அசோக்?'

'பொய் வேண்டும். சில சமயங்களில் தேவையானதும்கூட. ஆனால், ஆர்கேயின் லெவலில், அவரிடம் பொய் சொல்லக் கூடாது.'

'எப்போது பொய் சொல்லலாம்?'

'போக்கர் ஆடுவாயா? உங்கிட்ட ஒரே ஒரு ஏஸ் இருக்கு. மத்த கார்டெல்லாம் குப்பை. எதிராளி ஜோடி வெச்சிருப்பான். ஏன்? ஏஸ் பேரே வெச்சிருப்பான். அவனை நாம் தோற்கடிக்கணும்னா என்ன பண்ணனும்? ப்ளஃப் பண்ணனும். அதே மாதிரிதான் ஆபீஸ்லயும்.' மற்றொரு சிகரெட் பற்ற வைத்துக்கொண்டான்.

பொய் சொல்வதற்கு அசோக் குமாரின் ஏழு விதிகள். சின்ன விஷயங்களுக்குப் பொய் சொல்லாதே. குறிக்கோள் மிக முக்கியமானதாக இருந்தால்தான் பொய் சொல்லவேண்டும். எவரும் எதிர்பாராத சமயத்தில் பொய் சொல்லு. பொய் சொல்வதற்குமுன் வெற்றிக்கான வாய்ப்புக்களை ஆராய்ந்து பார். கவனமாகப் பொய் சொல்; மார்க் ட்வெய்ன் சொன்னதுபோல். யோக்கியமாகப் பொய் சொல்; அண்டப் புளுகு புளுகாதே. நம்பும்படியாக இருத்தல் வேண்டும் உன் பொய். கேட்பவனுக்கு

ஏதாவது ஒரு விதத்தில் திருப்தி தர வேண்டும். இப்ப உனக்கு ஈஸ்வரனைப் பிடிக்கவில்லை. உன்கிட்ட நான் ஈஸ்வரன் ஒரு பெரிய தப்பு பண்ணிட்டு ஒரு தடவை டிஸ்மிஸ் ஆக இருந்தார்னு பொய் சொன்னா உடனே நம்புவே. தட்ஸ் வாட் ஐ மீன்.'

'சரியான உபதேசம்.'

'பொய் ரொம்ப உபயோகமான பொருள்.'

ஆம். ரொம்ப உபயோகம்தான். தக்க சமயத்தில் எனக்கு வேலை வாங்கித் தந்தது.

அசோக் குமாரின் காரில் என்ன என்னவோ சாதனங்கள் எல்லாம் இணைக்கப்பட்டிருந்தன. வெளி நாட்டு கார். காஸெட்டில் மெஹ்தி ஆசன் மெலிதாகப் பாட, ஹாரனில் இனிப்பு, பச்சைக் கடிகாரம், ஸேஃப்ட்டி பெல்ட் சாய்மானத்தை மாற்றி அமைக்கக் கூடிய சீட்.

'என்ன கார் இது?'

'ஃபோக்ஸ்வாகன் 2200, ஓட்டிப் பார்க்கிறாயா? நாலாவது கியருக்குப் போகவே முடியாது. பறக்கும்.'

'வேண்டாம். எனக்கு ஓட்டத் தெரியாது. பொய்யைப் பற்றி நீ சொன்னது இன்னும் மனத்தில் உறுத்துகிறது. அசோக் ஏற்கெனவே ஒரு பொய் சொல்லி விட்டோம் என்று வைத்துக் கொள். அதை...'

'கண்டுபிடிக்கப்பட்டதா?'

'இல்லை என்று வைத்துக்கொள்.'

'கண்டுபிடிக்கப்படாவிட்டால் மற. கண்டுபிடித்து அதனால் உனக்கு அபாயம் என்றால் அந்தப் பொய்யை மெய்யாக்கு.'

'புரியவில்லை.'

'பொய்யை மெய்யாக்குவதற்கு மறுபடி அசோக் குமாரின் ஏழு கட்டளைகள் அப்புறம் சொல்றேன். இப்ப நீ பிரிட்ஜ் ஆடுவேன்னு சொன்னது எவ்வளவு பொய். பார்த்துரலாம்.'

'அடடே, நான்தான் சொன்னேனே. எனக்குச் சுமாராத்தான் ஆட வரும்னு.'



'விளையாட்டுக்குச் சொன்னேன். இதுக்கெல்லாம் பொய்களை எவனும் வேஸ்ட் பண்ண மாட்டான். இதெல்லாம் சுலபமா நிஜ மாக்கிவிடக் கூடிய பொய்கள். இப்ப பிரிட்ஜ் தெரியலைன்னா என்ன? கத்துக்கிட்டு பொய்யை நிஜமாக்கிடலாம் இல்லையா?'

உள்ளே பசும்புல்வெளியில் அமெச்சூர்த்தனமாக டென்னிஸ் ஆடிக்கொண்டிருந்தார்கள். பிரம்பு நாற்காலி போட்டுப் பல பேர் குடித்துக்கொண்டிருந்தார்கள். சீட்டாடுவதற்கென்றே மூன்று ஹால்கள் இருந்தன. அதில் நிரம்பி வழிந்தார்கள். ஸூட் அணிந்த கிழவர்கள், தக்காளி லிப்ஸ்டிக் அம்மாக்கள், சிகரெட் பிடிக்கும் பெண்கள், வாய் கொள்ளாமல் தடிமனாக சுருட்டு பிடிக்கும் நடுத்தர வயசு எக்ஸிக்யூட்டிவ்கள்... 'எல்லாம் ரம்மி! பிரிட்ஜ் ஆடறதுக்கு ஆள் இல்லை. அது கொஞ்சம் இன்டெலிஜண்ட் கேம். அதனால்...'

பாரின் உயர்ந்த ஸ்டூல்களில் உட்கார்ந்தார்கள். அவனைப் பல பேருக்குத் தெரிந்திருந்தது. அவ்வப்போது 'ஹாய் அசோக்'கு கள். 'என்ன சாப்பிடுகிறாய்?'

'தம்ஸ் அப் ஸெவன்-ஸெவன் எதாவது!'

'ஃப்ரான்ஸிஸ், இவருக்கு ஏதாவது ஜூஸ் கொடு. எனக்கு யூஷுவல்.'

'என்னது?'

'ரம் லார்ஜ்' என்றான்.

ரம்மில் ஐஸ் கட்டிகளைப் போட்டுக் குலுக்கிக்கொண்டே வராந்தாவில் வந்து உட்கார்ந்தான். 'பங்களூரின் அப்பர் கிளாஸ்! ஆல் ஆஃப் தெம் ஸ்டிங்க்.'

Everybody knows there's nothing doing

Everything is closed it is like a ruin

Everyone you see is half asleep.

'லென்னன் பெரிய ஆள்! அவன் செத்துப் போனபோது மூணு நாள் சேர்ந்தாப்பல குடிச்சேன்.'

'அடடா! அவ்வளவு ஈடுபாடா?'

'இல்லை. குடிக்கிறதுக்கு ஏதாவது காரணம் வேண்டியிருந்தது எனக்கு.'

அசாத்திய வேகத்தில் ரம்மைத் துரத்தி விட்டு 'ஃப்ரான்ஸிஸ் 'அனதர் லார்ஜ்' என்றான்.

'நிறைய குடிப்பீங்களா?'

'சம்பாதித்ததைச் செலவழிக்க வேண்டாமா?'

'வேறு வழிகள் இல்லையா?'

'டோன்ட் ப்ரீச் மேன். உன் ஆரஞ்ச் ஜூஸைச் சாப்பிடு.'

'ஹாய், அசோக்!'

'தேர் ஷி கம்ஸ், ஹாய் வில்லா.'

விலாசினி நேராக வந்து எதிர் நாற்காலியில் உட்கார்ந்தாள். தலை மயிரைத் தள்ளிவிட்டுக் கொண்டு ஒரு முறை விக்ரமைப் பார்த்துவிட்டு, உடனே அதனை மறந்ததுபோல அசோக்கின் பால் ஈடுபட்டாள்.

'வில்லா, திஸ் இஸ்... உன் பெயர் என்ன? இரண்டு ரம் உள்ளே போனதும் மறந்துவிட்டது.'

'விக்ரம்!'

'இதுதான் விலாசினி! ஆர்கேயின் இரண்டாவது பெண். சாம் ராஜ்யத்தின் வாரிசு. ஜ்யோதி நிவாஸ் காலேஜில் படிக்கிறாள்.'

'மவுண்ட் கார்மெல் மண்டு!'

'ஸாரி, இட் மஸ்ட் பி த ரம். பின் ஜ்யோதி நிவாஸில் படிப்பது யார்?'

'எனக்கு என்ன தெரியும்? உன் ஏராளமான அந்தப்புரப் பெண்களில் ஒருத்தியாக இருக்கும்!'

'தட்ஸ் டு பேட்! நான் ஏதாவது உன்னிடம் தவறாக நடந்து கொண்டிருக்கிறேனா, சொல்.'

'வேலை போய்விடும்.'



விக்ரம் அவளை நிதானமாகப் பார்த்தான். பணக்காரத்தனம் ஏதும் இல்லை. முரட்டுக் கதர்போல் இருந்த துணியில் சட்டை அணிந்திருந்தாள். உள்ளே ப்ரா இருக்கிறதா, இல்லையா என்பது சந்தேகத்துக்கு இடமாக இருந்தது. உதட்டில் சாயமில்லை. புருவங்கள் திருத்தப்படவில்லை. ரொம்ப நாள் அடைபட்டுப் பழசாகிப் போன ஜீன்ஸ். மணிக்கட்டில் இரும்பு வளையல். இடது கை சுண்டு விரலில் இரும்பு மோதிரம்.

'அசோக். நீ கொடுத்த புத்தகம் பிரமாதம்.'

'என்ன புத்தகம் கொடுத்தேன்?'

மெலிதான உதடுகள், பத்தொன்பது வயதிருக்கலாம். எழுந்து நின்றால் நல்ல உயரம் இருப்பவள் போலத் தோன்றியது. அவள் ஒரு முறை குனிந்தபோது மார்பைப் பார்த்தான். உள்ளுடை இல்லை. முதலாளியின் மகள் என் பக்கமே பார்க்க மாட்டேன் என்கிறாள்.

'அசோக், ஆக்ரோஷ் பார்த்தியா?'

'நான் இந்திப் படம் பார்ப்பதை நிறுத்தி விட்டேன் என்று என் அம்மாவுக்குச் சாகும் தறுவாயில் சத்தியம் பண்ணிக் கொடுத்திருக்கிறேன். ஃப்ரான்ஸிஸ்!'

'இண்டர்நேஷனல் வெல்வெட் பாத்தியா?'

'இங்க்லீஷ் படம் பார்க்கறதில்லைன்னு...'

'ஹி இஸ் ட்ரங்க் நௌ' என்று முதல் முறையாக விக்ரமைப் பார்த்தாள். 'வா வா, எங்கப்பாகிட்ட சொல்லி டிஸ்மிஸ் பண்ண வைக்கிறேன்.

'விக்ரம் ப்ளேஸ் பிரிட்ஜ்!'

'அப்படியா? வெரி குட்! நாலாவது கை கிடைத்து விட்டது. நீங்க புதுசா சேர்ந்திருக்கிங்களா?'

'ஆமாம்.' கண்களில் லேசான சிரிப்பு. கன்னங்களில் கொஞ்சம் அப்பா. 'பிரிட்ஜ் எனக்குக் கொஞ்சம்தான் தெரியும்.'

'எனக்குக்கூட! அசோக்தான் கற்றுத் தருகிறான். அசோக் புலி. அவனுக்குத் தெரியாதது ஒன்றும் இல்லை.'

'குடிப்பதை நிறுத்தினால்...'

'அதுதான் அவனுக்கு விட்டமின். அடுத்த ஞாயிறு எங்க வீட்டுக்கு வாங்க. ஆடலாம். என்ன அசோக், இவரைக் கூட்டி வரியா?'

'ஓ.எஸ்.'

சென்றவளையே பார்த்துக்கொண்டிருந்தான்.

'அதிகம் பார்க்காதே. பெரிய இடம். சுட்டு விடும். ஸ்வீட் கர்ள். அவ வயசுக்கு ரொம்ப மெச்சூரிட்டி.'

'ரொம்ப எளிமையா இருக்கா?'

'இதுக்குப் பேரு ரிவர்ஸ் ஸ்நாபரி. எக்கச்சக்கப் பணம். ஒரு நாளைக்குப் பத்தாயிரம் ரூபாய் செலவழிச்சாலும் அவ அப்பா கவலைப்படப் போறதில்லை. காரை எடுத்துட்டுப் போய் பிரிகேட் ரோடில சோளக் கொண்டை வாங்கித் தின்னுவா.'

அசோக் குமார் குடித்ததால் அவன் கார் ஓட்டும் திறமை பாதிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. 'எங்கே இருக்கே?'

'மல்லேஸ்வரம்.'

'முதல்ல அட்ரஸை மாத்து. சதாசிவ நகர்ல பெரிய வீடாப் பார்த்துக்க. கம்பெனி வாடகை கொடுக்கறபோது எதுக்காக மல்லேஸ்வரம் மாதிரி மிடில் கிளாஸ் லொக்காலிட்டில இருக்கணும்? மேலும், எனக்கு ராத்திரி படுத்துக்கறதுக்கு இன்னொரு பெண் வேண்டும். சில வேளைகளில் ரெண்டு கர்ள்ஸ் சேர்ந்தாப்பல வந்துட்டா கஷ்டம். இப்ப வரியா.'

'சேச்சே!'

'எப்பாவது வருவியா?'

'எப்பவாவது.'

'தட்ஸ் பெட்டர்! அதுவரைக்கும் பத்திரமா சோப் போட்டு அலம்பிக்கிட்டிரு' - விடுதியின் வாசலில் அவனை உதிர்த்து விட்டு உடனே புறப்பட்டுச் சீற்றமாகச் சென்றான். டிபன் பாக்ஸில் சாப்பாடு காத்திருந்தது. ஆறிப் போயிருந்தது. இந்த



அறைக்குள் விலாசினி வந்தால் என்ன நினைப்பாள். விலாசினி! அந்த முகத்தைச் சற்று நேரம் சிந்தித்தான். நாடாக் கட்டிலில் மல்லாந்து படுத்தான். விலாசினி, பானையில் இருந்து நீரிறைத்துக் குடித்தான். விலாசினி, சாப்பிட்டான். விலாசினி, பேண்டைக் கழற்றி லுங்கிக்குள் புகுந்து கொண்டான். விலாசினி, விளக்கை அணைத்துப் படுத்தான். விலாசினி... விலாசினி... விலாசினி...

# 3

ஞாயிற்றுக் கிழமைக்குள் பிரிட்ஜ் ஆட்டத்தைப் பற்றி நிறையப் புத்தகங்கள் படித்து விட்டான்.

பதினொரு மணிக்கு அசோக்கின் பிரத்தியேக ஹார்ன் கேட்டது.

கீழே ஓடினான். கதவைத் திறந்தவுடன் அவன் மூச்சில் நெடி அடித்தது!

'ஹாய் விக்ரம்! குளிப்பாட்டின குழந்தை மாதிரி இருக்கிறாய். இப்படி எல்லாம் வில்லாவைக் கவர முடியாது.'

'இப்போது எங்கே போகிறோம்?'

'ஆர்கேயின் வீட்டுக்கு. நான், நீ, ஆர்கே, விலாசினி!'

'ஓ மை காட் ஆர்கேயுமா?'

'பயப்படாதே. நான் அவருடன் பார்ட்னர். நீயும் வில்லாவும்.'

பாலஸ் அப்பர் ஆர்ச்சர்டில். வீட்டு வாசலில் மூன்று கார்கள். கராஜில் ஒன்று இருக்கும் போல் இருந்தது.

பாய்ந்து வந்தது நாய். டாஷண்ட். மரகதப் பச்சையில் புல்வெட்டு, பெரிய கண்ணாடிக் கதவுகள் ஊடே வீடு முழுவதும் தெரிந்தது. ரத்தினக் கம்பளம், மஹாகனி மேஜைகள். ஆர்கே புல்

வெளியை ஒட்டி வராந்தாவில் செய்தித்தாளுடன் டிரஸ்ஸிங் கவுனில் இருந்தார். 'வெல்கம்' வில்லா வில்லா.

'சார், இவன் பெயர்...'

'விக்ரம்! உன்னைப்போல் அவ்வளவு மறதியில்லை எனக்கு.'

'கம் யங் மேன். ஏய் சோட்டா, மேஜை நாற்காலி போடு!'

விலாசினி குதித்துக்கொண்டு வந்தாள். 'டாடி, நோ ஷாப்! இன்னிக்கு சீரியஸ் பிரிட்ஜ்.'

'ஓக்கே மை ஸன். என்ன திகைக்கிறே? இவ என் மகன்தான். பிள்ளையில்லாக் குறையை நீக்க வந்தவ.'

'அதான் எப்ப பார்த்தாலும் சட்டை பேண்ட் போடறியா, வில்லா?'

'ஷட் அப் மேன், நாங்கள்ளாம் உமன்ஸ் லிப்.'

'வெரிகுட், தி ப்ராலஸ் சொஸைட்டி! வி லைக் இட்!'

விக்ரம் சற்று அச்சத்துடன் பெரியவரைப் பார்த்தான். அசோக் அவர் மகளுடன் அவ்வளவு சுதந்தரத்துடன் பேசுவதை அவர் வெறுப்பதாகத் தெரியவில்லை.

விலாசினி அசோக்கை மண்டையில் தட்டுவதையும், அவன் பதிலுக்கு அவளைச் சற்று மரியாதையற்ற இடத்தில் கிள்ளுவதையும் ரசிப்பதாகத்தான் தோன்றிற்று.

அசோக் குமார் கார்டுகளைக் கலைத்துப் போடுவதிலேயே திறமை இருந்தது. முதல் கலவையில் இவனிடம் பதின்மூன்று பாயிண்ட் இருந்தது. அசோக் பாஸ் பண்ணிவிட, இவனிடம் ஐந்து கார்டுகள் ஹார்ட்டில் இருந்ததால் சம்பிரதாயமாக 'ஒன் ஹார்ட்' என்றான். ஆர்கே பாஸ் செய்தார். விலாசினி சற்று யோசித்து அவனை நேராகப் பார்த்து 'ஸிக்ஸ் ஹார்ட்ஸ்!' என்றாள். அசோக் உடனே 'டபுள்' என்றான்.

விக்ரமுக்கு வியர்த்தது. எடுத்த எடுப்பிலேயே எந்த விதமான சம்பிரதாய சம்பாஷணைகளுக்கும் இன்றி ஒரேயடியாக ஸ்லாம் போக மாட்டார்கள். அதுவும் ஆடவேண்டியது விக்ரம்!

ஆர்கே ஸ்பேடு இரண்டைத் தொடங்கினார். விலாசினியின் கார்டை வாங்கிப் பார்த்தான். பதினெட்டு பாயிண்ட் இருந்தது. ஹார்ட்ஸ் சீட்டுகள் ஐந்து இருந்தன. ஸ்பேட் ஏஸ் வெளியே. கிளப்ஸ் ராணி வெளியே. ஃபின்னஸ் எடுத்தாக வேண்டும்.

'நீங்க ஆடுங்க' என்று சீட்டைத் திருப்பிக் கொடுத்தாள். கை பட்டது. அசோக் ஏஸை எடுத்துக்கொண்டு துருப்பை ஆடி விட்டான். கையில் எடுப்பதா, டம்மியில் எடுப்பதா என்று சற்று நேரம் யோசித்தான். 'சரியா ஆடுங்க, ப்ளீஸ்' என்றாள்.

'ஷ்! மூச்சு விடக் கூடாது. சொல்லித் தரக் கூடாது!'

ஃபின்னஸ் எடுப்பதா, ஸ்க்வீஸ் பண்ணிப் பார்ப்பதா? இல்லை, நேராக ஆடி ராணி விழுகிறதா என்று பார்ப்பதா? குழப்பமாக யோசித்தான். அசோக் அவனைக் கேலியாகப் பார்த்துக் கொண்டிருக்க, அவன் வாழ்க்கைப் பிரச்னையே அந்த ஆட்டத்தில் இருப்பதுபோலத் தோன்றியது. பத்திரத்துக்கு முதலில் இரண்டு ரவுண்டு துருப்பு ஆடி, அவர்கள் துருப்புச் சீட்டுக்களைப் பிடுங்கிக்கொண்டான். அதன் பின் கிளப்ஸ் ஏஸையும் ராஜாவையும் நேராக ஆடி குல தெய்வத்தை வேண்டிக் கொண்டான்.

இரண்டாவது ரவுண்டில் ராணி, அசோக் குமாரிடமிருந்து விழுந்தது. திடீர் என்று உலகமே பளிச்சென்று ஆகி விட்டது. வில்லா உற்சாகமாகக் கை தட்டினாள். கச்சிதமாக ஆறு பண்ணி விட்டு, 'மேட் ஸிக்ஸ்' என்றான்.

விலாசினி வாயில் விரல் வைத்து 'உய்...உய்' என்று விசில் அடித்தாள். அசோக்கின் முதுகில் குத்தி, 'பாவி டபுளா பண்றே. சார்! நீங்கள் ரீடபிள் பண்ணியிருக்கணும்!'

'அதிர்ஷ்டம்! அஞ்சு கார்டு இருக்கு. டபிள்டன் க்வீனுக்கு ஆடறான். விழறது!'

'பர்ஸண்டேஜ் ப்ளே' என்றாள் விலாசினி.

'நான்சென்ஸ்! தி ஆட்ஸ் ஆர் எகய்ன்ஸ்ட் தி க்வீன் ஃபாலிங்.'

'அவன் ஒன்றும் அவ்வளவு ஆரம்பகால விளையாட்டுக்காரன் இல்லை என்று தெரிகிறது' என்றார் ஆர்கே.



விலாசினி அவனைப் பார்த்து, கண் சிமிட்டி, 'ப்ராவோ பார்ட்னர்' என்றாள்.

'என்ன இருந்தாலும் அப்படித் தடாலடியாக ஜம்ப் பண்ணக் கூடாது!'

'விக்கெட்!' என்றான் அசோக்.

அடுத்த தடவை எப்போது அவள் கை படும் என்று காத்திருந்தான்.

'அசோக், பம்பாயில் என்ன ஆச்சு?'

'கர்மார்கர் ஒத்துக்கொண்டுவிட்டான். ரிஸைன் பண்ணச் சொல்லிவிட்டேன்.'

'வெரி குட். பொய் சொன்னால் எனக்கு ஆகாது.'

'டாடி! ப்ளீஸ். ஆபீஸ் விஷயம் வேண்டாம்னு சொன்னேனில்லை?'

'ஸாரி மை சன்! யார் டீல்?'

ஆட்டத்தில் சிரத்தை கலைந்துவிட்டது. 'பொய் சொன்னால் எனக்கு ஆகாது? எஸ். பொய் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டால் என்ன ஆகும்? பொய்யை நிஜமாக்கு. எப்படி?'

'ஏய் விக்ரம்!'

விலாசினி அவனை எழுப்பினாள். 'ஒன் நோ ட்ரம்ப் கூப்பிட் டிருக்கேன்.'

'டு கிளப்ஸ்.'

'ஸ்டேமன்?' என்றான் அசோக்.

விலாசினி அந்த நாலு ஸ்பேட் காண்ட்ராக்டை ஆடிக் கொண்டிருக்க, அவளது நளினமான நகப் பூச்சற்ற விரல்கள்கூட அவனுக்குக் கிறக்கத்தைத் தந்தன.

ஆர்கே இன்வைட்ஸ்!

ராதாகிருஷ்ணன் தன் இரண்டாவது மகள் விலாசினியின் திருமணத்துக்கு உங்களை அன்புடன் அழைக்கிறார். மணமகன்

விக்ரம்! பொய்யை மெய்யாக்கு! எல்லாப் பொய்யும் ந
திருமணத்தில் அடிபட்டுப் போய்விடும். அதுதான் பொய்
மெய்யாக்குவது!

'ரெண்டு பேரும் நல்ல ஜோடி' என்றார் ஆர்கே. 'ரெண்டு ஜ
ஜெயிச்சுட்டீங்க.'

'ரப்பர் பிரிட்ஜ்ல எப்போதும் குருட்டு அதிர்ஷ்டம் உதவு
இன்னிக்கு கார்டே வரலை' என்றான் அசோக்.

'ஃபார் எ சேன்ஜ், உன்னைவிட அவன் நல்லா ஆடினான்
ஒத்துக்கயேன்?'

'நல்லா ஆடினா ஒத்துக்கலாம்.'

'யு ஆர் இம்பாஸிபிள், அசோக்.'

'மறுபடி வா. இன்னொரு ஆட்டம்.'

'வேண்டாம் அசோக்! நான் உன்னுடன் தனியாகப் பே
வேண்டும். விக்ரம் உனக்கு அவசரமில்லையே? என் பெ
ணுடன் பேசிக்கொண்டிரு. நாங்கள் உள்ளே போகிறோம்.'

'விலாசினி! நீங்கள் நல்லா ஆடினிங்க.'

'ரிஸ்க் எடுத்துட்டு பிட் பண்ணேன். நீங்ககூட அப்பா சொன்ன
மாதிரி, பிகினர் இல்லை.'

'ஏதோ ஆடினேன். இன்ஸ்பிரேஷனும் இருந்தது.'

'அப்படியா?'

'நீங்க எதிர்த்தாப்பல இருந்தது!'

'ஓ ஷக்ஸ்! இது ரொம்ப பழங்காலத்து அப்ரோச். பெண்கள் இப்ப
எல்லாம் இதுக்குச் சிக்க மாட்டாங்க.'

'உங்க அப்பா மாதிரியே பேசறிங்க.'

'நீங்க நல்ல பிரிட்ஜ் ப்ளேயர். மோசமான காதலன்! நீங்க ஏதோ
எங்கிட்ட சொல்ல விரும்பறீங்க. காதல் கீதல்னு ஆரம்பிக்கா
தீங்க.'

'உண்மையைச் சொல்லப்போனா அதான்.'



'மேல சொல்லுங்க, எப்படி அது? விலாசினி நான் உன்னைப் பார்த்த கணத்தில் இருந்தே மனசைப் பறி கொடுத்துட்டேன். நீயில்லாம நான் ஒரு கணம்கூட வாழ முடியாது. எட்ஸெட்ரா, எட்ஸெட்ரா, அப்படித்தானே? ஆல் தட் புல் ஷிட்.'

'முன்னாலேயே கேட்டிருக்கிங்களா?'

'நிறைய தடவை!'

'ஸாரி, நான் இனிமே கேக்கலை.'

'சொந்தச் சரக்கா, ஏதாவது புதுசாச் சொல்லுங்க. இதுக்கு அசோக் பரவாயில்லை. 'ஹௌவ் எபவ்ட் எ க்விக் லே ஸ்வீட் ஹார்ட்!'னு அப்பட்டமாகக் கேட்டான்.'

'ஜீஸஸ்!'

'இப்ப நீங்க ஜீஸஸ்னு சொல்றதே போலித்தனமானது. 'கடவுளே'ன்னு சொல்லுங்க. இல்லை. அங்காள பரமேஸ்வரி.'

'உங்ககூடப் பேசறது ரொம்ப கஷ்டம். எது சொன்னாலும் தப்பு கண்டுபிடிக்கறிங்க. நான் சொல்ல விரும்பினது அசோக் குமார் அப்படி உங்களை அப்பட்டமாகக் கேட்டிருக்கக் கூடாது. ஷாக்கிங்!'

'ஷாக்கிங்! ஆனா பொய் சொல்லலை. அவன் மனசில் இருக்கறதைக் கேட்டுட்டான். நான் என்ன பதில் சொன்னேன் தெரியுமா?'

'என்ன?'

'நாட் வித் யு, யு பெங்காலி பாஸ்டர்ட்! என்றேன். அவ்வளவுதான். தீர்ந்து போச்சு விவகாரம். வி ஆர் ஃப்ரெண்ட்ஸ்.'

'நல்ல வேளை, இது உங்கப்பாவுக்குத் தெரிந்திருந்தால் அவன் வேலை போயிருக்கும்.'

'அப்பாவிடம் எதற்குச் சொல்லவேண்டும்? ரொம்பச் சின்ன விஷயம். அப்படியே சொன்னாலும் அவனை வேலையிலிருந்து நீக்க மாட்டார். அசோக், அப்பாவின் வலது கை. போன வருஷம் அவனால் மட்டும் கம்பெனிக்கு முப்பத்தெட்டு கோடி ரூபாய் லாபம். அவனை டைரக்டராக்கப் போகிறார்!'

‘கேள்விப்பட்டேன்.’

‘ஸாரி! நான் கொஞ்சம் ப்ளண்ட்டாகப் பேசுவேன். உங்களுக்கு என்மேல் கோபமில்லையே?’

‘சேச்சே! நான்தான் மன்னிப்பு கேட்கணும். அசடு வழிந்ததற்கு.’

‘பிரிட்ஜ் ஆடினால் போதும். காதல் வேண்டாம்!’

‘யு ஆர் ரப்பிங் இட் இன்.’

‘ஸாரி! எனக்கு ஆண்கள் அத்தனை பேர் மேலும் பொதுப் படையான சந்தேகம். தந்தை ரொம்பப் பணக்காரரா இருப்பதால் வரும் வினை இது. என்னை ரொம்ப அழகுங்கறாங்க. ரொம்ப புத்திசாலிங்கறாங்க. என்னைவிட அழகா, புத்திசாலியா எத்தனையோ பெண்களை அவங்களே சந்திச்சிருப்பாங்க. ஏன் கூசாமப் பொய் சொல்லணும்? ஐம் நாட் இன்டெலிஜன்ட். பட் ஐம் நாட் டம்ப். எதுக்காக அவங்க என்னைப் புகழறாங்கன்னு எனக்கு சுலபமாகத் தெரிஞ்சுடுது! கொஞ்சம் ஸினிக்கலாக்கூட ஆய்ட்டேன். அதனால...’

அசோக் குமார் மட்டும் வெளியே வந்தான். ‘வில்லா, உன்னை அப்பா கூப்பிடுகிறார். விக்ரம் வா.’

காரில் விக்ரம் பேசவில்லை. அசோக் உற்சாகமாக இருந்தான். ‘ஆர்கே சரித்திரம் படைக்கிறார். டைரக்டர்! மை காட்! என்னால் நம்பவே முடியவில்லை.’

‘உங்களுக்கு சீனியர்கள் இருக்கிறார்களா?’

‘பத்து பேர். ஐம் தி யங்கெஸ்ட்! அத்தனை பேரையும் ஒதுக்கி எனக்குக் கொடுக்கப்போகிறார்.’

‘அவர்கள் எல்லாம் கோபித்துக்கொண்டு ராஜினாமா செய்து விட்டால்?’

‘அதான் ஐடியா! அப்படி ராஜினாமா செய்தால் ஆர்கே சந்தோஷப் படுவார். உன்னையும் என்னையும் போல் இள ரத்தங்களை ஏற்றி கம்பெனிக்கு உயிரூட்ட முடியும். யாராவது ராஜினாமா என்று ஆரம்பித்தால்கூடப் போதும். உடனே ஒப்புக் கொள்ளப்படும்.’ சிரித்தான். ‘கேள், என் இனிய நண்பனே. இந்த நாட்கள்



இளைஞர்களுக்காக. உனக்கும் இந்த கம்பெனியில் நல்ல எதிர்காலம் இருக்கிறது. ஜஸ்ட் ஸ்டிக் அரௌண்ட். பழைய ஆசாமிகள் எல்லாம் ஒவ்வொருத்தரா ரிடையர் ஆகிவிட, அல்லது செத்து விழ, ஐந்து வருஷத்தில் மேலிடம் முழுவதும் காலியாகி விடும். லெட்ஸ் ஸெலிபரேட் தி நியூஸ்! வா, என்னுடன் வா! பங்களூரில் சில வினோதப் பிரதேசங்களைக் காட்டுகிறேன்.’

‘அசோக், ஐம் எ லிட்டில் டயர்ட்.’

‘எல்லாக் களைப்பையும் நீக்குகிறேன் வா.’

‘இப்போதேயா? மணி என்ன தெரியுமா?’

‘மத்தியானம் மூன்று! சாயங்காலம் ஐந்தரைக்குக் கிளம்பு கிறோம். அதுவரை என் அறைக்கு வந்து கொஞ்ச நேரம் தூங்கு. அப்புறம் புறப்படலாம்.’

‘வேண்டாம் என்று சொன்னால் என்னை நீ விடப் போவதில்லை.’

‘இதோ பார்! உனக்கு வேலை கிடைத்ததற்கே நான்தான் காரணம். உன் போட்டோவைப் பார்த்து உன் முகத்தில் ஒரு இன்னொ சன்ஸ் இருக்கிறது என்று எத்தனையோ எம்.பி.ஏக்களுக்கு மத்தியில் உன்னை நான் தேர்ந்தெடுத்தது உன் முகத்தின் அதிர்ஷ்டம்.’

‘அப்படியா?’

‘அதனால் உனக்கு வேலை கொடுத்தவனுக்கு விசுவாசமாக இரு. வா.’

மாலை ஆறு மணிக்குப் புறப்பட்டார்கள். முதலில் ப்ளூ ஃபாக்ஸ் போனார்கள். சின்னதாக ஒரு விஸ்கி வாங்கிச் சப்பிக் கொண் டான். குச்சியால் குத்திக் குத்திச் சாப்பிடும்படியாக பாலேட்டுக் கட்டியில் ஏதோ ஒன்றை ஆர்டர் செய்தான்.

‘டின்னர் சார்!’

‘நாட் நௌ. வில் கம் லேட்டர்.’

அங்கிருந்து க்வாலிட்டி போனார்கள். மற்றொரு விஸ்கி. மாமிசத்தில் வறுத்த பக்கோடா இரண்டு பிளேட். அங்கிருந்து

உச்சாணிக்கு லிஃப்டில் பயங்கர வேகத்தில் ஏறி டாப் காபி, அடிவாரத்தில் சஞ்சரிக்கும் பங்களூரைப் பார்த்துக்கொண்டே மற்றொரு விஸ்கி.

'எதற்காக இப்படி இடத்துக்கு இடம் தாவுகிறாய்?'

'இல்லை என்றால் கொஞ்சம் அளவுக்கு அதிகமாகக் குடித்து விடுவேன்.'

'அசோக்! எதற்காக இவ்வளவு குடிக்கிறாய்?'

'இன்றைக்கு ரொம்ப சந்தோஷமாக இருக்கிறேன். அதனால்.'

'அதிக துக்கத்துக்கும் அதிகம் குடிப்பதாகச் சொன்னாய்?'

'அதான் இதில் அழகு! துக்கத்துக்கும் குடிக்கலாம். சந்தோஷத்துக்கும் குடிக்கலாம்!'

'வேற ஏதாவது காரணம் இருக்கவேண்டும்.'

'புல் ஷிட். ஐ ஜஸ்ட் என்ஜாய் மை டிரிங்க், மேன்.'

'உட் யு லைக் டு ஆர்டர் டின்னர், சார்?'

'நோ, ஐம் கோயிங் டு அஷோக்கா' என்று விக்ரமைப் பார்த்துக் கண் சிமிட்டினான்.

'யு ஆர் தி லிமிட்.'

'இன்னும் பார்! தி நைட் இஸ் யங்.'

'இதுவரை மொத்தம் மூவாயிரத்து எட்டு ரூபாய் நாற்பது பைசா செலவழித்திருக்கிறாய்.'

'இன்னும் ஐயாயிரத்தைத் தாண்டவில்லையா. சரிதான். லெட் மீ ஹவ் ஒன் மோர் ஸ்காட்ச்!'

'அசோக், ப்ளீஸ்! போதும், உடம்பு கெட்டுப் போய்விடும்.'

'டோண்ட் ப்ரீச், யூ பாஸ்டர்ட்!'

'நான் உபதேசம் செய்யவில்லை.'

'எனக்கு என்னைத் தாங்க முடியும். எப்போது நிறுத்த வேண்டும் என்று தெரியும். வெய்ட்டர் பில் ப்ளீஸ்.'



'ஸாரி, நன் ஆஃப் மை பிஸினஸ்.'

அசோகாவின் மேல் மாடியில் ஏராளமான மெனுவைப் பார்த்துச் சிக்கலாக ஆர்டர் செய்தான். மேஜை மேலேயே அடுப்பைக் கொண்டுவந்து ரத்தச் சிவப்பில் என்னத்தையோ வதக்கி ஆவி பறக்கத் தந்தார்கள்.

வெளியே வந்தபோது மணி பதினொன்று. 'வீட்டுக்குப் போக லாமா?' என்றான் நம்பிக்கையின்றி.

'நௌ வி வில் கோ டு எ டிஸ்கோ, அண்ட் தென் டு எ ப்ராஸ்டிட்யூட்!'

'ஓ நோ!'

'ஓ எஸ்!'

கதவைத் திறந்ததும் சங்கீதம் தாக்கியது.

One way Ticket

One way Ticket

One way Ticket to the moon

இருட்டில் வர்ணங்கள் எதிர்பாராமல் பளிச்சிட்டன. இப்போது வெளிர் நீலத்தில் ஒளிர்ந்த பெண் ஒரு கையுதறலில் மறைந்து கரும் பச்சையில் வெளிப்பட்டாள். ஸ்ட்ரோபோஸ்கோப் நடனிகளைத் துண்டு துண்டாக வெட்டியது. புகையில் இருந்த மெலிய காரலில் ஓப்பியம் கலந்திருந்தது.

'டான்ஸ் பண்ணலாமா?'

'அய்யயோ! எனக்குத் தெரியாது.'

'இங்கே ஒருத்தருக்கும டான்ஸ் தெரியாது! சும்மா இடுப்பை ஆட்ட வேண்டும். அவ்வளவுதான்.'

'நான் வரவில்லை, ஸாரி!'

'வராவிட்டால் போ!' என்று எழுந்து அந்த நடுப் பிரதேசக் குழப்பத்தில் கலந்துகொண்டான். திடும் திடும் அதிகமாக, விளக்குகளுக்குப் பைத்தியம் பிடித்துக்கொள்ள, விக்ரம் அந்த வட்டாரத்தைப் பார்வையிட்டான்.

எதிரே ஒரு நேப்பாளிய முகத்தவன் தலைமேல் கை வைத்துக் கொண்டு, அந்த இடத்து நிகழ்ச்சிகளில் மருந்துக்கும் பங்கேற் காமல் தனக்குள் சிரித்துக்கொண்டிருந்தான்.

ஒரு முறை விக்ரமின் பால் திரும்பி, 'ஐம் ஸ்டோன்ட்' என்றான்.

அசோக் அனாயாசமாக, தன் பைக்குள் இருக்கும் சில்லறை எல்லாவற்றையும் உதறி உதறி உதிர்க்கும் நோக்கம் உள்ளவன் போல் ஆடுவது சிரிப்பாக இருந்தது.

இரவு பன்னிரண்டரை மணிக்கு பழைய மெட்ராஸ் ரோட்டில் புதிதாகப் பிறந்துகொண்டிருக்கும் காலனியில் தனி வீட்டில் காரை நிறுத்தி, 'டுட்' என்று சிக்கனமாக ஹார்ன் ஒத்தினான். நிசப்தமாக இருந்தது வீடு. சற்று நேரம். கதவு திறந்தது. யாரும் வெளியே வரவில்லை. திறந்த கதவு காத்திருந்தது. 'வா.'

'அசோக் நீ போ! நான் காரிலேயே இருக்கிறேன்.'

'நான்சென்ஸ்! யு ஆர் கமிங்.'

'அசோக், வேண்டாம் ப்ளீஸ், நீ போ.'

'கமான், பி எ ஸ்போர்ட்! நீ ஒன்றும் செய்யவேண்டாம். ரீடர்ஸ் டைஜஸ்ட் படித்துக்கொண்டிரு. வா, அதிக நேரம் கதவு திறந்திருக்காது.'

தயங்கித் தயங்கி அவன் பின் சென்றான். அவர்களை வாங்கிக் கொண்ட கதவு மூடிக்கொண்டது. நவீன வீட்டின் வரவேற்பறை போல இருந்தது. சோபா சாய்மானம் சௌகரியமாகப் போடப் பட்டு, அசோக் சொன்னதுபோல் ரீடர்ஸ் டைஜஸ்ட், ஏன் பவன்ஸ் ஜர்னல் என்று எல்லா பத்திரிகைகளும் இருந்தன. சுவரில் அழகான சித்திரங்களில் குழந்தைகள் சிரித்தன. மெல்லிய இசை கேட்டது.

'எப்படி இடம்?' என்று பவன்ஸ் ஜர்னலைப் புரட்டிக் கொண்டே கேட்டான் அசோக்.

'ஆர்கேயின் வீட்டை விடப் பெரிதாக, சுத்தமாக இருக்கிறது.'

'க்ளீன் கர்ள்ஸ்! மாசா மாசம் மெடிக்கல் செக்! காலேஜ் கர்ள்ஸ்! பட் அ லிட்டில் காஸ்ட்லி!'



'வாங்க அசோக்!'

'திஸ் இஸ் மை ஃப்ரெண்ட்! ஹாய் ஸ்வீட் ஹார்ட்!' நிதானமாக ஒரு பெண் நடந்து வந்து அசோக்குக்கும் விக்ரமுக்கும் நடுவில் ஸ்வாதீனமாக உட்கார்ந்தாள். அசோக் அவள் தொடை மேல் கை வைத்து எடுக்காமல் இருக்க விக்ரமுக்கு ரத்தம் சூடாகியது. அவளுக்குச் சற்று ஒதுங்கிக்கொண்டான். செண்ட் வாசனை மூக்கில் விளையாடியது. இளமையிலோ அல்லது சட்டை, பேண்ட் அணிந்திருந்த அலட்சியத்திலோ, ஏதோ ஒரு விதத்தில் அவள் விலாசினியை ஞாபகப்படுத்தியது வயிற்றுக்குள் கலவரப்படுத்தியது.

'விக்ரம், ஆர் யு ஷ்யூர், யு வாண்ட் டு ரீட் பவன்ஸ் ஜர்னல் ஒன்லி.'

'ஷ்யூர்' என்றான்.

'பிஸ் ஆஃப்' என்று சொல்லி விட்டு அவளை அழைத்துக் கொண்டு திரையைக் கலைத்துக்கொண்டு உள்ளே சென்றான்.

அந்த மாதம் முழுவதும் ஆபீஸில், அசோக் அடுத்த போர்ட் மீட்டிங்கில் புதிய டைரக்டராகப் பிரரோபிக்கப்படப்போவது பற்றியே பேச்சாக இருந்தது. விட்டல், 'இது அநியாயம்' என்றார். சீனியாரிட்டி பிரகாரம் விட்டலின் மேலதிகாரி காமேஸ்வர் ராவ்தான் டைரக்டராக வேண்டும். ராவ் கோபத்தில் லீவு எடுத்துக்கொண்டு காக்கிநாடா போய் விட்டார். பம்பாய் ஆபீஸிலிருந்து ஒரு பார்ஸி தோத்திவாலா, ஏரோப்ளேனில் வந்து உடனே ஆர்கேயைப் பார்த்து, 'இது அநியாயம்' என்றான். தந்திகள் வந்தன. காமேஸ்வர் ராவுக்குப் பக்க பலமாகச் சில ஆபீஸ் ஆசாமிகள் சுவர்களில் 'பச்சாக்களுக்கெல்லாம் பெரிய பதவியா?' என்று சிவப்பில் சிந்தச் சிந்த எழுதினார்கள். ஆர்கே இதற்கெல்லாம் மசியவில்லை.ஈஸ்வரன் கம்மென்று இருந்தார். அவர் எந்தக் கட்சி என்று சொல்ல முடியவில்லை. அசோக் இதைப்பற்றிக் கவலையே படவில்லை. எல்லாம் ஒரு மாசத்துக் குள் அடங்கி விடும். 'இந்தக் கம்பெனியைப் பொருத்தவரை ஆர்கேதான் பிரம்மா, விஷ்ணு, சிவன். ஷேர்களின் பெரும் பகுதி அவரிடமும், அவர் இரண்டு பெண்களிடமும் இருக்கின்றன. அவர் தீர்மானித்து விட்டார். அதற்கு மறு பேச்சில்லை.'

'அசோக், ஒர்க்கஹாலிக் என்றால் என்ன தெரியுமா?'

'என்ன?'

'நீதான்!'

சிரிப்பான். ஒரு நாள் அவன் வேலை செய்வதை, பழக்கம் இல்லாதவர்கள் பார்த்தால் பைத்தியம் பிடித்துவிடும். டெலிபோனைத் தோளுக்கு இடையில் அழுத்திக்கொண்டு பம்பாய் சொல்வதை 'எஸ், எஸ்' என்று ரெகித்துக்கொண்டே, லலிதாவிடம் ஒரு லெட்டரை டிக்டேட் செய்து கொண்டிருக்கும் போதே, மற்றொரு டெலிபோன் அடிக்க ஆர்கே ஏதாவது கேட்பதற்கு பதில் சொல்லிக்கொண்டே, இடையே செருகப்பட்ட காகிதத்திலும் கையெழுத்திடுவான். மூன்று பேர் மேஜையருகில் காத்திருப்பார்கள்.

அவன் குடித்தால் என்ன? பவன்ஸ் ஜர்னல் படித்தால் என்ன? ஆர்கே நியமிக்கப் போவது ஒரு டாக்டர் இல்லை. ஒரு டைரக்டரை.

மறுபடி சிரிப்பு. இந்தச் சம்பிரதாயத்தில்தான் உன்னை வளர்க்க விரும்புகிறேன் விக்ரம். நான் மேலே போனால் இந்த சீட்டின் அவஸ்தைகளை என்னால் உடன் கொண்டு போக முடியாது. அங்கே தேவைப்படுவது கார்ப்பரேட் ப்ளானிங்! மை காட். இந்த கம்பெனியில் என்ன என்னவெல்லாம் செய்ய முடியும் தெரியுமா! டாடா, பிர்லாவுக்கெல்லாம் ஆட்டம் காண்பிக்கலாம். அதற்கு எனக்கு ஒரு சரியான சகாயன் வேண்டும். நீதான்!'

'ஆ! அசோக் உன் அளவுக்கு என்னால் வர முடியாது.'

'முடியும்! உன்னிடம் ஆரம்ப சாத்தியங்கள் இருக்கின்றன. உன்னைப் பற்றி ஆர்கேயிடம் சொல்லி வைத்திருக்கிறேன். நான் டைரக்டரானதும் பார்.'

'நீ ஏன் குடிக்கிறாய் என்று இப்போது புரிகிறது. இல்லாவிட்டால் உன்னால் ஆபீஸை மறக்க முடியாது.'

'ர்ர்ரைட் யு ஆர்! அதே போலத்தான் செக்ஸ்! அது ஒரு அனாவசியத் தொந்தரவு. இதற்குப் போய் கல்யாணம், குழந்தை என்று எதற்காக நம் வாழ்க்கையைச் சிக்கலாக்கிக் கொள்ளவேண்டும்? ஹார்மோன்கள் தொந்தரவு செய்தால் இருக்கவே இருக்கிறது... என்ன? பவன்ஸ் ஜர்னல்!'



பேசிக்கொண்டிருக்கும்போது ஈஸ்வரன் வந்தார். 'அசோக், நான் உன்னுடன் ஒரு நிமிஷம் பேசவேண்டும்.'

'பேசுங்கள், ஈச்சு!'

'தனியாக.'

'விக்ரம் இருக்கலாம்! அவன்தான் என்னிடமிருந்து பொறுப்பேற்கப் போகிறான்.'

ஈஸ்வரன் சற்றுத் தயங்க, விக்ரம் 'அசோக், நான் அப்புறம் வருகிறேன்' என்றான்.

'சேச்சே, அப்படி என்ன ரகசியம்? நீ இருக்கலாம். சொல்லுங்கள், ஈஸ்வரன்.'

ஈஸ்வரன் திடீரென்று தீர்மானித்தவர்போல், 'அசோக், என்னை வேறு டிபார்ட்மெண்டுக்கு மாற்றி விடு!'

'ஏன்?'

'என்னாலே விக்ரமுக்குக்கீழ் வேலை செய்ய முடியவில்லை.'

'ஏன்? விக்ரம் நல்ல பையனாச்சே!'

'அவன் முறைகள் எனக்குப் பிடிக்கவில்லை. அவன் என்னை நடத்தும் விதம் எனக்குப் பிடிக்கவில்லை. என் அனுபவத்துக்கு இந்த ஆபீஸில் மதிப்பே இல்லை! என்னை மாற்றிவிடு!'

'மிஸ்டர் ஈஸ்வரன்! எல்லோரும் அவரவர் நினைத்தபடியே வேலை அமைந்துவிட்டால் அந்த இடத்துக்குப் பெயர் என்ன தெரியுமா? சொர்க்கம். வாங்குகிற சம்பளத்துக்கு, கொடுத்த வேலையைச் செய்யவேண்டும் என்று ஒரு கடமை இருக்கிறதல்லவா?'

'இருக்கிறது. ஆனால், டிக்னிட்டி என்ற ஒன்று...'

'வாட் டிக்னிட்டி மேன்! இப்போது ஆர்கே என்னை மலத்தை அள்ளச் சொன்னால் அள்ளுவேன்! ஏன்? அவர் என் பாஸ்! அவர் சொல்வதைக் கேட்பதற்கு எனக்குக் காசு கொடுத்து என்னை ஏர்கண்டிஷன் பண்ணி வைத்திருக்கிறார். விதிவசமாக விக்ரம்

உங்கள் பாஸ்! அவன் சொல்வதை நீங்கள் கேட்டுத்தான் ஆக வேண்டும்.'

'ஏன் மாற்றல் கிடையாதா?'

'உன் பெண்டாட்டியை மாற்றிக்கொண்டு வாரும். அப்புறம் உம்மை மாற்றுகிறேன்!'

ஈஸ்வரனின் கன்னத்துத் தசைகள் துடிக்க ஆரம்பித்தன. 'திஸ் வாஸ் நாட் நெஸஸரி, அசோக்!'

'மிஸ்டர் ஈஸ்வரன்! உங்களுக்கு உங்கள் வேலை பிடிக்கவில்லை என்று சொல்லுங்கள். உடனே ராஜினாமா செய்துவிட்டுப் போகலாம். செய்கிறீர்களா?'

'அசோக். ப்ளீஸ்! டோண்ட்! வேண்டாம்!'

'நாட் அட் ஆல். இந்த மாதிரி ஒரு மாற்றலை அனுமதித்தால் நூறு கிளம்பும். சில சமயம் இந்த மூர்க்கத்தனம் தேவை.'

'அவருக்கு என்மேல் ஆரம்பத்திலிருந்தே வெறுப்பு.'

'வெறுப்பு உன்மேல் இல்லை! நான் கொண்டுவந்திருக்கும் புதிய அமைப்பின்மேல் பழமையின் வெறுப்பு இது.'



# 4

'ஆர்கே இன்வைட்ஸ்!' தங்கச் சிறகு முளைத்த எழுத்துக்கள்.

'ஆர்கே டவர்ஸில் நடக்கும் காக்டெயில் பார்ட்டிக்கு விக்ரமை அழைத்த வரிகள். ஆர்கே டவர்ஸ்! இதுவரை அவன் நுழைந்திராத உச்சி மாடி சாம்ராஜ்யம். கட்டடத்தின் தரையில் மெத்தென்ற கனவுலகம். டைரக்டர்களுக்கு மட்டுமே அனுமதி யுள்ள பிரதேசம். அங்கே என்னையும் அழைத்திருக் கிறார். போர்டு மீட்டிங்குக்கு முதல் நாள். ஆர்கே அசோக் குமாரின் பெயரை அறிவிக்கப் பேகிறார். அவன் ஏற்றுக்கொள்ளப்போகும் டைரக்டர் பதவி, ஆர்கேக்கு ரொம்ப நெருக்கமான பதவி. ஏறக் குறைய அடுத்த வாரிசை ஆர்கே நியமித்துவிட்டார் என்றே சொல்லலாம்.

அசோக் குமார் நாள் முழுவதும் உற்சாகத்தில் துள்ளி னான். பரபரப்புடன் இருந்தான். பேசும்போது அவன் கவனம் வேறெங்கோ திரிவதையும், கண் ணில் மை இட்டாற்போல் கனவு படிந்திருப்பதை யும் கவனித்தான்.

'டென்ஸா இருக்கே, அசோக்.'

'நோ, ஐம் ஆல்ரைட்.' அப்போதுதான் பற்ற வைத்திருந்த முழு சிகரெட்டைக் கொடூரமாக அணைத்து உடனே மற்றொன்று பற்ற வைத்தான். 'எல்லா டைரக்டர்களும் வருவார்களா?'

'ஆம்! புராதனப் பொருள்கள் யாவரும் வருவார்கள். அவர்கள் ஆர்கேயை அடி வருடுவதைப் பார்க்க வேடிக்கையாக இருக்கும். எல்லோரும் ஆர்கே கேட்டால் அவர் முன்னாலேயே பெண்டாட்டியைத் துகிலுரிப்பார்கள்.'

'பெண்டாட்டிகளும் வருகிறார்களா?'

'ஆம் பெரிய சர்க்கஸ். ஒன்றும் சகிக்கும்படியாக இருக்காது. கப்பூரின் மனைவியைத் தவிர. ஆனால், வாயைத் திறக்கக் கூடாது. முகம்மத் ரஃபி மாதிரி குரல்.'

'காக்டெய்ல் என்றால் என்ன செய்வார்கள்?'

'முதலில் எல்லோரும் இதுதான் உயிர் வாழக் கடைசி நாள் போலக் குடிப்போம். எட்டரை, ஒன்பது வரை. அப்புறம் சாப்பிடப் போவோம். என்ன சாப்பிடுகிறோம் என்று யாருக்கும் தெரியாது. எதையாவது கடிக்க வேண்டும். அப்புறம் தனி அறைக்குச் சென்று... நீதான் பார்க்கப் போகிறாயே!'

'பெண்களும் குடிப்பார்களா?'

'என்ன கேள்வி? ஒவ்வொருத்தியும் மடாக்குடி. சிகரெட் எல்லாம் உண்டு. ஷா என்று ஒரு டைரக்டர் இருக்கிறான். அவன் மனைவி கூடச் சுமாராக இருப்பாள். அவளை ஏதாவது கேட்டுவிடாதே. உடனே பாத்ரூமுக்கு அழைத்துக்கொண்டு போய் விடுவாள்!'

'வினோதமான மனிதர்கள் போல...'

'மனிதர்கள் இல்லை, சர்க்கஸ்!'

இரவு ஏழரை மணிக்கு ஆபீஸ் வண்டி வந்தது. அசோக் குமார் வெள்ளை வெளேர் சட்டையும், கருநீல ஸூட்டும் அணிந்து சற்று அட்டகாசமாக டை கட்டியிருந்தான். விக்ரம் தன் ஒரே எஃகு நிற ஸூட் அணிந்திருந்தான். லிஃப்ட் அருகில் தேவயானி உட்கார்ந்திருந்து, 'வெல்கம் வெல்கம்' என்றாள். மற்ற டைரக்டர்கள் ஒவ்வொருவராக கார் காராக வந்தடைய, வெண்ணுடைச் சேவகன் உடனே கதவைத் திறக்க, மனைவிகள் பிரமிக்கும் ஸில்க்குகளில் கிட்டத்தட்ட அழகாக இருந்தார்கள். அசோக்கைப் பார்த்ததும் அவர்களின் உதடுகள் இறுகின. புன்னகைகளில் விரோதம் கலந்திருந்தது. உச்ச வேக லிஃப்ட்டில் மாடிக்குச் செல்ல, ஆர்கேயின் அறைக்கு எதிராக இருந்த போர்டு ரூமைக் கடந்து திடீரென்று விகசித்த ஆர்கே டவர்ஸை அணுகினான்.



முக்கால் வட்டச் சொர்க்கம், முழங்கால் வரை கார்ப்பெட். எங்கிருந்தோ கசிந்து வந்த லால்குடி. குட்டியாக ஓரத்தில் ஒரு பார். அதில் தங்க தங்க திரவங்கள். நீலத்தில் விளையாடும் வெளிச்சங்கள். ஏற்கெனவே கைகளில், கண்ணாடிக் கோப்பைகளுடன் நடமாடிக்கொண்டிருந்தார்கள். 'ஹாய்' என்று பரிச்சயமான குரல் கேட்டது. திரும்பினான். வில்லா! அசோக் குமார் அவளைப் பார்த்து, 'ஸ்வீட் ஹார்ட், யு லுக் ராவிஷிங்' என்றான். விலாசினி ஸாரி அணிந்திருந்தாள். ஷிஃபான் அருவியாகக் கரும் பச்சையில் ஸாரி அணிந்திருந்தாள். அசாத்திய தைரியத்துடன் முதுகில் இறங்கின ரவிக்கை. தோள் எலும்புகள் தெரிந்தன. கழுத்தில் மெல்லிய தங்கச் சங்கிலியில் மரகதப் பச்சையில் கண்ணீர் தொங்கி மார்புடன் உறவாடியது.

'என்ன சாப்பிட்டுக்கொண்டிருக்கிறாய்?'

'கோக்! இண்டியன் கோக்!'

'ஒரு துளி ரம் சேர்த்தால் கலர் வித்தியாசம் தெரியாது.'

'சேர்த்திருக்கிறேன். ஹலோ விக்ரம்! அப்புறம் என்ன ஆளையே காணோம்?'

'வேலையில் பிஸியாக இருந்துவிட்டேன்.'

'அசோக்கின் இடத்தில் நீதான் என்று பேச்சு.'

'அப்படியா?'

'வில்...லா! மை சைல்ட்!' என்ற ஒரு டைரக்டரின் மனைவி வந்து, அவளை வாசனையாக அணைத்துக்கொண்டாள். ஒரு கையில் ஜின்னும் மற்றொரு கையில் வழிந்த புடைவையுமாக அவள் குனிந்தபோது அத்தனை மார்பகமும் சந்தேகத்துக்கு இடமில்லாமல் தெரிய, விக்ரமுக்கு நா உலர்ந்தது.

'அது யார் வில்லா?'

'ஸாரி! திஸ் இஸ் விக்ரம். புதுசாகச் சேர்ந்த எக்ஸிக்யூட்டிவ். இது மிஸஸ் கப்பூர்.'

'நைஸ் ஸீயிங்!' என்று எச்சில் விழுங்க, சாப்பிடும் பண்டம் போல அவனைப் பார்த்தாள்.

'எக்ஸ்க்யூஸ் மி' என்று வில்லா விலக,

அவளைப் பெண் என்று சொல்வதா, அம்மாள் என்று சொல்வதா! இரண்டுங்கெட்டான்! புடைவையைச் சரி செய்து கொள்வதை ஒரு வாரமாக மறந்தவள் போல, சிகரெட் எடுத்து உதட்டு நுனியில் வைத்துக்கொள்ள, 'அசோக், என்னைப் பற்ற வை' என்றாள்.

அசோக் உடனே லைட் எரித்து 'ப்ளெஷர்' என்றான்.

'அசோக், அடுத்த தடவை பம்பாய் போறப்ப வாயேன். கப்பூர் ஸ்டேட்ஸ் போறார்.'

'வந்தாப் போச்சு' என்று கண் சிமிட்டினான்.

அவள் மிதந்து செல்ல, 'அவளுக்குப் பதிமூணு வயசில் ஒரு பெண்! தங்கக் கட்டி! அவளைப் புஷ்பித்ததற்கு என் வலது கையைக் கொடுப்பேன். ஹல்லோ மதன்!'

பார்ட்டியில் சிநேகிதங்கள் மாறின. எல்லோரும் வாசலில் கண்ணுடன்தான் பேசினார்கள். ஆர்கே வரப்போகிறார். சீருடை சிப்பந்தி தட்டு நிறைந்த சாராய வகைகளுடன் அவர்கள் ஊடே நடந்தான். அசோக் ஏழாவது சொர்க்கத்தில் இருந்தான். அவன்தான் நடு நாயகன். பார்வைகள் அவன்மேல் தீற்றுவதையும் அவனைக் காட்டிக் காட்டி அவர்கள் பேசுவதையும் அவனுடைய ஓரக் கண் கவனித்தது. அறை முழுவதிலும் விரவியிருந்த மெலிதான செண்ட் வாசனையில் பொறாமை கலந்திருந்தது.

திடீரென்று அந்த இடத்தில் மௌனம் பரவியது.

ஆர்கே!

கழுத்துவரை பிடித்த க்ளோஸ் கோட்டு, பட்டனில் ரத்த ரோஜா, மிகப் படிய வாரப்பட்ட தலை மயிர். கச்சிதமான நடை. அங்கிருந்த பெரும்பாலானவரைவிடக் குள்ளமாகத்தான் இருந் தார். அவர் வந்தவுடன் சர்வ நோக்குகளும் ஆரம் அமைத்து அவரையே மையமாகத் தொடர்ந்தார்கள். மெதுவாக, தீர்மான மாக அவரைச் சுற்றி வட்டம் அமைக்க, அவர் கவனத்தைக் கவர சின்னச் சின்ன முயற்சிகள் செய்ய ஆரம்பித்தார்கள்.

'ஜென்டில்மென்! நீங்கள் எல்லாம் முழுவதும் குடித்துவிட்டு தன்னிலை மறப்பதற்குமுன் இன்றைய முக்கியச் செய்தியைச்



சொல்லி விடுகிறேன். நாளைய போர்டு கூட்டத்தில் ஒரு புது முகத்தை அறிமுகப்படுத்தப் போகிறேன். அசோக் குமார் என்னும் இளம் புயல்!'

அசோக் அருகே செல்ல, விக்ரம் தன்னிச்சையாகக் கை தட்டி னான். மற்றவர்கள் ஒவ்வொருவராகத் தயங்கித் தயங்கி சேர்ந்து கொள்ள கைத் தட்டல் ஒலி பெரிதாகி, கொஞ்ச நேரம் நின்று மெலிதாக மறுபடி விக்ரமின் ஒற்றைத் தட்டலுடன் ஓய்ந்தது.

எல்லோரும் அசோக்கை நோக்க, 'கமான் அசோக்! ஸே ஸம்திங்!' என்று வில்லாவின் குரல் கேட்க, அசோக் ஒரு தடவை கனைத்துக்கொண்டு, 'எனக்கு ஆர்கேயின் அசாத்தியத் துணிச்ச லான செயலைப் பார்த்து பயமாக இருக்கிறது. என்னிடம் ஏதோ இருக்கவேண்டும் என்றுதான் தோன்றுகிறது. இல்லை என்றால் இந்த வருஷங்களில் ஆர்கேயைச் சக்கையாக ஏமாற்றியிருக் கிறேன் என்று தோன்றுகிறது.'

'அதுதான் உண்மை' என்று ஆர்கே புன்னகையுடன் சொல்ல, எல்லோரும் அனாவசியத்துக்குச் சிரித்தார்கள். அசோக் உடனே, 'ஆனால், அது உண்மை இல்லை என்று நிரூபிப்பது என் முக்கிய மான முதற் பணியாக இருக்கும்.' இதற்கு ஆர்கே லேசாகக் கை தட்ட மற்ற டைரக்டர்கள் விசுவாசமாக, பலமாகக் கை தட்டினார் கள்.

'உங்கப்பா ரொம்பப் பெரிய ஆள்! ஜீனியஸ்' என்றான் விக்ரம் வில்லாவைப் பார்த்து.

'அப்படியா! அவரை முழுவதும் உனக்குத் தெரியாது.'

ஆர்கே, 'ஜென்டில்மேன்! இனி நீங்கள் குடிக்கப் போகலாம்!'

'ஹௌ எபவுட் யூ ஆர்கே?'

'குட் ஓல்டு ஆரஞ்ச் ஜூஸ்!'

'கமான், ஒன் ஸ்மால் விஸ்கி.'

'என் பெண் பார்த்துக்கொண்டிருக்கிறாள்! தொலைத்து விடுவாள்.'

'கமான் ஆர்கே! பி ஏ ஸ்போர்ட்.'

'நோ! நீங்கள் சாப்பிடுங்கள். நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். ஒரு விஸ்கி என்பது மூணு குலாப் ஜாமுனுக்குச் சமம் என்ற

டாக்டர் எச்சரித்திருக்கிறார். கம், லெட்ஸ் ஈட்.' எல்லாரும் புஃபே நோக்கிச் செல்லும் ஆர்கேயைத் தொடர்ந்தார்கள். போகிற போக்கில் அசோக்கின் கையைக் குலுக்கினார்கள்.

ஏராளமான வெள்ளி பேலாக்களில் சிக்கன் பழுப்பு ஆவியில் காத்திருந்தது. புலவரிசியின் மத்தியில் பட்டாணி, திராட்சையைக் கண்ணடித்தது. கோஃப்தா மிதந்தது. ஜிகினாப் பேப்பர் பளிச்சிட மற்றொரு மாமிச சமாச்சாரம். வரிசை வரிசையாக சப்ஜி காய்கறி வகைகள். நூடுல்ஸ் நெளி நெளி; சூப்பின் தக்காளி நுரை. அந்த இடத்தில் இருந்த இருபது பேருக்கு அறுபது பேரின் சாப்பாடு இருந்தது. பீங்கான் தட்டுக்களில் ஆர்கே மிகக் குறைந்த அளவே சாப்பிடுவதைப் பார்த்தான். அருகே அசோக்கும் அவனால் கடக்கப்பட்ட சீனியர் டைரக்டர்கள் இருவரும் சாப்பிடாமல் கவனித்துக் கொண்டிருந்தார்கள். வில்லா அவன் அருகில் வந்தாள்.

'என்ன, ஐஸ்க்ரீம் மட்டும்?' என்று கேட்டான் விக்ரம்.

'வேற ஏதாவது இங்க சாப்ட்டா எனக்குப் பேதி புடுங்கிக்கும். அப்பா இப்பவே கிளம்பிடுவார்.'

'கொஞ்சம் இரேன். நீயும் போகணுமா?'

'இங்க இருந்தா போர் அடிக்கும். எல்லாரும் ஆபீஸ் பேசுவாங்க.'

'டின்னர் முடிஞ்சதும் என்ன ஆகும்?'

'ஆம்பிளைங்கள்ளாம் தனியா பக்கத்தில் ஒரு ரூமுக்குப் பிரிஞ்சு போய்டுவாங்க. பொம்பளைங்க இன்னொரு ரூமுக்குப் போய் ரம்மி ஆடுவாங்க. ஹை ஸ்டேக்ஸ், காஸ்ஸிப் அண்ட் ஸ்மோக்.'

'ஆம்பிளைங்க ரூம்ல?'

'அங்க வேற விஷயம் நடக்கும். பாத்ததில்லை?'

'இல்லை!'

'பாரு. இண்ட்ரஸ்டிங்! நான் ஒரு தடவை அசோக் கூடத் தனியாப் பாத்திருக்கேன். போர் அடிச்சிப் போச்சு. நத்திங் லைக் தி ரியல் திங்.'

அவள் எதைப் பற்றிச் சொல்கிறாள்?



'விக்ரம், உன்னைக் கல்யாணம் செய்துக்கலாமான்னு சில சமயம் யோசிக்கறேன்.'

'எப்போதும் என் பதில் தயார்' என்றான்.

'என்ன பதில்?'

'பரிபூரண சம்மதம்.'

'என் சம்மதம். அதை நான் இன்னும் தீர்மானிக்கலையே! ஒரு ஸாம்பிள் பார்க்கலாமா?'

'என்னது?'

'கமான் விக்ரம், ப்ரிமாரிட்டல் செக்ஸைப் பத்தி கேள்விப் பட்டதே இல்லையா நீ?'

'கேள்விப்பட்டிருக்கேன். ஆனா, இவ்வளவு கிட்டத்தில் இருக்குன்னு நினைக்கலை.'

'விக்ரம், நீ வர்ஜினா?'

'லைக் ட்ரிவன் ஸ்னோ!'

'இண்ட்ரஸ்டிங்! ஐம் நாட் எ வர்ஜின் தெரியுமா?'

'இல்லைனாப் பரவாயில்லை.'

'விக்ரம். நீ என்ன செய்யறே. டின்னர் முடிஞ்சதும் நைஸா நழுவிடு. சத்தம் போடாம நேரா அப்பா ரூமுக்கு வா. அங்க இருந்து லெஃப்ட்ல திரும்பினா ரெஸ்ட் ரூம் ஒண்ணு இருக்கும். கதவைத் திறந்துண்டு உள்ள போய்க் காத்திரு. ஐ ல் ஜாய்ன் யு. லெட்ஸ் ப்ளே கேம்ஸ்! வரியா' என்று புன்னகை செய்துவிட்டு, அவனிடமிருந்து நழுவி, மற்ற லேடிகளுடன் இயல்பாகக் கலந்துகொண்டாள்.

விக்ரமுக்கு ரத்த அழுத்தம் இருநூறுகளை எட்டியிருந்தது. காது நுனி சுட்டது. விரல் நுனிகள் சில்லென்று மாற, நரம்புகளில் நிசப்த சங்கீதம் பரவ, லெட்ஸ் ப்ளே கேம்ஸ்! அந்தக் குரலில் இருந்த பெண்மையும் அழைப்பும் கிண்டலும் ஆர்வமும்...

ஆர்கே, 'வெல் பாய்ஸ், ஐம் ஆஃப்! என்ஜாய் யுர்ஸெல்ஃப். வில்லா, நீ யார்கூட வரே?'

'விக்ரம் வில் ட்ராப் மி, டாட்!' என்று விக்ரமைப் பார்க்காமலே சொன்னாள்.

'விக்ரம் சீக்கிரம் கொண்டுவந்து விட்டு விடு. ஓயாமல், நேரம் போவது தெரியாமல் அரட்டை அடிப்பாள்.'

ஆர்கே சென்றதும் அசோக் அவனிடம் வந்து, 'வா விக்ரம்! உனக்கு ஒன்று காட்டுகிறேன்.'

'நீ போ அசோக்!'

'இங்கே இனி ஆண் பிள்ளைகள் தங்க மாட்டார்கள். இருந்து பெண்களுடன் சீட்டாட விருப்பமா?'

'சேச்சே!'

வில்லாவைப் பார்த்தான். ஒரு டேபிளில் உட்கார்ந்து ஸ்வாரஸ்யமாகச் சீட்டாடிக்கொண்டிருந்தாள். அசோக்கின் பின் இஷ்டமில்லாமல் சென்றான். 'இவ்வளவு தூரம் ஆர்கே டவர்ஸ் காக்டெயில் பார்ட்டிக்கு வந்திருக்கே. விடியோ பார்க்க வேண்டாமா உனக்கு.'

'விடியோவா?'

'பாரேன்.'

டின்னர் மிச்சங்களைச் சேவகர்கள் அப்புறப்படுத்த, ஆண்கள் மறுபடி பாருக்குச் சென்று கோப்பைகளை நிரப்பிக்கொண்டு மேலோரத்தில் இருந்த ஒரு வாசலின் திரையை விலக்கிக் கொண்டு உள்ளே மறைந்தனர். பெண்கள் ஒரு சேர சீட்டாட்டக் கோஷ்டிகளாகப் பிரிந்துகொண்டனர். விக்ரம் அசோக்குடன் அந்த ஆண்கள் பகுதியில் நுழைந்தான்.

ஷாண்டலியர்கள் தொங்க அலங்காரமாக அமைக்கப்பட்ட சிறிய ஹால் அது. செங்கல் நிறக் கம்பளம் சுவருக்கு சுவர் விரிந்திருந்தது. நடுவே பிரம்மாண்டமான டெலிவிஷன் பெட்டி காத்திருந்தது.

எல்லோரும் தரையிலும் சோபாவிலும் அகப்பட்ட இடங்களில் உட்கார,

விக்ரமுக்குப் புரியத் தொடங்கியது.

அசோக்கைப் பார்த்தான்.



'இதுகூட உண்டா இங்க?'

'ஆர்கே டவர்ஸ்ல எல்லாக் கட்டளைகளையும் மீறலாம். ஒண்ணே ஒண்ணைத் தவிர, தெள ஷல்ட் நாட் பி ஃபவுண்ட் அவுட்! கவனி!'

விளக்குகள் அணைப்பதற்குமுன் அசோக்கின் கையில் கோப்பை இல்லாததைக் கண்டு ஆச்சரியப்பட்டு, 'என்ன அசோக், டிரிங்க்ஸ் ஏதும் கொண்டு வரலையா?'

'இல்லை. வயிற்றைக் கொஞ்சம் வலிக்குது. எக்ஸைட்மெண்ட் வேற! உடம்பு ஒரு மாதிரி ஃப்ளூ மாதிரி இருக்கு.'

'ரிலாக்ஸ் அசோக்! இட்ஸ் பீன் எ ஹெக்டிக் டே.'

'ரிலாக்ஸ் பண்றதுக்குத்தான் இங்க வந்திருக்கேன். இல்லைன்னா பொம்மை பாக்க வருவேனா? உண்மையானதைன்னா செய்துகிட்டு இருப்பேன்?'

திரையில் கலர் கலர் கீற்றல்கள் தோன்றி படம் ஸிங்க் ஆனதும் ஒரு பெண் சிரித்துக்கொண்டே காரிலிருந்து இறங்கினாள். காலிங் பெல்லை அழுத்த ஒரு வாலிபன் புன்னகையுடன் திறந்தான். 'ஹலோ எப்படி இருக்கிறாய்?'

'நன்றாக!'

'ஜேன் வரவில்லையா?'

'வருவாள்.'

ஆடியன்ஸிலிருந்து 'என்ன! பேசிப் பேசி மாய்கிறாய். சீக்கிரம் பெட்ரூம் போங்களேன்' என்று விமர்சனம் வந்தது. உயர் ரகச் சுருட்டுப் புகை மேகமாகப் பரவியிருந்தது! பெண் மாடிக்குச் செல்ல, அவன் அவள் செல்வதைக் கீழிருந்தே பார்க்க கேமரா அவனுடன் அவளைப் பார்த்தது. படிகளில் பானிஸ்டர் அனுமதித்த அளவு அவள் தொடைகள் தெரிய, அவள் அந்த மாதிரிப் படத்துக்குத் தயாராக உள்ளே ஏதும் அணியவில்லை என்பதும் அவ்வப்போது கண்ணாமூச்சி காட்டியது.

'அ! அப்படி வா' என்றது விமர்சனக் குழு.

'விக்ரம், ஒரு ஸாம்பிள் பார்க்கலாமா? லெட்ஸ் ப்ளே கேம்ஸ்!'

‘அசோக், எக்ஸ்யூஸ் மி.’

‘எங்கே போறே?’

‘பாத்ரூமுக்கு.’

‘நாட் தட் சூன் மேன்.’

சிரித்து அவனை முதுகில் தட்டி அனுப்பினான்.

உள் தாழ்ப்பாளைத் திறந்து டவருக்கு வந்தான். விலாசினி ஓரத்தில் இன்னும் சீட்டாடிக்கொண்டிருந்தாள். நேராக நடந்தான். எல்லோரும் ஆட்டத்தில் கவனமாக இருக்கக் கண்ணாடிக் கதவைத் திறந்து மூடும்போது விலாசினி அவனைக் கவனிப்பதைப் பார்த்தான். வெளியே நிசப்தமாக இருந்தது.

ஏர் கண்டிஷனில் வெளி உறுமல் கேட்டது. பெங்களூர் விளக்குகள் கண்ணாடி ஜன்னல்களுக்கு வெளியே மினுக்கின.

ஆர்கேயின் அறை மூடியிருந்தது. ஒரு கணம் ஆர்கேயின் ஞாபக பயக் கத்தி குத்தியது. விஷ விளையாட்டு இது! அந்தப் பெண் என் கயமைத்தனத்தைக் கண்டுபிடிப்பதற்கு ஏற்படுத்திய வலையாக இருக்கலாம். இது வேண்டாம்! இல்லை! என்னைப் பரிசோதிப்பதற்கு விளையாட்டுக் காட்டுகிறாள் போலும்!

ரெஸ்ட் ரூம் கதவு அவள் சொன்னதுபோல் திறந்திருந்தது.

உள்ளே செல்ல அதன் டோர் க்ளோஸர் அவனை வாங்கிக் கொண்டு மூடிக்கொண்டது. உள்ளே நெட்டையான டேபிள் விளக்கருகில் சோபா போடப்பட்டிருந்தது. மெலிசான பச்சையில் டிஸ்டெம்பர் அடித்து குள்ள மேஜை, கம்பளம், டெலிபோன். எதிரே இருந்த கதவைத் திறந்து பார்த்தான். உள்ளே பெரிய கட்டிலில் இரட்டைப் படுக்கை. சரியான இடம்தான்! விக்ரமுக்கு உதட்டு நுனியில் ‘நம நம’ என்றது. கை விரல்கள் அவன் மார்புச் சட்டையின் பட்டனை நிமிண்ட, எடை குறைந்தது போல் உணர்ந்தான். காத்திருந்தான். பத்திரிகைகள் இருந்தன. ஆர்கேயின் அறைக்கும் அந்த அறைக்கும் தொடர்புக் கதவு இருப்பதைப் பார்த்தான். மறுபடி நடுங்கினான்.

கதவு திறந்தது.



விலாசினி உள்ளே நுழைந்து உள் பக்கம் சாத்தினாள். தலை மயிரைத் தள்ளி விட்டுக்கொண்டு, ‘சொன்னபடியே வந்துட்டியே விக்ரம்’ என்றாள்.

விக்ரம் சோகையாகச் சிரித்தான். அவன் நாக்கு உலர்ந்திருந்தது.

‘ஏன் நெர்வஸா இருக்கே. ரிலாக்ஸ்!’

‘வில்லா, நான் வந்து... நான் வந்து...’

‘நீதான் வந்தாச்சே... இனி என்ன நான் வந்து.’

‘வில்லா நீங்க... நீ என்னை தப்பா நினைச்சுக்கக் கூடாது.’

‘சான்ஸே இல்லை. தப்பாத்தான் நினைச்சுப்பேன். இதை அப்பாகிட்ட கூடச் சொல்லப் போறேன்.’

‘அய்யய்யோ....’

கலகலவென்று சிரித்தாள். ‘விக்ரம், நீ நிஜமாவே இவ்வளவு இன்னொசண்ட்டா.’

‘நான்! ஒரு பெண்ணைத் தொட்டதுகூடக் கிடையாது.’

‘அப்ப தொடு பார்க்கலாம். எல்லாத்துக்கும் ஆரம்பம் இருக்கு இல்லையா.’

மெல்லக் கை நீட்டி, அவள் முழங்கையைத் தொட்டான்.

‘ப்ளூ பிலிம் எப்படி இருந்தது?’ அந்தக் கையை வாங்கிக் கொண்டு தன் மார்பின்மேல் வைத்துக்கொண்டாள். அவனை அழைத்துச் சென்று சோபாவில் உட்கார வைத்து, பக்கத்தில் உட்கார்ந்தாள். ‘ஐ லைக் யுர் ஃபேஸ் விக்ரம்! யாராவது இதுவரைக்கும் உங்கிட்ட நீ ஹாண்ட்ஸமா இருக்கேன்னு சொல்லியிருக்காளோ?’

‘இல்லை விலாசினி!’

‘விலாசினி! எங்கே மறுபடி கூப்பிடு!’

‘விலாசினி! விலாசினி!’ அவளிடம் இருந்த பர்ஃப்யூம் மணம் அவனைத் திகைக்க வைத்தது.

'நோ! நோ! என்னால் நம்ப முடியலை... நம்ப முடியலை.'

இப்போது அவள் அவனைச் சுதந்தரப்படுத்த, விக்ரம் அவள் தடைகள் சிலவற்றைக் கலைத்து, அவள் நிஜ சரீரத்தைத் தொட்டுப் பார்த்தான்.

'கிஸ் மி' என்றாள்.

மெல்ல அவள் உதட்டைத் தன் உதடுகளால் தேடினான். அவளது அதரங்களைப் பிரித்து மேலுதட்டைக் கடித்தான். ரம் வாசனை அடித்தது! சந்தித்தாள். எதிர்த்தாள். உதடுகளைப் புறக்கணித்து, அவளது மற்ற அங்கங்களில் கவனம் செலுத்தினான். முகவாயை முகர்ந்தான். கழுத்தின் கவிதை வளைவைப் படித்தான். மரகதம் குத்தியது. இப்போது விலகியிருந்த அவள் மார்பின்மேல் சாய்ந்தான். ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு வாசனையாக இருந்தாள். இப்போது அவன் கைகள் தைரிய சுயாட்சி பெற்று அபாயகரமான செயல்களில் இறங்க,

'விக்ரம் வா! அந்த ரூமுக்குப் போய்டலாம். இங்க அசௌகரிய மாக இருக்கு!'

அவள் அணிந்திருந்த கருநீல ஷிஃபான் கீழே கிடந்தது.

சிறிய அவளை, அப்படியே ஆட்டுக் குட்டி போலத் தூக்கி உள்ளே எடுத்துக்கொண்டு சென்றான். கைகளால் கழுத்தில் சங்கிலி கோத்துக்கொண்டாள். படுக்கையில் வைத்தான்.

'வா விக்ரம், வா சீக்கிரம். வா...'

'லைட்! லைட்!'

'வில்லா, வில்லு, வில்லி, வில்லோ!'

'வா. உன் முழுப் பளுவையும் தா.'

'வில்லா. எனக்கு பயமா இருக்கு.'

'ஐ டேக் பில்ஸ் வா! பயப்படாதே.'

'வில்லா! உன்னை இந்த நிமிஷமே கல்யாணம் செய்து கொள் கிறேன்.'

'முதலில் தேனிலவு. அப்புறம் கல்யாணம். வா! என்னைச் சேதப்படுத்து.'



அவள் மேல்... அவள்மேல் விக்ரம் அக்கிரமத் தாக்குதலாகப் பரவ, கதவுக்கு வெளியே பேச்சுக் குரல் கேட்டது. 'க்விக்! க்விக்! கால் தி டாக்டர்.'

படபடவென்று தட்டும் சப்தம் கேட்டது.

'டெலிபோன்! டெலிபோன்!'

வெலவெலத்து சட்டென்று உடைகளைச் சரி செய்து கொண் டான்.

விலாசினி ஸாரி அணிந்து கொண்டு, 'போய்ப் பார். ஏதாவது தீ விபத்தா?' என்றாள்.

'இல்லை! டாக்டர் என்கிறார்கள். யாருக்காவது உடல் நலம் பாதிக்கப்பட்டிருக்க வேண்டும்.'

தட தட என்று ஓடும் சப்தம் கேட்டது.

இருவரும் கதவருகில் சென்று கவனித்தனர். மறுபடி ஓட்டம்.

'என்னய்யா, என்ன ஆச்சு?' என்று ஒரு குரல்.

'ஹார்ட் அட்டாக் போல இருக்கு. கையெல்லாம் சில்லுனு இருக்கு. ரொம்பத் தவிக்கிறார்.'

'யாரு யாரு?'

'அவர்தான்... அசோக் குமார்!'

விலாசினி, 'அசோக்! ஸம்திங் ஹாப்பன்ட் டு அசோக். விக்ரம் க்விக்! கதவைத் திறந்து பாரு' என்றாள்.

'க்விக் விக்ரம்! டு தி பாத்ரூம். அங்கிருந்து அப்புறம் கிளம்பு. நான் நேராப் போய்டறேன்.'

விக்ரம் பாத்ரூமில் இருந்து வெளிப்பட்டபோது அவளைக் காணோம். டவரை நோக்கி நடந்தான். உள்ளே சென்றான்.

'கிவ் ஹிம் சோடா. லெட் ஸம்படி கால் ஆர்கே. மை காட், ஹி இஸ் டையிங்.'

'அசோக்! இதப் பாரு. நான்தான் விக்ரம்.'

ஒருமுறை கண் திறந்து 'விக்கி! வலி' என்றான். நெற்றிச் சுருக்கத்தில் வேதனைப் பின்னல்கள் தெரிந்தன. அவன் முகத்தைத் துடைத்தான். உடம்பு பூராவும் வியர்த்திருந்தது.

'அசோக், அசோக், யுல் பி ஆல்ரைட். யுல் பி ஆல்ரைட்.'

விலாசினிக்கு அவர்கள் எல்லோரும் மரியாதையுடன் வழிவிட அருகில் வந்து உட்கார்ந்து, 'வாட் ஹாப்பன்ட் விக்ரம்?' என்றாள்.

'தெரியலையே? ஹி இஸ் ஸஃபரிங்!'

'அசோக் அசோக்.'

'டு மச் ஸ்ட்ரெய்ன் தட் காட் ஹிம்!'

'யாராவது டாக்டருக்குச் சொல்லியிருக்கிங்களா?'

'கார் போயிருக்கு. போன் பண்ணியிருக்கு. இதோ இப்ப வந்துருவார்.'

டாக்டர் அவனைப் பரிசோதிக்க, விலாசினி நகத்தைக் கடித்துக் கொண்டு கவலை முகத்துடன் பார்த்துக்கொண்டிருந்தாள். 'உடனே இவனை ஹாஸ்பிடலுக்கு எடுத்துட்டுப் போகணும்.'

விக்ரம் டாக்டரிடம் 'இஸ் இட் ஸீரியஸ் டாக்டர்' என்று தாழ்வான குரலில் கேட்டான்.

'எஸ். ஐ ஸஸ்பெக்ட் எ கரானரி.'

'ஆர், என் ஆஞ்ஜினா பெக்டோரிஸ்!' என்றான் அசோக் லேசாக.

'அட, நீ கேட்டுக் கொண்டிருக்கிறாயா?'

புன்னகைத்தான். 'டாக்டர், இது வெறும் அஜீர்ணம்தான்.'

'ஐல் பி ஆல்ரைட் டுமாரோ. ஆபீஸில் நிறைய வேலை இருக்கிறது.'

'எங்கே அவன்?' என்று ஆர்கே பரபரப்புடன் உள்ளே நுழைந்தார்.

'ஹலோ ஆர்கே.'

'ஏய் அசோக், என்னடா பயங்காட்டுகிறாய்?'



'அஜீர்ணம்.'

டாக்டர் அவரைத் தனியாக அழைத்துப் பேசினார்.

டாக்டர் அவரைத் தனியாக அழைத்துப் பேசினார். 'ஆர்கே, அவர் சொல்வதை நம்பாதீர்கள்.'

அசோக் மெல்ல அழைத்துச் செல்லப்பட்டு, லிஃப்ட்டில் உட்கார வைக்கப்பட்டு காருக்கு மாற்றப்பட்டான். 'ஐம் ஆல் ரைட், எதுக்காக ஆஸ்பத்திரி போகவேண்டும்?'

'இட்ஸ் மை ஆர்டர்' என்று ஆர்கே அதட்டினார். கார் புறப்பட, 'இத்தனை நேரம் தாமதித்ததே பெரிய தப்பு. உடனே நீங்கள்ளாம் நர்ஸிங் ஹோம் அனுப்பியிருக்க வேண்டும். கம் வில்லா. நேராக நர்ஸிங் ஹோம் அனுப்பியிருக்க வேண்டும். விக்ரம், நீயும் என் கூட வா. உன் உதவி தேவையாக இருக்கும்.'

'அவர்கள் கார் போய்ச் சேருவதற்குள் அசோக் குமார் இண்டென்ஸிவ் கார்டியாக் கேர் யூனிட்டில் அட்மிட் ஆகி விட்டான்.

மிக உயர்தர பிரைவேட் நர்ஸிங் ஹோம் அது. சுத்தமாக ஒரு ஐந்து நட்சத்திர ஹோட்டல் போல இருந்தது. அங்கங்கே 'ஷ்' என்று அதட்டினார்கள். டாக்டர்கள் அமிதாப் பச்சன்போல கிராப் வைத்திருந்தார்கள். நர்ஸுகள் அழகாகவும் பிடிப்பான உடைகளுடனும் இருந்தார்கள். மலர்கள் புதிதாக இருந்தன. ஏஸி எங்கும் விரவியிருந்தது.

டாக்டர் வெளியே வர, ஆர்கே அவரை அணுக, டாக்டர் அவரைப் பார்த்ததும் சற்று மரியாதையுடன், 'குட் ஈவினிங் சார்' என்றார்.

'எப்படி இருக்கிறான்?'

'ஸ்லீப்பிங் கடந்து விட்டான்!'

'டாக்டர் அவனுக்கு...'

'ஆம். கரானரிதான். மாஸ்ஸிவ்.'

'இந்த வயசிலா?'

'இதற்கு வயசு கிடையாது. இந்த அட்டாக்கைத் தப்பித்ததே ஆச்சரியம். ஏறக்குறைய நிற்கிறவரை போய் விட்டது இதயம்.

நிச்சயம் க்ளாட் இருக்கவேண்டும். ரத்தத்தை மெல்லிசாக்கும் மருந்து கொடுத்திருக்கிறோம்.'

'எப்போது சரியாகும்?'

'சரியாவதைப் பற்றி இப்போது யோசிப்பது கொஞ்சம் அவசர மானது. மற்றொரு அட்டாக் வந்தால் தாங்க மாட்டான். அதைத் தவிர்க்க எல்லா எச்சரிக்கைகளையும் எடுத்துக்கொள்ள வேண்டும். நீங்கள் செய்யவேண்டியது இப்போது ஏதும் இல்லை. நாங்கள் பார்த்துக்கொள்கிறோம். ஏதாவது செய்தி இருந்தால் போன் பண்ணுகிறோம் சார். நீங்கள் வீட்டுக்குப் போங்க.'

'வில்லா வா. விக்ரம், நீ இங்கே ஆஸ்பத்திரியில் இரு. ஏதாவது தகவல் இருந்தால் எனக்கு ராத்திரி எத்தனை மணியாக இருந் தாலும் சொல்லு.'

'நிச்சயம் சொல்கிறேன் சார்.'

விலாசினி அவனைப் பார்க்காமல் தந்தையின்பின் சென்றாள்.

மறுபடி ஜன்னல் வழியே பார்த்தான். அசோக்கை இயந்திரங்கள் சூழ்ந்திருந்தன.

தூங்குகிறானா, மயக்கமா என்று தெரியவில்லை.

காலியான காரிடாரில் வெள்ளை ஸ்டூலின் மேல் உட்கார்ந்தான். தலை மயிரை விரல்களால் கலைத்துக்கொண்டு யோசித்தான். மனத்தில் விசித்திர பிம்பங்கள் விளையாடின. 'கிஸ் மி!'

'இஸ் ஹி டெட்?'

'ஐ டேக் பில்ஸ், வா பயப்படாதே!'

'கிவ் ஹிம் சோடா.'

'வா, உன் முழுப் பளுவையும் தா.'

'டு மச் ஸ்ட்ரெய்ன், தட் காட் ஹிம்.'

'ஐல் பி ஆல்ரைட் டுமாரோ. ஆபீஸில் நிறைய வேலை இருக் கிறது.'

அசோக், டோன்ட் பி ஆல்ரைட். அப்படியே செத்துப்... சட்... என்ன விஷமமான எண்ணம். தன் கன்னத்தில் குத்திக்கொண்டு,



எழுந்து நின்று நடந்து நடந்து நினைக்காமல் நினைக்கப்பட்டு அசோக் இல்லை என்றால்... சே எதையாவது திருப்பித் திருப்பிச் சொல்ல நினைப்பதைத் தடுத்து நிறுத்து.

மானிடர் இன்னும் இயங்கிக்கொண்டிருந்தது. நிற்கக் கூடாது. நிற்கவே கூடாது! நிற்க வேண்டும்!

சே, என் மனம் என்பது ஒரு சாக்கடைச் சமுத்திரம்.

'தொட்டதை மீள மீளவும் தொடுவாய்! புதியதை விரும்புவாய். புதியதை அஞ்சுவாய்!' எங்கே படித்தான்?

ஆபீஸில் அசோக்கின் ஹார்ட் அட்டாக் பரவலாகப் பேச்சில் அடிபட்டது. விட்டல் மேஜை மேல் உட்கார்ந்துகொண்டு, 'அந்த மாதிரி சதா சர்வ காலமும் ஆபீஸ் ஆபீஸ்னு அல்லாடினா எல்லா அட்டாக்கும் வரும்' என்றார்.

'இல்லை விட்டல் சார். அவ்வளவு சிகரெட் குடிச்சா உடம்பு என்னத்துக்கு ஆகறது?'

'சிகரெட், குடி, கூத்தி எல்லா கெட்ட வழக்கத்தையும் பாக்கி வெக்கலை.'

'இப்ப டைரக்டர் பதவி என்ன ஆறது?'

'ஆர்கே அதான் முழிச்சிண்டிருக்காராம். பம்பாய்க்காரனுக்குத் தான் நியாயமாப் பாத்தாக் குடுக்கணும். ஒரு வேளை அவன் உடம்பு தேறி வரவரைக்கும் ஆர்கே வெய்ட் பண்ணுவாரோ என்னவோ!'

மத்தியானம் ஆர்கே விக்ரமை கூப்பிட்டு அனுப்பினார்.

அவர் அறைக்குள் நுழையுமுன் அந்த ரெஸ்ட் ரூம் ஒரு கணம் மனசில் தைத்தது.

'வா விக்ரம், உட்கார்.'

பயந்துகொண்டே உட்கார்ந்தான். விலாசினி ஏதாவது சொல்லி விட்டாளா என்ன? அவனை நேராகத் துளைத்தெடுப்பது போல் பார்த்தார். சற்று நேரம் மௌனமாக இருந்தார்.

காத்திருந்தான்.

'அசோக் ரிஸைன் பண்ணிவிடப் போகிறான்.'

விக்ரம் அதிர்ச்சியுடன் 'வாட்' என்றான்.

'பகல் பதினொரு மணிக்கு மறுபடி ஒரு மைல்ட் அட்டாக் வந்திருக்கிறது. சமாளித்திருக்கிறான். இப்போதுதான் அவனிடம் கொஞ்சம் பேசிவிட்டு வருகிறேன். டாக்டரிடமும் பேசினேன். அவனுக்குப் பரிபூர்ண ஓய்வு தேவை. அவனால் இனிமேல் பொறுப்புள்ள எந்தப் பதவியையும் ஏற்றுக்கொள்ள முடியாது. கம்பெனியைப் பொருத்தவரையில் அவன் சரித்திரம் முடிந்து விட்டது. அவனை என்னால் இனி டைரக்டர் ஆக்க முடியாது. வேறு ஆளைத்தான் பார்க்கவேண்டும். நானே அவனை ராஜினாமா செய்யச் சொல்லிவிட்டேன்.'

'இட்ஸ் எ கிரேட் பிட்டி சார்! ஸச் எ டைனமிக் பர்ஸன்!'

'நிறையக் குடித்தான். நிறைய ஸ்மோக் பண்ணினான். நிறையச் சாப்பிட்டான். நிறைய உழைத்தான். எல்லாம் சேர்ந்துகொண்டு அவன் உடம்பைப் பழி வாங்கி விட்டது. ரிமார்க்கபிள் பெர்சன். விக்ரம், நீ புகை பிடிப்பாயா?'

'இல்லை சார்.'

'வேறு ஏதாவது பழக்கங்கள்?'

'ஒன்றும் கிடையாது.'

'உன்னை நான் கொஞ்ச நாள் கவனிக்கப் போகிறேன்.'

'சார்?'

'அசோக்கிடம் பேசிக்கொண்டிருந்தபோது உன்னைப் பற்றிச் சொன்னான். என் மாதிரி உழைக்கக் கூடியவன் இந்த ஆபீஸில் அவன் ஒருவன்தான் என்றான். உன்னை 'கெட்ட வழக்கங்கள் அற்ற அசோக்' என்றான். எனவே...' ஆர்கே சற்றுத் தயங்கி விட்டு நிதானமாகப் பேசினார். 'அந்த டைரக்டர் போஸ்ட்டை நான் நிரப்பாமல் ஆறு மாசம் காலம் தாழ்த்தப் போகிறேன். உன் திறமையைப் பார்க்கப்போகிறேன். இப்போது அசோக்கின் பதவியை ஏற்றுக்கொள். ஆறு மாதத்தில் உன் திறமை நிரூபிக்கப் பட்டுவிட்டால் அடுத்த டைரக்டர் நீதான்!'



தடுமாற்றத்தை, சந்தோஷத்தை, தவிப்பை, உடல் பூராவும் பரவிய விதிர்விதிர்ப்பைச் சமாளித்துக்கொண்டு 'தாங்க்ஸ் சார்.'

'தாங்க் அசோக் அண்ட் ஹிஸ் ஃஹார்ட் அட்டாக். நீ போகலாம். நான் சொன்னதையெல்லாம் ரகசியமாக வைத்துக் கொள்வது உன் பொறுப்பு.'

'நிச்சயம் சார்.'

அறையை விட்டு வெளியே வந்தபோது மிதந்தான். பறந்தான். ஒளிர்ந்தான். கூடவே அசோக்கின் நெஞ்சு வலியும் ஞாபகமாக வந்து பயமுறுத்தியது. என்ன ஒரு விதி இது! ஒருத்தன் வேதனை மற்றவன் சுகமாகிறது. எனக்கு அடித்த அதிர்ஷ்டத்தைப் பார். ஆபீஸில் சேர்ந்த ஒரு வருஷத்துக்குள் இவ்வளவு பெரிய உயர்வா? கம்பெனியின் டைரக்டர் ஆவதற்கு ஒரு வாய்ப்பு. டைரக்டர், அம்பதாயிரம் ரூபாய் சம்பளம். ஸ்டாஃப் கார். கம்பெனி பங்களா. எக்ஸ்பென்ஸ் அக்கவுண்ட். ஐந்து நட்சத்திர ஓட்டல்கள். நம்பவே முடியவில்லை! ஆறு மாதம், ஆறே மாதம், ஆர்கேயின் பரிசீலனையில் ஆறு மாதம் கடும் உழைப்பு தேவை. தயார். அல்லும் பகலும் ஆபீஸையே நினைத்து, ஆபீஸிலேயே கிடந்து, எல்லாவற்றுக்கும் தயார். எவ்வளவு பெரிய பரிசு காத்திருக்கிறது. விக்ரம் டைரக்டர்.

மாலை நர்ஸிங் ஹோம் சென்றான்.

'கம் விக்ரம்.'

'சரியாக மூணு நிமிஷம்தான். அவர் அதிகம் பேசக்கூடாது. நீங்கள்தான் பேச வேண்டும்' என்று எச்சரித்தாள் நர்ஸ்.

'அசோக். எப்படி இருக்கிறாய்?'

'பார்க்கிறாயே, சிகரெட் இருக்கிறதா?' என்றான் ரகசியமாக.

'ஸாரி.'

'சிகரெட் கூடாதாம். மது கூடாதாம். பேசக் கூடாதாம். எதற்காக உயிர் வாழவேண்டும்... ஆர்கே சொன்னாரா?'

'சொன்னார்.'

'நான் ரிஸைன் பண்ணி விட்டேன். என்னால் இந்த டென்ஷன் தாங்க முடியாது என்று டாக்டர் மகாதேவன் அடித்துச் சொல்லி

விட்டார். ஆர்கே கேட்டார். கல்கத்தா ஆபீஸில் லைட்டாக ஒரு வேலை போட்டுத் தருகிறேன் என்றார். நான்தான் வேண்டாம் என்று சொல்லி விட்டேன். ரிஸைன் பண்ணச் சொன்னார். சரி என்றுவிட்டேன். பத்து வருஷத்தில் முப்பது வருஷ வேலை செய்தாகி விட்டது. இருபது லட்சம் ரூபாய் கம்பெனியிலிருந்து வரும். போதும், பேசாமல் உடம்பு சரியானபின் பர்த்வான் போய் அருகே கிராமத்தில் கவிதை படிக்கப் போகிறேன். அப்புறம் ரபீந்த்ர சங்கீத். எனக்கு ஒரு சிகரெட் கடத்திக் கொண்டு தந்தால் உனக்கு என் வலது கையை வெட்டிக் கொடுப்பேன்.'

'யுவர் டைம் இஸ் அப்' என்று நர்ஸ் வந்தாள். 'சிகரெட் கேட்டாரல்லவா?'

'ஆம்!'

'அசோக் யுர் வெரி பாட்.'

'ஸிஸ்டர், எனக்குச் சரியானபின், உன்னை பாயிண்ட் த்ரீ எய்ட் வைத்துச் சுடப்போகிறேன்.'

'சரி' என்று சிரித்தாள். 'நீங்கள் புறப்படுகிறீர்களா?'

'அசோக். தாங்க்ஸ் ஃபார் எவ்ரிதிங்!'

'எதற்கு?'

'என்னைச் சிபாரிசு செய்ததற்கு.'

'ஆர்கே என்னை நேராகக் கேட்டார். நேராக பதில் சொன்னேன். கம்பெனி உருப்படவேண்டும் என்றால் இளம் ரத்தம் வேண்டும். என்னைப்போல் உழைக்கக் கூடியவன் விக்ரம் ஒருவன்தான் என்றேன்.'

'ஐம் கிரேட்ஃபுல் டு யு.'

'நாட் யெட் யங் மேன். இன்னும் ஆறு மாசம் இருக்கிறது. ஆறு மாதத்தில் எவ்வளவோ நடக்கலாம். எவ்வளவோ மேடு பள்ளங்கள், சறுக்கல்கள், சதிகள், எதிர்பாராதவை நிகழலாம்!'

'ஐம் ஸாரி. விக்ரம் உங்களை நான் இப்போது துரத்தியாக வேண்டும். அசோக் நிறையப் பேசி விட்டார்.'



'குட் பை அசோக்.'

'உண்மையாக இரு.'

அவனை விட்டு விலகும்போது அந்த அபார இளைஞனை மறுபடி பார்க்காமல் போய்விடுவோமோ என்கிற அர்த்தமற்ற பயம் வயிற்றைக் கவ்வியது. ஒரு முறை திரும்பிப் பார்த்துக் கொண்டான். நர்ஸ் அவன் அருகில் சாய்ந்து போர்வையைச் செருகிக்கொண்டிருந்தாள்.

'குட் பை மை ஃப்ரண்ட். எனக்காக ஒரு சொர்க்கத்தின் வாசலைத் திறந்து வைத்து ஒதுங்கியிருக்கிறாய்.'

சொர்க்க வாசலா அது!

# 5

முதல் மாதம். அசோக்கின் வீட்டில் உட்கார்ந்து அவனைப் போலவே அவசரப்பட்டு, டிரங்க்கால் பேசி, கையெழுத்து போட்டு, படபடவென்று பொரிந்த முதல் மாதம். ஆர்கே அவனை அடிக்கடி கூப்பிட்டார். என்ன என்னவோ ஸ்டேட்மெண்ட்டுகள் கேட்டார். அவன் டிப்பார்மெண்டுடன் சம்பந்தமில்லாத விஷயங்களை எல்லாம் அவன் தலையில் கட்டினார். திடீரென்று ஒரு லைசென்ஸைத் துரத்தி டெல்லிக்கு ஓடு என்றார். சுத்தமாக அவனைப் பரீட்சை பார்க்கிறார் என்பதும், ஆர்கேயின் சில ஆச்சரியகரமான அணுகல் முறைகளும் தெரிந்தன. இதுவரை பரீட்சை தேறிவிட்டான் என்றுதான் சொல்லவேண்டும். ஒரு முறை 'மை காட், யு ஆர் பிகமிங் அனதர் அசோக்' என்று வியந்தார்.

'அவன் முறைகளை அப்படியே கடைப்பிடிக்கிறேன், சார்.'

'பழக்கங்களைத் தவிர.'

'ஆம்! பழக்கங்களைத் தவிர.'

'இதுவரை பரவாயில்லை. பார்க்கலாம்' என்றார்.

'அசோக் இல்லாமல் பிரிட்ஜுக்கு நாலாவது கை குறைந்து போயிருந்தது. இப்போது ஒரு ஆள் அகப்பட்டிருக்கிறான். ஞாயிற்றுக் கிழமை வாயேன். ஆடலாம்.'

'இல்லை சார், ஆபீஸில் ஏகப்பட்ட வேலை.'

'கிடக்கட்டும். நீ அவ்வளவு தூரம் உழைக்கவேண்டாம்! ஐ கான்ட் அஃபோர்ட் அனதர் ஹார்ட் அட்டாக், ஐ ஸே.'

சற்று இடைவெளிக்கு அப்புறம் பார்த்ததில் வில்லா இன்னும் அழகாக இருந்தாள். அவளைப் பார்த்ததும் உறங்கியிருந்த அக்னியெல்லாம் உயிர் பெற்றது போல் உணர்ந்தான்.

'ஹாய் விக்ரம்! என்ன ரொம்ப பிஸியா? அப்பா! விக்ரம் ஹேர் ஸ்டைலைக்கூட அசோக் மாதிரி மாற்றிக்கொண்டு விட்டான்.'

மெலிதான வெயிலில், கலர் கலர் குடை நிழலில், கன்னங்கள் ஒளிர ஆரோக்கியம் நிரம்பிய தேவதையாக, விலாசினியைப் பார்த்தபோது, இவளும் டைரக்டர் பதவி போல் எனக்காகக் காத்திருப்பவள் என்ற எண்ணம் உச்ச நிலையை அடைந்தது. இதோ இந்த மார்பை நான் தொட்டிருக்கிறேன். என் முகத்தை அதில் பதித்திருக்கிறேன். என் கை இந்த இடுப்பை வளைத்திருக்கிறது. இவள் உடைகளுக்குள் தேடியிருக்கிறேன். இவள் என்னுடையவள்! இவள் என்னுடையவள்!

ஆர்கே உள்ளே சென்றிருக்க, இருவரும் தனியாக இருந்தார்கள். 'விலாசினி' என்றான்.

'என்ன?'

'அன்றைக்கு நடந்ததை நாம் எப்போது தொடரப் போகிறோம்?'

'என்ன நடந்தது? என்றைக்கு?'

'ரெஸ்ட் ரூம்.'

'ஓ. அதை இன்னும் ஞாபகம் வைத்துக்கொண்டிருக்கிறாயா?'

'மறக்க முடியுமா?'

'மறக்க வேண்டும்.'

'ஏன்?'

அவள் பதில் சொல்வதற்கு முன் படபடவென்று மோட்டார் சைக்கிள் சப்தம் கேட்க, ஹோண்டாவில் ஒரு இளைஞன் வந்து இறங்கி அதைத் துறந்துவிட்டு வேகமாக ஓடி வந்தான்.

'ஸாரி, ஐம் லேட்.'

‘மது மீட் விக்ரம். விக்ரம், திஸ் இஸ் மது. என்னைக் கல்யாணம்
செய்துகொள்ளப் போகிறவன்.’

‘ஹாய்.’

விக்ரம் அதிர்ந்துபோய் அவனைப் பார்த்தான். ஆறடி உயரம்.
அடர்த்தி மீசை. டிஜிட்டல் யுகத்தின் பிரதிநிதியாக சௌகரியமாக
வளர்ந்த கோயில் காளைபோல் இருந்தான். விலாசினி வசீகர
மாகப் புன்னகைத்து ‘மது ஸ்டேட்ஸ் போகிறான். அங்கே அவ
னுக்கு வேலை கிடைத்திருக்கிறது.’

‘சந்தோஷம்!’ ஆர்கே வெளியே வர, ‘ஹாய் பாப்!’ என்று அவரை
அவன் அணுக, வில்லா அதே தேவதைத்தனம் மாறாமல், ‘அன்று
ரெஸ்ட் ரூமில் நடந்ததை மதுவுடன் தொடர்ந்தேன்’ என்றாள்.

விக்ரம் சிரிக்க முயன்றான்.

‘வாங்க, பிரிட்ஜ் ஆடலாம். இப்ப நானும் மதுவும் பார்ட்னர்’
என்றாள் வில்லா. சீட்டுகள் கலைக்கப்பட...

எவ்வளவோ மேடு பள்ளங்கள், சறுக்கல் சதிகள், எதிர்பாராதவை
கள் நிகழலாம். நீ இதை எதிர்பார்த்திருக்க வேண்டும். விக்ரம்,
உன் குறிக்கோள் இவள் அல்ல. எப்படியாவது ஆறு மாதத்தில்
அந்த நாற்காலியை அடை. அதுதான் உன் சிகரம். பெண் என்
பவள் அசோக் சொன்னதுபோல ஒரு அநாவசியக் குறுக்கீடு.
உனக்குப் பெண் தேவை என்றால் பங்களூரில் எத்தனையோ
இடங்கள் உள்ளன. உன் இலக்கைத் திசை திருப்பாதே. பெண்
அப்புறம் வரட்டும். உன் காலடியில் நூறு பெண்கள் விழு
வார்கள். உனக்காக ஒருத்தி வேறெங்கோ இருக்கிறாள்.

‘என்னய்யா! பகல் கனவு காண்கிறாயா? என்ன? பிட் பண்
ணுய்யா!’

அதன்பின் அவன் இன்னும் உக்கிரத்துடன் வேலையில் மெய்
மறந்தான். விலாசினியை மறந்தான். இவனுடைய புதிய
விலாசினி ஆறு மாதத்துக்கு இல்லை, ஐந்து மாதத்துக்கு அப்பால்
காத்திருக்கிறாள். இதோ வருகிறேன். புதியவளே காத்திரு. அந்த
மாலையுடன் காத்திரு! ஆர்கே வெளிநாடு போக வேண்டியிருந்
தது. ஜெர்மனியில் ஒரு மெஷினரி வாங்க, காண்ட்ராக்டில்
கையெழுத்திட, இன்ஜினியர் ஒருத்தனுடன் அவசரமாகப்
போகவேண்டியிருந்தது. வெள்ளிக்கிழமை சொன்னார். திங்கள்



கிழமை பாஸ்போர்ட், ரிஸர்வ் பாங்க் க்ளியரன்ஸ் எல்லாம்
ஏற்பாடு செய்துவிட்டான். ஆர்கே அயர்ந்துபோனார்.

‘சில சமயங்களில் நீ அசோக்கைவிட ஒரு படி மேலாகவே
செல்கிறாய்! ஜெர்மனி போய்த் திரும்பி வந்ததுமே போர்டு
மீட்டிங்கிற்கு ஏற்பாடு செய்து விடலாம் என்று யோசிக்கிறேன்.
இந்த ரேட்டில் ஒரு நாள் என் சீட்டிலேயே வந்து உட்கார்ந்து
விடுவாய்!’

ஆர்கே போனதில் சற்று வேலைக் கடுமை குறைந்தது. ரொம்ப
நாளாக பெண்டிங்காக இருந்த, அதிக முக்கியத்துவம் இல்லாத
சில ஃபைல்களைப் பார்த்துக்கொண்டிருந்தான். தயங்கித் தயங்கி
ஈஸ்வரன் வந்தார்.

‘என்ன ஈஸ்வர்?’ - ஈஸ்வரன் இப்போது அவனுக்கு எதிரி
இல்லை.

‘உங்கிட்ட கொஞ்சம் தனியாப் பேசணும்.’

‘என்ன? மறுபடி டிரான்ஸ்ஃபரா?’ என்று சிரித்தான்.

‘இல்லை. இந்த விஷயம் கொஞ்சம் பர்ஸனலானது. நாம் பேசி
முடிக்கறவரைக்கும் யாரும் நம்மை டிஸ்டர்ப் பண்ணாம
இருந்தா நல்லது.’

‘என்ன அவ்வளவு ரகசியம்? யாரைப் பத்தி?’

‘உன்னைப் பத்தித்தான் விக்ரம்.’

‘என்னைப் பத்தியா? என்னைப் பத்தி எந்த ரகசியமும் கிடையாது
ஈஸ்வரன்’ என்று சிரித்தான். மனசுக்குள் உஷாரானான்.

‘ஒரு சின்ன மேட்டர்ல உதைக்கறது.’

‘என்ன சொல்லுங்கோ.’

‘நீ என்னைத் தப்பா நினைச்சுக்கக் கூடாது. நீ இந்த ஆபீஸில்
எங்கெங்கேயோ போகப் போறே. அதிலே எனக்கு சந்தோஷம்
தான். அடுத்த டைரக்டர் நீதான்னு (இப்பவ) இப்பவே ஆர்கே
தீர்மானம் பண்ணிவிட்டார். இந்த ஆபீஸை இளைஞர்கள் சாம்
ராஜ்யமா மாத்தறதில் எனக்கு ஒருவிதமான அப்ஜக்ஷனும்
இல்லை. நீங்கள்ளாம் அசகாய சூரங்க. எனக்கு ரிடையராறத்துக்கு

இன்னும் ரெண்டு வருஷம்தான் இருக்கு. வம்பு தும்புக்குப் போறவன் இல்லை.'

'இவ்வளவு பீடிகை வேண்டாம். விஷயத்துக்கு நேரா வாங்கோ ஈஸ்வரன்!'

'ஒண்ணுமில்லப்பா. நீ எம்.பி.ஏ. எங்க படிச்சே?'

அடப் பாவி! இதை இப்போது கிளப்பப் போகிறாயா?

'ஆம்தாபாதில, ஏன்?'

'அதைத்தான் செக் பண்ணபோது கொஞ்சம் ஆச்சரியமா இருந்தது. உன் பர்ஸனல் ரெகார்டை செக் பண்ணிண்டிருந்த போது எம்.பி.ஏ. சர்ட்டிஃபிகேட் காப்பி மட்டும்தான் இருந்தது. மைண்ட் யு, இது ஒரு ரொட்டீன் செக். புதுசா சேர்றவங்க எல்லார் ரிக்கார்டும் ஒழுங்கா இருக்கான்னு செக் பண்றது எஸ்டாப்ளிஷ் மெண்ட் செக்ஷன்ல என் வேலைல ஒண்ணு. நானாப் போய்க் குடைஞ்சதா நினைச்சுக்காதே!'

'இல்லை சொல்லுங்க!' விக்ரமுக்கு மெலிதாக விரல்கள் நடுங்கத் தொடங்கின. மேஜைக்குக் கீழே வைத்துக் கொண்டான்.

'டீடெய்ல்ஸ் கேட்டு ஆம்தாபாத் காலேஜுக்கு எழுதினேன். பதில் வந்திருக்கு பாக்கறியா?' அந்தக் கடிதத்தை அலட்சிய மாகப் பார்த்தான்.

'உங்கள் கடிதம் கிடைக்கப் பெற்றோம். நீங்கள் குறிப்பிட்டபடி விக்ரம் என்ற பெயரில் இந்தக் கல்லூரியிலிருந்து பட்டம் பெற்றுச் சென்றவர் எவரும் இல்லை. தங்கள் உண்மையுள்ள...'

விக்ரம் புன்னகைத்து, 'ஏதோ மிஸ்டேக் நடந்திருக்கு' என்றான். 'இது எப்ப வந்தது?'

'நேத்திக்குத்தான். வந்த உடனே மறுபடி நாம ஏதாவது தப்புப் பண்ணிட்டமான்னு உன் ரெக்கார்ட்ஸ் எல்லாத்தையும் பழைய படி பார்த்தேன். ஆம்தாபாத் காலேஜ் சர்ட்டிபிகேட்தான் கொடுத்திருக்கு. எனக்குப் புரியலை. இதை யார்கிட்டேயும் சொல்லலை.'

'எனக்கும் புரியலை, ஈஸ்வரன். ஆனா, இது ரொம்ப சிம்பிளான மேட்டர்.' மனதுக்குள் என்ன என்னவோ எண்ணங்கள் ஓடின.



முதலில் இவரைத் திருப்திப்படுத்தி அனுப்ப நம்பகமான பொய் ஒன்று சொல்லியாக வேண்டும். ஏறக்குறைய கண்டுபிடித்து விட்டான்.

'ஈஸ்வரன் நான் சப்ளிமெண்டரி லிஸ்டில் பாஸ் செஞ்சவன். ஒரு வேளை அவங்க ரெகார்ட்ஸை அப்டேட் பண்ணி இருக்க மாட் டாங்க. எதுக்கும் இந்த லெட்டரை என்கிட்ட கொடுத்துட்டுப் போங்கோ. நான் உடனே அவங்ககூட டிரங்க்கால் பேசி...'

'பேசிக் கேட்டுட்டேன். தப்பு ஏதும் இல்லைன்னு சொல்றாங்க.'

எரிச்சல் வந்தது. கல்லுளிமங்கன்! 'யார் கூடப் பேசினிங்க?'

'ரிஜிஸ்ட்ரார்ன்னு நினைக்கிறேன்.'

'அவங்கள்ளாம் அரைகுறையா இன்பர்மேஷன் வெச்சிருப் பாங்க. நான் டைரக்டர்கிட்டயே பேசி இதைத் தீர்த்து வைக் கிறேன். இல்லை, அங்கயோ ஒரு நடை போய்ட்டு வரேன். நீங்க கவலைப்படாதீங்க. சிம்பிள் க்ளெரிக்கல் மிஸ்டேக் இது.'

'அப்படித்தான் இருக்கணும். இதைச் சீக்கிரம் பார்த்து... ஆர்கே இருக்காரா?'

'ஜெர்மனி போயிருக்கார், ஏன்?'

'எப்ப வருவார்?'

'ஒரு வாரம் ஆகும்.'

'அவர் வரதுக்குள்ள இதைச் சரி பண்ணிடு! ஏன்னா அவர் வந்தா இந்த விஷயத்தை அவர்கிட்ட நான் சொல்லியே ஆகணும். பர்ஸனல் ரெகார்ட்ஸ்ல இர்ரெகுலாரிட்டிஸ் இருந்தா அவர் கவனத்துக்கு உடனே கொண்டுவரணும்னு எனக்கு அடிக்கடிச் சொல்லியிருக்கார்.'

'அதுக்கெல்லாம் தேவை இல்லை. இது ஒரு சிம்பிள் மாட்டர்.'

'லெட்ஸ் ஹோப் ஸோ.'

'அவ்வளவுதானே!'

'ஆமா. நான் வரட்டுமா. என் மேல் கோவமில்லையே? நான் என் கடமையைச் செஞ்சேன்.'

'ரொம்ப சந்தோஷம்.' அவரை ஒரு முறை தீர்க்கமாகப் பார்த்தான். வாங்க முடியாது. மெலிதான கேலியும் சவாலும் அவர் பார்வையில் இருந்தன. அசோக் அன்று அவரை அதட்டிப் பேசியபோது அவர் தமக்குள் சுருங்கி அவமானப்பட்டு கண்ணீரின் அருகில் கலங்கியபோது அவரைக் கேலியாகப் பார்த்தது தப்போ! அதற்குத்தான் பழி வாங்குகிறாரோ? அவர் சென்றதும் அந்தக் கடிதத்தை மறுபடி படித்தான். மறைத்து வைத்திருந்த பூதம் எட்டிப் பார்க்கிறது. யாரும் கேட்கப்போவதில்லை. எல்லாம் முடிந்துவிட்டது என்று நினைத்திருந்தது திடீரென்று வெளியே பீறிடுகிறது. மூழ்க வைத்த பிணம் மேலே வந்து மிதக்கிறது. அதுவும் எந்தச் சமயத்தில்!

கம்பெனியின் உச்சிக்குக் கொஞ்சமே மிச்சமிருக்கும் இந்தச் சமயத்தில்!

'எவ்வளவோ மேடு பள்ளங்கள், சறுக்கல்கள், சதிகள், எதிர்பாராதவை நிகழலாம்...' அசோக்! இந்தச் சமயத்தில் நீ என்ன செய்வாய்?

பொய்யை மெய்யாக்கு!

எப்படி? எப்படி?

சே! ஏன் அந்தப் பொய் சொன்னோம்?

பொய் சொல்லியிராவிட்டால் எனக்கு இந்த வேலை எப்படிக் கிடைத்திருக்கும்? அவர்கள் கேட்டது எம்.பி.ஏ. இவனிடம் இருந்தது ப்ரைவேட் காலேஜில் டிப்ளமா. நண்பன் ஒருவனின் எம்.பி.ஏ. டிகிரி சர்ட்டிபிகேட்டைப் பார்த்திருக்கிறான். அதன் வாசகத்தை நகல் எடுத்து ட்ரூ காப்பி என்ற வடிவில் வேலை மனுவுடன் அனுப்பி விட்டான். ஏதாவது வேலை கிடைத்தால் போதும் என்ற பரபரப்பில்.

இந்த வேலை கிடைக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. அவர்கள் ஆபீஸில் கல்லூரிக்கு எழுதி சர்ட்டிஃபிகேட்டை சரி பார்ப்பார்கள் என்று எதிர்பார்க்காதது அடி முட்டாள்தனம்! பதவிக்கு வந்த உடனே கவனித்து அந்தச் சந்தர்ப்பத்தைக் கொன்றிருக்க வேண்டும். டூ லேட்! என்ன செய்வது? உடனே ஏதும் தோன்றவில்லை.

'பொய்யை மெய்யாக்கு!' எப்படி? ஒரு ஒரிஜினல் தயாரித்தால் என்ன? பொய்யை மறைக்க மற்றொரு பொய்! அதை மறைக்க



வாழ்நாள் முழுவதும் பொய்களுடன் வாழவேண்டும். ஆர்கேயிடம் மட்டும் பொய் சொல்லாதே.. மறைக்காதே! மெய்யாக்கு. அசோக்கின் எச்சரிக்கை.

தீர்மானித்து விட்டான். மறுநாள் ஈஸ்வரனை அறைக்கு அழைத்து நேரடியாக விலை பேசிவிட வேண்டியது. ஆம். விலை. எல்லோருக்கும் ஒரு விலை இருக்கிறது. இருந்துதான் ஆகவேண்டும். ஈஸ்வரனின் மௌனத்தின் விலை என்ன? பதவி உயர்வா? இல்லை மகன், மகள் யாராவது இருந்தால் வேலை கொடுப்பதாக வாக்களிக்கலாமா? ஏதாவது நிச்சயம் இருக்கும்!

சாயங்காலம் ஆபீஸிலிருந்து நேரம் கழித்துக் கிளம்பினான். கிளம்புமுன் கீ போர்டிலிருந்து சாவி எடுத்துக்கொண்டு, காலியாக இருந்த ஆபீஸ் ஹாலில் நடந்தான். ஈஸ்வரன் மேஜையைத் திறந்து அந்த... ஃபைலை எடுத்து, அந்தக் கடிதங்களை மட்டும் விலக்கினான். நிதானமாக அவற்றை ஒவ்வொன்றாகக் கிழித்து, துண்டுகளைச் சேகரித்து, பந்தாக்கி, பாத்ரூமுக்கு எடுத்துச் சென்று நீரில் மிதக்க விட்டு சங்கிலியை இழுத்து, அந்தப் பந்து சுழன்று மறைவதைக் கவனித்தான். தாற்காலிக நிம்மதி. கடிதங்களை அழித்தாகி விட்டது. இனி ஈஸ்வரனின் நெஞ்சில் இருப்பதைத்தான் அழித்தாக வேண்டும். கவலைப்படாதே. எப்படியாவது அழித்து விடலாம். நாளைக் காலை... அதுவரை தூங்க முடியாது. அசோக்கைப் போய்ப் பார்க்கலாமா? வேண்டாம். ஈஸ்வரன் நாளை மறுத்துவிட்டால் அவனிடம் யோசனை கேட்டுப் போகலாம்.

ராத்திரி முழுவதும் தூங்காமல் விழித்திருந்தான். நல்ல வேளை! இதில்கூட ஒரு அதிர்ஷ்டம். ஆர்கே வெளிநாடு போயிருக்கும் சமயம்தான் இது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. சமாளிக்கக் கொஞ்சம் அவகாசம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

காலை சீக்கிரம் ஆபீஸ் வந்து விட்டான். 'மைத்ரேயி! ஈஸ்வரன் வந்தவுடன் ரூமுக்கு வரச் சொல்லு.'

'ஷ்யூர் சார்.'

அன்றைக்கு இருப்பு கொள்ளவில்லை. வெவ்வேறு விதங்களில் அந்தச் சந்தர்ப்பத்தை ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்தான். சாம, தான, பேத, தண்டங்கள் அத்தனையையும் ரொம்ப நாசூக்காகப் பிரயோகிக்க வேண்டும். வரட்டும் ஈஸ்வரன். உன்னைச்

சமாளிக்க முடியவில்லை என்றால் நான் இந்த கம்பெனியில் டைரக்டராக வந்து என்ன பிரயோசனம்? அதற்குத் தகுதி இல்லை...

'என்ன மைத்ரேயி?'

'ஈஸ்வரன் சார் வெளியூர் போயிருக்காராம், சார்.'

திக்கென்றது. வெளியூர்! ஒரு வேளை ஆர்கேயை! சே! என்ன பைத்தியக்கார எண்ணம்! ஆர்கே வெளிநாடு போயிருக்கிறார். விக்ரம், என்ன ஆச்சு உனக்கு? ஈஸி ஈஸி! ஒன்றும் குடி முழுகிப் போய்விடவில்லை. இது வரைக்கும்.

'எந்த ஊருக்கு மைத்ரேயி?'

'சிவசமுத்திரம் போயிருக்காராம். அங்க நம்ப கம்பெனி பிராஜக்ட் ஆபீஸ் ஒண்ணு இருக்கு. ஏதோ டெய்லி வேஜஸ் ஆசாமிங்க தகராறாம். என்னன்னு விசாரிச்சு தீர்த்துவைக்கப் போயிருக்கிறதாச் சொன்னாங்க!'

'எப்ப திரும்புவார்!'

'தெரியலை சார்! நாலு நாள் ஆனாலும் ஆகலாம்.'

நாலு நாள்! அதற்குள் ஆர்கே வெளிநாட்டிலிருந்து திரும்பி வந்துவிடுவார். ஈஸ்வரனிடம் பேசி முடிக்க அவகாசம் கிட்டாது. வேண்டுமென்றேதான் அப்படிப் புறப்பட்டுப் போய் இருக்கிறார். என்னைச் சந்திக்க விருப்பமில்லாமல்தான்!

யோசித்தான்! 'ஈஸ்வரன், நீ எத்தனென்றால் நான் உனக்குமேல் எத்தன். நீ என்னை விட்டு விலகிப் போகிறாயா? நான் வருகிறேன் உன்னைத் தேடி. உன்னைச் சிவசமுத்திரத்திலேயே பிடிக்கிறேன் ஓய்! எங்கே போய் விடுவீர்? ஆஃப்டர் ஆல் சிவசமுத்திரம் இங்கிருந்து ஐந்து மணி நேரம்.'

ஸ்டாஃப் காரை வரவழைத்தான். டிரைவர் வேண்டாம் என்று சொல்லிவிட்டு சாவியை வாங்கிக்கொண்டான். மைத்ரேயியிடம், 'கொஞ்சம் பாங்க் வரை போய் வருகிறேன்' என்று சொல்லிக்கொண்டு புறப்பட்டான்.

சீரான தொண்ணூறில் காரைச் செலுத்தினான். கொஞ்சம் நிம்மதியாகக்கூட இருந்தது. இந்த விவகாரத்தை இன்றே தீர்த்துவிட



வேண்டும். இதை நெஞ்சுக்குள் வைத்துக்கொண்டு ராத்தூங்க முடியாது. போகலாம். பேசலாம். அப்பட்டமாகக் கேட்டுவிடலாம். நிச்சயம் ஒரு விலை சொல்லுவார். கொடுத்து விடலாம். எல்லோரையும் வாங்க முடியும். வாங்காமல் எனக்கு மறு காரியம் இல்லை. குறுக்கே பாய்ந்த நாயைத் தவிர்க்க முடியாது, ரத்தமாகத் தேய்த்து விட்டான்.

அவன் சிவசமுத்திரத்தை அடைந்தபோது பிற்பகல் ஒரு மணி. முதலில் கெஸ்ட்ஹவுஸ் போனான். பூட்டியிருந்தது. காவல்காரனைக் காணோம். சாப்பிடப் போயிருப்பான் போலும்! அப்படியென்றால் கன்ஸ்ட்ரக்ஷன் ஸைட்டில்தான் ஈஸ்வரன் இருப்பார். அங்கேயே போய்ப் பார்த்துவிடலாம். அணைக்கட்டிலிருந்து இரண்டு மைல் தூரத்தில் இருக்கிறது. ஸைட்டுக்குப் போகும் வழியில் அணைக்கட்டின் அருகே செல்ல வேண்டியிருந்தது. சந்தடியற்று இருந்தது. அணைக்கட்டின் பாராப்பெட் பகுதியில் தெரிந்த உருவத்தைச் சற்று கூர்ந்துபார்த்ததில், 'ஈஸ்வரன் இங்கே என்ன செய்கிறார்?' சரி சௌகரியமாகப் போயிற்று. இங்கேயே வைத்துப் பேசி விடலாம். தனிமையாகவும் இருக்கிறது.

காரை நிறுத்தினான். வெளியே வந்ததும் ஈரம் கலந்த காற்று மென்மையாக காலருக்குள் விளையாடியது. நீல வானத்தில் மேகப் பேச்சே இல்லை. மரங்கள்கூட மத்யான சாப்பாடு உண்டு களைத்தது போல் காற்று வாங்கிக்கொண்டிருந்தன. ஸ்லுய்ஸ் கேட் திறந்து நதி தப்பித்துக்கொண்டு பெருகும் இரைச்சலில் சங்கீதம் இருந்தது. இயற்கைக்கு உறுத்தாத சௌந்தர்ய வேளை. மெதுவாக ஈஸ்வரனை அணுகினான்.

அவர், அணைக்குக் கட்டுப்பட்டிருந்த நதி நீலப் பரப்பைக் கண்களால் பேராசையுடன் பருகிக்கொண்டிருந்தார். இவன் வரும் ஓசை கேட்டிருக்கவில்லை. ரொம்பக் கிட்ட வந்ததும், 'மிஸ்டர் ஈஸ்வரன்' என்றான்.

திடுக்கிட்டுத் திரும்பினார். அவனை அந்த இடத்தில் சற்றும் எதிர்பாராததால், முதலில் அடையாளம் தேடி, உடனே கண்டுகொண்டு, 'அட நீயா? இங்கயா?' என்றார்.

'உங்களைப் பார்க்கத்தான் வந்தேன்.'

'எதுக்கப்பா?'

'அந்த சர்ட்டிஃபிகேட் விஷயம்தான்!'

'அதான் நான் சொல்லவேண்டியது எல்லாம் சொல்லி விட்டேனே? ஒரிஜினல் கிடைச்சுதா?'

'ஈஸ்வரன், உங்ககிட்ட எதையும் மறைக்க விரும்பலை. நீங்கள் எனக்குத் தகப்பனார் ஸ்தானம். நீங்கதான் எனக்கு ஒரு வழி சொல்லணும்?'

'எதுக்கு!'

'ஒரிஜனினல் சர்ட்டிபிகேட் கிடையாது?'

'அப்ப உன் டிகிரி பொய்யா?'

'ஆமாம்!'

'அடப் பாவி!' அவர் மௌனமானார்.

'என்கிட்ட மேனேஜ்மெண்ட் டிப்ளமா மட்டும்தான் இருக்கு. இந்த வேலைக்கு எம்.பி.ஏ. கேட்டிருந்ததால் ஒரு சர்ட்டிபி கேட்டைத் தயார் பண்ணி அனுப்பிச்சுட்டேன். ஏறக்குறைய விளையாட்டுக்குத்தான் செஞ்சேன்னு வெச்சுக்கங்களேன். எனக்கு வேலை கிடைக்கும்னு கனவில் கூட எதிர்பார்க்கலே. கிடைக்கவும் கிடைச்சு, இந்த மாதிரி மின்னல் வேகத்தில் பதவியும் உயர்ந்து டைரக்டர் ஆகிற வரைக்கும் வந்துட்டேன். இப்ப நீங்க இந்தப் புத்தைக் கிளறி விட்டிருக்கிங்க! ஆனா, இதில் ஒண்ணு மட்டும் தெளிவாகத் தெரியறது ஈஸ்வரன்.'

என்ன என்று அவர் கேட்கவில்லை. சிந்தனையில் இருந்தார். தொடர்ந்தான். 'வேலைத் திறமைக்கும் படிப்புக்கும் டிகிரிகளுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. பாத்தீங்களா? என்னைப் பொருத்தவரையிலும் நான் எந்த விதத்தில் வேலைத் திறமையில் குறைஞ்சு போய்ட்டேன்? ஒரு காகிதம் ஒரு ஃபைல்ல இல்லாததினால், எந்த விதத்திலாவது, யாராவது பாதிக்கப்படறாங்களா ஈஸ்வரன்? சொல்லுங்க!'

'இப்ப என்னை என்ன பண்ணச் சொல்றே?'

'ஈஸ்வரன்! நான் புதுசா சேர்ந்த சமயத்தில் உங்ககிட்ட ஹார்ஷா பேசியிருக்கலாம். ஏதோ சின்னப் பையன் என்கிற முறையில், உங்க மனசு புண்பட்டிருந்தா என்னை நீங்க மன்னிக்கணும்.'



'இதெல்லாம் எதுக்கப்பா?'

'அந்த சர்ட்டிஃபிகேட் விவகாரத்தை நீங்கள் மறந்து போகணும். யார்கிட்டயும் சொல்லக் கூடாது.'

அவர் சற்று நேரம் கழித்துப் புன்னகைத்தார். 'அதாவது நான் இந்த விவகாரத்தை இதோட விட்டுறணும். அதைத்தான் இந்த வெயில்ல இத்தனை தூரம் வந்து சொல்ல வந்தியா?'

'ஆமாம்! நீங்கதான் என்னைக் காப்பாத்தணும்.'

'அப்பா விக்ரமா! என்னை நீ தப்பா எடை போட்டிருக்கே. நீ கொஞ்ச நேரம் முன்னாடி சொன்னயே, ஒரு பொய் சர்ட்டிஃபிகேட் ஃபைல்ல இருந்தா திறமை எனக்கு இருக்கிற வரைக்கும் யாருக்கு பாதிப்புன்னு கேட்டியே, அதுக்குப் பதில் சொல்லட்டுமா? நிஜமாவே எம்.பி.ஏ. பாஸ் பண்ணிண்டு உன்கூட இண்டர்வியூக்கு வந்தாங்களே நாப்பது பேர், அவங்க பாதிக்கப்படலையா? அவங்க என்னப்பா பாவம் செஞ்சாங்க? கஷ்டப்பட்டுப் படிச்சாங்க. ஆர்கே கம்பெனியில் வேலைன்னா சும்மாவா... அவங்களுக்குள்ள ஒருத்தனுக்குக் கிடைச்சிருக்க வேண்டிய வாய்ப்பை நீ பொய் சொல்லிப் பிடுங்கலையா, விக்ரம்?'

'அவங்களுக்கு எல்லாருக்கும் வேற வேலை கிடைச்சிருக்கும் சார். எம்.பி.ஏகளுக்கு நல்ல டிமாண்டு இப்ப.'

'அதனால் பொய் சொல்லலாங்கறியா?'

'இதில யாருக்கும் நஷ்டம் எதுவும் இல்லையே!'

'அப்படிச் சொல்ல முடியாது. உனக்கு முழுமையாப் படிப்பும் ட்ரெய்னிங்கும் இல்லாததால் பிற்காலத்தில் நீ இந்த கம்பெனிக்கு எடுக்கப்போற டெஸிஷன் தப்பாப் போய் அதனால் கம்பெனிக்கு நஷ்டம் ஏற்படலாம்.'

'இப்ப எனக்கு என்ன வழி சொல்றீங்க, ஈஸ்வரன்?'

'உனக்கு ஒரே ஒரு வழி. ஓசைப்படாம ரிஸிக்னேஷன் கொடுக்கிறதுதான். அசோக் உன்னைவிடப் பெரிய ஆள். மத்தவங்களா இருந்தா லைட்டா ஒர்க் பண்றேன்னு சொல்லிப் பதவியைக் கட்டிப் பிடிச்சுண்டிருப்பாங்க. அவன் அப்படி இல்லை! என்னால்

மனப் பூர்வமா உழைக்க முடியாது. எனவே, ராஜிநாமான்னு ஜிளம்பிட்டான். பாரு அவன்னா அதிகாரி. அவன்னா பெரிய மனுஷன். உன்னை மாதிரி பொய் புனைசுருட்டு ஆசாமி இல்லை!'

'அப்ப கடைசியா என்னதான் சொல்றிங்க? யோசிங்க ஈஸ்வரன். நீங்க சொல்லாம இருந்தா உங்களுக்குப் பல நன்மைகளை ஏற்பாடு பண்றேன். உங்க ப்ரமோஷன்கூட ட்யூ போல் இருக்கு. உங்க பையனுக்கு வேணா கம்பெனியில் வேலை போட்டுக் கொடுக்க ஏற்பாடு பண்ணலாம்.'

'பையன் இல்லை. பொண்ணு! என்னப்பா ப்ரைப் பண்றியா? அவ்வளவு கீழ வந்துட்டியா? இத பாரு விக்ரம். நான் இந்த கம்பெனியில எத்தனை வருஷம் சர்வீஸ் தெரியுமா? கம்பெனி பணம் ஒரு காலணா எடுத்தது கிடையாது. ஒரு பொய் கிடையாது...'

'அய்யோ! அதெல்லாம் கேட்டுக் கேட்டுப் புளிச்சுப் போச்சு ஓய்! கடைசியா முடிவா என்ன சொல்றீங்க? உண்டு இல்லைன்னு பளிச்சின்னு சொல்லுங்க.'

'சே, போடா அற்பம்! வெக்கமா இல்லை? இந்த மாதிரி பொய் சொல்லிட்டு வந்து என்கிட்ட கெஞ்சறதுக்கு? இன்னைக்கே லெட்டர் எழுதிப் போட்டுடப் போறேன். அவர் வரவரைக்கும் கூடக் காத்துண்டு இருக்கப் போறதில்லை. தூ! மானங்கெட்ட பன்னாடை!'

அவன் மண்டைக்குள் ரத்தம் பாய்ந்தது. அந்த நிமிஷத்தில் அந்த யோசனை அவனுக்கு உதித்தது. எதற்காகக் கிழவனிடம் நக்கமாட்டாத குறையாகக் கெஞ்சிக்கொண்டிருக்கிறேன்? சுலபமான, மிகச் சுலபமான வழி ஒன்று இருக்கிறதே!

'அப்படியாக்கும் சேதி?'

நான் இங்கே வந்தது ஒருவருக்கும் தெரியாது. என்னை இங்கே பார்த்தவர் யாரும் இல்லை. இந்த இடத்தில் நானும் கிழவனும் மிகத் தனியாக இருக்கிறோம்.

'உங்க நேர்மையை நான் மெச்சறேன் ஈஸ்வரன்!'

வேண்டாம்! வேண்டாம்! சைத்தானே! விலகு! அப்படி நினைத்துப் பார்க்கக்கூடாது சே! பாதகம்! பாவம், படுபாவம்!



'வெக்கங்கெட்டுப் போய் என்னைக் கேக்கறியே!'

எதிரே ஏக்கர் ஏக்கராக நீல நீர்ப் பரப்பு. எவ்வளவு ஆழம் இருக்கும்? நாற்பதடி? எண்பது? நூறு?

'நான் சொல்றதைக் கேளு. நேராப் போ. கால் கடுதாசியை எடுத்துக்கோ. ஆர்கே பேருக்கு உன் கைப்பட எழுது.'

பாராபெட் சுவர் அதிக உயரமில்லை. பொய்யை மெய்யாக்க ஒரே ஒரு தருணம். ஈஸ்வரனைத் தூக்குவதில் சிரமம் இருக்காது. அப்படியே சற்றும் எதிர்பாராமல், தூக்கிக் காலைச் சரித்து ஒரு சின்னத் தள்ளு! அவ்வளவுதான். காரியம் முடிஞ்சு போச்சு.

'அவ்வளவுதான் காரியம் முடிஞ்சு போச்சு. வேற வேலையைப் பாத்துக்க. க்வாலிஃபிகேஷனுக்கு ஏத்தாப்பல. அங்க போய் இன்னொரு பொய் சொல்லாதே?'

வேண்டாம் விக்ரம்! இது கொடுமை! செய்யாதே...

இதைவிட அரிய சந்தர்ப்பம் கிடைக்குமா? எவ்வளவு அதிர்ஷ்டக்காரன் நான்! யாரும் என்னைப் பார்க்கவில்லை. கிழம் எதற்கு டாம் ஸைட்டுக்கு வந்து மாட்டிக்கொள்ள வேண்டும்? கடவுளாக அமைத்துக் கொடுத்த சந்தர்ப்பம் இது. விபத்துகள் நடப்பதில்லையா, நான்கூட மைசூரிலிருந்து காரில் வரும்போது ஒரு நாய் குருட்டுத்தனமாக என் பாதையில் ஓடியது. செத்தது. என் பாதையில் வந்து ஏன் மோத வேண்டும்? அதற்காக என் வேகத்தைக் குறைக்க முடியுமா? செத்துத்தான் ஆகவேண்டும்.

'நீங்க சொல்றபடியே செய்யறேன் ஈஸ்வரன்.'

'இப்பவாவது புத்தி வந்ததா?'

'பெரியவர் நீங்க சொல்லிட்டிங்க... அப்பா! ஜலம் என்ன அழகா இருக்கு!'

'எப்பவும், நான் இன்ஸ்பெக்ஷன் வரப்போதெல்லாம் இந்த இடத்துக்கு வராம இருக்க மாட்டேன். ஜலத்தைப் பாரு! எத்தனை பெரிய சக்தி! எவ்வளவு ஏக்கர் சக்தி! எவ்வளவு துல்யமான சக்தி! இதுக்கு முன்னால் நாமள்ளாம் எத்தனூண்டு மனுஷாள்! ஏய்! என்னடா பண்றே? ஏய்! எக்குத்தப்பா ஏதாவது ஆய்டப் போறது! ஏய்! ஏய்!' அவன் காரியத்தின் தீவிரம் அவருக்கு

உறைக்குமுன் தற்காப்புக்கு எந்தச் சந்தர்ப்பமும் கிடைக்காமல் தள்ளப்பட்டு, அந்தரத்தில் மூன்று முறை சுழன்று, சளார் என்று நீர்ப் பரப்பில் மோதி, ஆவேசப் பிரவேச வேகத்தினாலேயே தண்ணீருக்குள் இருபத்தைந்து அடி உள்ளே சென்றுவிட்டார்.

ஈஸ்வரனுக்கு நீந்தத் தெரியாது.

ஸ்லூய்ஸ் வால்விலிருந்து விசிறியடித்துப் பறந்து கொண்டிருந்த பேரிரைச்சலினால் ஈஸ்வரன் தம் கடைசித் தருணத்தில் 'ரேவதி' என்று கதறியது யாருக்கும் கேட்கவில்லை.

சற்று நேரம் எட்டிப் பார்த்தான். விக்ரம் காரை நோக்கி நடந்தான்.



# 6

மாலை ஐந்தரை மணிக்கு ஆபீஸ் திரும்பினான். மைத்ரேயி காத்திருந்தாள். நேராக உள்ளே சென்றான். 'மைத்ரேயி! பியூன் யாராவது இருக்காங்களா?'

'ஏன் சார்! நிறுத்தி வெச்சிருக்கேன். என்ன வேணும்?'

'எனக்குத் தலைவலி. ஆஸ்பிரின் வேணும்.'

'என்கிட்ட இருக்கு சார்.'

'ஈஸ்வரன் வந்தாரா?'

'இல்லை, சார்.'

'அவருக்கு ஒரு தந்தி கொடுத்துடு... டூரை முடிச்சுண்டு உடனே வரும்படி. அவரோட ஒரு டிஸ்கஷன் பண்ணணும்.'

மறு நாளைக்கு மறுநாள்தான் அந்தச் செய்தி வந்தது. அணைக்கட்டின் காட்ச்மெண்ட் பகுதியில் ஒரு உடல் மிதந்து கொண்டிருந்ததாகவும், அதை படகு வைத்துக் கரை சேர்த்ததாகவும், உங்கள் ஆபீஸைச் சேர்ந்த ஈஸ்வரனாக இருக்கலாம் என்று நம்பப்படுவதாகவும், உடனே அடையாளம் கண்டுபிடிக்க உறவினர்களுடன் வர வேண்டும்...

'ஓ மை காட்! இட்ஸ் நாட் ட்ரூ! இட் காண்ட் பி மைத்ரேயி?'

மைத்ரேயி உடனே அழ ஆரம்பித்தாள்.

'காம் யுவர்செல்ஃப் மைத்ரேயி. அவராக இருக்காது. ஈஸ்வரன் வீடு எங்கே இருக்கிறது தெரியுமா?'

'ராஜாஜி நகர்' என்று விசும்பினாள்.

'வீட்டில் யார் இருக்கா?'

'ஒரே ஒரு பெண் சார்.'

'வா மைத்ரேயி. உடனே அவளைப் பார்த்து கலவரமில்லாமல், பயப்படுத்தாமல் அழைத்துச் செல்லவேண்டும். எனக்கு வீட்டைக் காட்டுகிறாயா?'

ராஜாஜி நகரின் முதல் பிளாக்கில் சரிந்த ஒரு தெருவில் பெட்டி பெட்டியாக இருந்த வீடுகளில் ஒன்றில், கம்பெனி கார் நின்றது.

வாசலில் இருபது வயது மதிக்கக்கூடிய ஒரு பெண் படியில் உட்கார்ந்துகொண்டு, பத்திரிகை படித்துக்கொண்டிருந்தாள். காரைப் பார்த்ததும் 'அத்தே, அப்பா வந்தாச்சு' என்று எழுந்தாள். மைத்ரேயி முதலில் இறங்கி, 'ஹலோ ரேவதி' என்றாள்.

'அப்பா வரலை?'

'இல்லை ரேவதி. இது மிஸ்டர் விக்ரம். அப்பாவுக்கு பாஸ்.'

'வாங்க சார். அப்பா வரலை? அத்தை, அந்த சேரைக் கொண்டுவந்து போடு.'

விக்ரம் அந்த ரேவதியைப் பார்த்தான். பாவாடை தாவணி அவளுக்குப் பொருத்தமாகவே இருந்தது. அழுத்தமான மூக்கு மட்டும் ஈஸ்வரனை ஞாபகப்படுத்தி வயிற்றில் பயப்படுத்தியது. முகத்தின் மற்ற அமைப்புக்கள் அவள் அம்மாவாக இருக்க வேண்டும். நல்ல நிறமாக இருந்தாள். உதடுகள் நிரம்பி வழிந்தன. கண்களில் பெரிதாக மை. சின்னப் பெண் நடத்தைகளை லேசில் விட்டுவிட இஷ்டமில்லாத இருபது வயசுப் பெண்.

'ரேவதி. நான் சொல்றதைக் கொஞ்சம் கவனமாகக் கேக்கறியா?'

'என்ன?' என்றாள் சந்தேகமாக.

'இப்ப எங்ககூட நீ சிவசமுத்திரம் வரணும்.'

'ஏன்?'



'உங்கப்பாவுக்கு உடம்பு சரியாயில்லைன்னு ஆபீஸ்ல தகவல் வந்திருக்கு.'

'என்ன உடம்பு?'

'சரியாத் தெரியலை.'

'இப்பவே கிளம்பணுமா?'

'இப்பவே கிளம்பினா நல்லது.'

'அத்தை, நீ இருக்கியா, நான் போய்ட்டு வந்துடறேன்.'

'அய்யோ என்னால தனியா இருக்க முடியாதுடி கண்ணு.'

'அத்தையும் கூட வரது நல்லது ரேவதி.'

'அத்தையும் கூட வரது நல்லது ரேவதி.' என்று

'என்னமோ சொல்றாளே, அத்தை எனக்குப் பயமா இருக்கு.'

'பயப்படாதேம்மா. நாங்கள்ளாம் எதுக்கு இருக்கோம்? அப்படி ஏதாவது ஆனாலும் ஆர்கே கம்பெனியில் அத்தனை பேரும் உனக்குப் பக்கபலமாக இருப்போம்மா.'

'அப்படி ஏதானும் ஆயிருக்கா? ஆயிருந்தாச் சொல்லிடுங்கோ சார், உங்களுக்குப் புண்ணியம் உண்டு.'

'தெரியலைம்மா. ஒண்ணும் தெரியலை. கிளம்புங்க. சீக்கிரம் இருட்டறதுக்குள்ள போய்ச் சேர்ந்துட்டு உங்கப்பாவைப் பார்த்துடணும்.'

இரண்டு தினங்களுக்கு முன் சென்ற அதே பாதையில் செல்
கிறான். எத்தனை வித்தியாசம்? கடவுளே, அப்பனைக் கொன்று
விட்டு, மகளை அழைத்துப்போய்க் காட்டக்கூடிய அளவுக்கு
அத்தனை கல்லாகி விட்டதா நெஞ்சு? இல்லை. இல்லை.
மரத்துப் போய்விட்டது. இந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் அவனை
அறியாமல், ஸ்பர் ஆஃப் த மொமெண்ட் என்பார்களே, அந்த
வகையில் தற்செயலான விபத்து நிகழ்ச்சிகள். அவர் காலை
வாரும் அந்தக் கணம்வரை அவனுக்கு அவரைக் கொல்லும்
உத்தேசம் இருந்திருக்கவில்லை. திடீரென்று சுவாமி அல்லது
சைத்தான் அவனுக்கு ஒரு வழி காட்டி, அவன் அந்த வழியே
செலுத்தப்பட்டான். செலுத்தப்படுகிறான்.

ரேவதியைப் பார்த்தான்.

அவள்பால் எல்லையில்லாத இரக்கம் ஏற்பட்டது. விபத்தில் மற்றொரு விதத்தில் அகப்பட்டுக்கொண்டவள் இவள். ஈஸ் வரனைக் காப்பாற்ற முடியவில்லை. இவளைக் காப்பாற்றலாம். இந்த துக்கத்தை முதலில் இவள் சமாளிக்கட்டும். அதன்பின் பரிகாரம் தரலாம். என் குற்றத்துக்குப் பிராயச்சித்தமாக இந்தப் பெண்ணைக் கரையேற்றலாம்.

கார் அணைக்கரையை நெருங்கும்போது மேற்கே சூரியன் இறந்திருந்தான்.

போலீஸ் அவுட்போஸ்ட்டுக்குப் போனார்கள்.

'எடுத்துட்டுப் போய் ஆஸ்பத்திரி மார்ச்சுவரியில் வெச்சிருக் காங்க, இது யாருங்க, பெண்ணா?'

'ஆமாம்!'

ரேவதி, 'அப்பா, அப்பா!' என்று அழத் தொடங்கினாள்.

'நான் மாட்டேன். நான் வரமாட்டேன். அவருக்கு என்னமோ ஆய்டுத்து. நீங்கள்ளாம் மறைச்சு வெக்கறிங்க.'

'ரேவதி, ரேவதி, காம் யுவர்செல்ஃப் ரேவதி. உனக்கு நாங்கள் ளாம் இருக்கோம். நான் இருக்கேன்!'



# 7

ஆர்கே திரும்பி வந்ததும் அவருக்குச் செய்தி விமான நிலையத்திலேயே தெரிவிக்கப்பட்டது. ஒரு கணம் ஸ்தம்பித்து, 'என்னய்யா சொல்றே' என்றார்.

விமான நிலையத்தின் லவுஞ்சில் அப்படியே உட் கார்ந்து விட்டார்.

'உங்களுக்கு வெளிநாட்டில் தகவல் குடுத்து, அனாவசியமாக....'

'பரவாயில்லை, சொல்லு, எப்படிச் செத்தார்?'

'தண்ணில விழுந்துட்டார்.'

'என்னது விபத்தா?'

'சரியாத் தெரியலை. போலீஸ் என்னவோ தற்கொலையா இருக்கும்னு நம்பறாங்களாம். பாராபெட் சுவர்ல ஏறிப் பைத்தியக்காரத்தனமா நடந்துகொண்டிருந்தாத்தான் அந்த மாதிரி விபத்து நிகழலாம்கறாங்க.'

'தற்கொலையா? இம்பாஸிபிள்! அந்த ஆள் அப்படிப் பட்ட ஆள் இல்லை. அவருக்கு என்ன குறை? ஒண்ணும் இல்லை. சாத்தியமே இல்லை. ஏதாவது ஃபவுல் ப்ளேயா இருக்கும். விக்ரம்... இதைப்பத்தி நான் போலீஸ் சூப்ரண்டை கேக்கறேன்...'

'நான் எல்லாத்தையும் பாத்துக்கறேன் சார். அப்படி ஏதாவது ஏறுமாறா நிகழ்ந்திருந்தா அதைக் கண்டு பிடிக்கவேண்டிய பொறுப்பு என்னது.'

'ஈஸ்வரன் போய்ட்டாரா! நம்பவே முடியலைய்யா... என்கூட ஆரம்ப காலத்தில் இருந்து இருந்தவர். ரொம்ப நேர்மையான, அந்தக் காலத்து மனுஷன். பி.எஃப். கிராச்சுட்டியெல்லாம் தீர்த்து வெச்சுட்ட இல்ல?'

'எல்லாம் ஆச்சு சார். நானே பர்ஸனலாப் பாத்து உடனே பைசல் பண்ணிட்டேன். சார், அப்புறம் அவருக்காக இன்னிக்கு ஆபீஸ்ல ரெண்டு மணிக்கு ஒரு கண்டோலென்ஸ் மீட்டிங் ஏற்பாடு பண்ணியிருக்கேன் சார்.'

'கட்டாயம் வரேன்?'

'இன்னொரு சின்ன விஷயம்.'

'என்ன?'

'அவருக்கு ஒரே ஒரு பெண். கிராஜுவேட். அவளுக்குக் கம்பெனியில் வேலை கொடுக்கலாம்னு உத்தேசிச்சிருக்கேன். உங்க அனுமதி வேணும்.'

'தாராளமாச் செய்ய வேண்டியது இது. விக்ரம், இந்த மாதிரி வெல்ஃபேர் சம்பந்தப்பட்ட விஷயங்கள் ரொம்ப முக்கியம். இதை நீ இவ்வளவு தூரம் பொறுப்புணர்ச்சியோட செய்யறதில எனக்கு ரொம்ப சந்தோஷம். இதையெல்லாம் பாத்துட்டு மத்த எம்ப்ளாயிஸ்களுக்கு கம்பெனி விசுவாசம் அதிகமாகும். சபாஷ். ரொம்ப நல்லா எல்லாத்தையும் கத்துகிட்டே. நீ இப்ப ஒரு பரிபூரண டைரக்டர். இன்னும் கொஞ்ச நாள் பொறு.'

அனுதாபக் கூட்டத்தில் ஆர்கே முதலில் பேசினார். 'ஈஸ்வரனை நான் முதல்ல சந்திச்சது 1958-ல்...' என்று ஆரம்பித்து அவர் கம்பெனியுடன் கழித்த பல வருஷங்களில் அவர் சம்பந்தப்பட்ட முக்கிய நிகழ்ச்சிகளை வரிசைப்படுத்தினார். அவர் நேர்மை, பக்தி, ஒழுக்கம் எல்லாவற்றையும் சிலாகித்துவிட்டு, 'இப்படிப் பட்ட மனிதர் இப்படி இறந்தார் என்றால் நம்ப முடியாததாக இருக்கிறது. தற்கொலை செய்துகொள்கிற அளவுக்கு அவருக்கு என்ன சோகம் இருந்தது என்பது என் வாழ்க்கையில் எப்போதும் ஒரு பெரிய விந்தைக் கேள்விக் குறியாக இருக்கும். இதிலிருந்து மனித மனத்தை நாம் பரிபூர்ணமாக அறிந்து கொள்ளவே முடியாது என்பதுதான் பாடம்' என்றார்.



பின் பேசின விக்ரம், 'ஈஸ்வரனின் வாழ்க்கையில் எல்லோ
ருக்கும் பாடம் இருக்கிறது. அவரிடம் இருந்த சில பிடிவாத
குணங்கள் எனக்குப் பிடிக்கவில்லை. இருந்தும் அவர்
பிடிவாதங்கள் அனைத்தும் கம்பெனியின் நலன் என்று அவர்
கருதிய விஷயங்களுக்குத்தான். இதனால் அவர் சுயநலமற்றவர்
என்பதில் எவருக்கும் சந்தேகமில்லை. சர்வீஸில் இருக்கும்
போதே மரணமடைந்தவர்களின் குடும்பத்தைச் சரியாகப்
பாதுகாப்பது நம் கம்பெனியின் முக்கியமான பொறுப்பாகும்.
இந்தச் சம்பிரதாயத்தை நிறுவிய பெருமை நமது மதிப்புக்குரிய
ஆர்கே அவர்களையே சாரும். சம்பிரதாயத்தை விட்டுக்
கொடுக்காமல் திரு. ஈஸ்வரனின் குடும்பத்துக்குச் சட்டப்படி
தரவேண்டிய பணங்களை உடனே கொடுப்பதுடன் மற்றொரு
சலுகையையும் தர ஆர்கே அவர்கள் சம்மதித்திருக்கிறார். அவர்
மகளுக்கு கம்பெனியில் ஒரு வேலை தர இசைந்திருக்கிறார்.'

எல்லோரும் கை தட்டினார்கள். 'கம்பெனியின் நலனுக்காகக்
கடுமையாக உழைத்த நம் ஈஸ்வரனின் குடும்பத்துக்கு நாம் தரக்
கூடிய சிறு ஞாபகார்த்தப் பரிசு இது. இந்தத் தினம் அவர்
ஆத்மசாந்திக்கு இரண்டு நிமிஷம் மௌனமாக இருப்போம்.'

எல்லோரும் அப்படியே நின்றார்கள்.

விக்ரம் காரிலிருந்து இறங்கி வந்து ஈஸ்வரனின் வீட்டுக் கதவைத் தட்டுவதற்கு முன்னமேயே ரேவதி திறந்துவிட்டாள்.

'வாங்கோ' என்றாள். சமீபத்திய அழுகையினால் கண்கள் சிவந்திருந்தன.

'என்ன ரேவதி, மறுபடியும் அழ ஆரம்பிச்சிருக்கியா? நான் என்ன சொன்னேன்?'

ரேவதி தரையைப் பார்த்துக்கொண்டு லேசாகச் சிரித்தாள். உடனே, அப்படிச் சிரித்தது மஹா பாவம் என்பதுபோல் சட்டென்று நிறுத்திக்கொண்டு தீவிரமானாள்.

'ரேவதி, அத்தை எங்கே?'

'ராம மந்திர் போயிருக்கா.'

'ரேவதி, சும்மா வீட்டில் உக்காந்துக்கிட்டு ப்ரூட் பண்ணிண்டு இருக்கக்கூடாது. உங்கப்பா ஆர்கே ஸ்தாபனத்துக்கு இவ்வளவு

நாள் இவ்வளவு சின்ஸியரா உழைச்சதுக்கு நன்றி சொல்ற விதத்தில் உனக்கு ஒரு வேலை கொடுக்கறதா மேனேஜ்மெண்ட் தீர்மானிச்சிருக்கு. அந்தச் சந்தோஷமான செய்தியை உங்கிட்ட பர்ஸனலாச் சொல்லறதுக்கு நானே நேர வந்திருக்கேன்.'

ரேவதி நிமிர்ந்தாள். கண்களில் கண்ணீர்த் திரை தயாராக இருந்தது.

'ரொம்ப நன்றி சார். அந்த அதிர்ச்சி நாட்களில் நீங்கள் கூடவே இருந்து தைரியம் சொல்லி ஒவ்வொரு ஸ்டேஜ்லயும் எனக்கு ஆறுதல் சொல்லலைன்னா நான் அப்பவே அப்பாகூடச் செத்துப் போயிருப்பேன்!' புடைவையெல்லாம் பரபரவென்று நனைய அழுதாள்.

'ரேவதி, ப்ளீஸ் அழக் கூடாது. அழுதது போதும். இட்ஸ் ஆல் ஓவர். அவர் போனது முடிஞ்சுபோன சகாப்தம். மறக்க வேண்டிய, மறந்தாக வேண்டிய சகாப்தம்.'

'எப்படி சார் மறக்க முடியும்?'

'கமான்! வாழ்க்கையில் நிகழ்ந்த விபத்துன்னு வெச்சுக்க. அழற தால ஒரு லாபமும் இல்லை.'

'சார், ஏன் சார், எதுக்காக சார் எங்கப்பா தற்கொலை பண்ணிக் கிட்டார்?'

'தெரியலை ரேவதி. அது கொஞ்சம் மர்மமாகத்தானே இருக்கு.'

'ஏதாவது காரணம் இருக்கும் இல்லையா? ஆபீஸ்ல ஏதாவது தப்பு பண்ணிட்டாரா?'

'சேச்சே அதெல்லாம் இல்லை!'

'காரணம் இருந்தாச் சொல்லிடுங்க, சார்!'

'அப்படி ஏதும் கிடையாது. ஹிஸ் ரெகார்ட் வாஸ் ஃபால்ட்லஸ்!'

'ஏன் ஏன் ஏன்னு என் மண்டை குழப்பறது!'

'வாழ்க்கைல சில ஏன்களுக்குப் பதில் கிடைக்காது. ரேவதி, எனக்கென்னவோ அது ஒரு ஆக்ஸிடெண்டுன்னுதான் தோணுது. ரேவதி, அதைப் பத்திப் பேசவேண்டாம். உன்னைப் பத்திப் பேசலாம். நீ என்ன படிச்சிருக்கே?'



'பி.எஸ்ஸி.'

'தெரியும். என்ன சப்ஜெக்ட்?'

'பாட்டனி. அப்பா அதுக்கப்புறம் எம்.எஸ்ஸி படிக்கச் சொன்னார். இந்த வருஷம் சேரலாம்னு இருந்தேன். அப்பா என் கல்யாணத்துக்காகச் சேத்து வெச்சிருக்கார். என்ன என்னவோ பாலிஸி, ஃபிக்ஸட் டெபாஸிட்டுன்னு. இந்த வருஷம் முடிச்சுடறதா பிளான் போட்டிருந்தார்.'

'உனக்கு இந்த வேலைல சேர இஷ்டம்தானே?'

'எனக்கு ஆபீஸ் வேலை ஒண்ணுமே தெரியாது, சார்.'

'அதெல்லாம் ட்ரெய்ன் பண்ணிடுவோம். டைப்பிங் ஏதாவது தெரியுமா?'

'தெரியாது.'

'பரவாயில்லை. ஒண்ணு பண்ணுவோம். உன்னை முதல்ல டெஸ்பாட்ச் செக்ஷன்ல போடச் சொல்றேன். அங்கதான் ஒர்க் கொஞ்சம் சுலபமாக இருக்கும். அங்க உன் ப்ராக்ரஸ்ஸைப் பார்த்துண்டு மேற்கொண்டு வேற டிப்பார்ட்மெண்டுக்கு ஷிப்ட் பண்ணிக்கலாம். என்ன?'

'நீங்க எனக்குச் செஞ்ச உதவிக்கு என்ன கைம்மாறு செய்யப் போறேன்னே தெரியலை.'

'எல்லாம் கடமைம்மா. கம்பெனில இருந்து லெட்டர் வரும். ஒண்ணாந்தேதி வந்து ஜாயின் பண்ணு. என்ன, நான் வரட்டுமா?'

'கொஞ்சம் இருங்க சார். காபி போட்டுக் கொண்டுவரேன்.'

'இனிமேத்தான் காபியா? சரிதான்! எனக்கு நேரமில்லை. அப்புறம் சாவகாசமாக வரேன்.'

'ப்ளீஸ் ஒரு நிமிஷம்! தோ அத்தைகூட வந்துட்டா. அத்தை, விக்ரம் சார் வந்திருக்கார். சட்டுனு காபி போட்டுக் கொண்டு...'

'வேண்டாம் ரேவதி. இத பாரு. ஒண்ணு வேணா செய்யலாம். ஒண்ணாம் தேதி என்ன, அத்தையம்மா இன்னிக்கு நாள் நல்லா இருக்கில்ல? என்கூட இப்ப ரேவதி ஆபீஸுக்கு வரட்டும். சில

ஃபார்மாலிட்டி எல்லாம் இருக்கு. அப்ளிகேஷன் ஃபார்ம் ஃபில் அப் பண்ணனும். உங்கப்பாவுக்கு ஒரு அரியர்ஸ் செக் பாக்கியிருக்கு. எல்லாத்தையும் முடிச்சுண்டு நானே கொண்டு வந்து விடறேன். வா ரேவதி.'

'போய்ட்டு வாம்மா. ஒரு மாசமா வீட்டிலேயே அடைஞ்சு கிடந்தது போதும். பளிச்சுனு ஏதாவது கட்டிண்டு கிளம்பு. போறப்போ அனுமார் கோவிலுக்கு ஒரு நடை போய்ட்டு வந்துடு. ஏதோ வழி காட்டியிருக்காரே!'

'வழி காட்டினது அனுமார் இல்லை, அத்தை! இவர்தான். விக்ரம் சார்தான்.'

'ஏதோ நல்லபடியாக தீர்க்காயுசா இருப்பா.'

ரேவதி புடைவையை மாற்றிக்கொண்டு வந்ததும் முதல் முறையாக அவள் துக்கம் குறைந்த நிலையில் சற்று வசீகரமாக உடுத்திக்கொண்டிருப்பதைப் பார்த்தான். அவள் ஏறக்குறைய தன் உயரம் இருப்பதைக் கவனித்தான். நெற்றிப் புருவங்களுக்கு நடு மத்தியில் சின்னதாகப் பொட்டு. பவுடரின் அவசரத் தீற்றல். ஸாரி, ரவிக்கை இரண்டும் மாற்றிக்கொண்டு இடது கையில் ரிஸ்ட் வாட்ச் அணிந்துகொண்டு, 'போலாமா சார்?' என்றாள்.

காரின் பின் சீட்டில் உட்கார்ந்துகொண்டாள். கண்ணாடி வழியாக ஒரு முறை அவள் மார்புச் சேலையைச் சரி செய்து கொள்வதைப் பார்த்தான்.

'முதல்ல அனுமார் கோவில் போயிடலாம் சார். ஒரு அஞ்சு நிமிஷம், இஃப் யு டோண்ட் மைண்ட். போகலைன்னா அத்தை வருத்தப்படுவா!'

'தாராளமா.'

மஹாலட்சுமி லே அவுட்டில் இருந்த குன்றின் மேல், பக்கவாட்டில் நின்றுகொண்டிருந்த பிரம்மாண்டமான ஆஞ்சனேயரின்முன் அவள் கண்களை மூடிக்கொண்டு பிரார்த்திக்கும்போது அவளை முழுவதும் தரிசித்தான் விக்ரம். பாதங்களின் அருகில் உள் பாவாடை பார்டர் கொஞ்சம் தெரிந்தது. குன்றின் உயரக் காற்றினால் இடுப்புடன் ஒட்டிக் கொண்டிருந்த ஸாரி அவள் தொடைகளின் அமைப்பைக் காட்டியது. ரவிக்கைக்குக்கீழ்



தெரிந்த ஸாம்பிள் அவள் உள்ளுக்குள் எவ்வளவு சிவப்பாக இருப்பாள் என்று கோடி காட்டியது. அவள் மார்பகங்கள் ஆரோக்கியமாக இருந்தன. ப்ரொஃபைல் வடிவத்தில் தெரிந்த நேரான மூக்கும் கழுத்து வளைவும் நெற்றியும் தாராளமும்... மை காட்!

விக்ரமுக்கு ஷாக் அடித்ததுபோல் அந்த ஆசை தொட்டது. நான் செய்த காரியத்துக்குப் பிராயச்சித்தம் இந்த சன்னிதானத்தில் கிடைத்துவிட்டது. ஆம். இவள்தான் என் மனைவி. இவளை நான் அடைந்து இவள் அப்பாவுக்குக் கொடுத்த தண்டனைக்கு இவளைப் பூப்போல வைத்துக்கொண்டு, இவளுக்குத் தரும் சந்தோஷத்தின் மூலம் இவளுள் நான் புகுந்து, இவள் அப்பாவின் மறு வடிவத்தை சிருஷ்டிப்பதன் மூலம், பரிகாரம் தேட வேண்டும். அதுதான் இனி என் குறிக்கோள். ஆஞ்சனேயரைப் பார்த்தான். தெய்வ சன்னிதானத்தில் எனக்கு இந்த முடிவு திடீரென்று தோன்றியதில் ஒருவிதமான அமானுஷ்ய சக்தி இருக்கிறது. தெய்வமே! ஈஸ்வரன் என் பாதையில் குறுக்கிட்டதை நான், நீ ஏற்படுத்திக் கொடுத்த விபத்து என்றுதான் நம்புகிறேன். அவர் ஏன் என் ரெக்கார்டுகளைக் கிளறவேண்டும்? ஏன் கண்டுபிடிக்க வேண்டும்? அதைவிட, எதற்காக அந்தச் சமயம் பார்த்து டூர் போகவேண்டும்? எதற்காக அந்த ஜலப் பரப்பின்முன் தனியாக நின்றுகொண்டிருக்க வேண்டும்? எனக்காகக் காத்திருந்தவர் போலல்லவா நின்றுகொண்டிருந்தார்! எனக்காகவா? உனக்காகவா? அந்தக் கணம்வரை எனக்கு அந்தக் கொல்லும் எண்ணமே இல்லையே? திடீர் என்று தோன்றியது உன் செயல்தானே? நான் இதில் கருவிதானே?

இப்போது ஈஸ்வரன் பெண்ணை என் பொறுப்பில் ஏற்றுக்கொள்ளச் சந்தர்ப்பம் கொடுத்திருக்கிறாய். ஏற்றுக்கொள்ளப் போகிறேன். கடவுளே! அவளை நான் ஆட்கொள்கிறேன். நான் கடவுளின் தூதன்; இல்லை, நான் கடவுளின் அம்சம். நானே அவன்தான். அழிக்கிறேன், காக்கிறேன்.

விக்ரமுக்கு இப்போது நிம்மதியாக இருந்தது.

ரேவதியை டெஸ்பாட்சில் போடவேண்டாம். என் ஆபீஸிலேயே எனக்கே அஸிஸ்டெண்ட்டாக ஏற்றுக்கொள்கிறேன். அப்போதுதான் எனக்கு அவளை அடிக்கடி பார்க்கச் சந்தர்ப்பம் கிட்டும். பார்த்து... பழகி... பேசி...

ஓ! வாழ்க்கை என்ன அற்புதமானது!

ரேவதி கண்ணை மூடிக்கொண்டு தியானத்தில் இருந்தாள்.

‘ஆஞ்சனேயா! தெய்வமே! என் அப்பா எப்படி இறந்தார் என்று கண்டுபிடிக்க எனக்கு உதவு. அந்தக் கேள்வி, என்னுள் விடை கிடைக்காமல் இருக்கும்வரை எனக்குத் தூக்கமில்லை. நிம்மதி இல்லை. இந்த ஆபீஸில் என்னவோ நடந்திருக்கிறது. ஏதோ ஒரு விரோதம். ஏதோ ஒரு சிக்கல். ஏதோ தெரியக்கூடாதது அப்பாவுக்குத் தெரிந்துபோய் அவர் பலியாகியிருக்கிறார். இதை என் உள்ளுணர்வு சொல்லுகிறது. அதைக் கண்டுபிடிக்க எனக்குத் தக்க பலத்தையும் சாகசத்தையும் தா. தக்க மனிதர்களிடம் என்னைச் சேர்த்து வை. அந்த ஆபீஸுக்குள் நடந்தது என்ன என்று கண்டுபிடிக்க எனக்கு உதவு. தெய்வமே! நான் அதனுள் வேலை ஏற்றுக்கொண்டு செல்லப்போவது இதற்குத்தான். பழி வாங்க! இதற்குத்தான்! இதற்குத்தான்!’

‘போகலாமா, ரேவதி?’ என்றான் விக்ரம்.

‘போகலாம். நான் தயார்.’